Registered as a News Paper in Sri Lanka
පක்கம் 24 ரூபா 16/50
செப். 23 - 29, 2004
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 581



பாலாவின் இயக்கத்தில் அஜித்

சர்வதேசத்தின் கண்டனமும் தொடரும் படுகொலைகளும்


கமலுக்கு அடுத்து விக்ரமா?

குண்டுதாரியை அழைத்து வந்தவரின் மன்னிப்புக் கடிதம்

மலையகத்திலிருந்து ஜனாதிபதிக்கு மடல்

மீண்டும் துளிரும் சமாதான முயற்சிகள் சாத்தியமா?

# ஆன்மீகம்



## வல்வினை அறுப்போம்

இறைவனுடைய திருவருளை முழுமையாகப் பெறும் தவமுடையோர் வல்வினையை அறுத்திடுவர். அவரிடம் ஞான வாள் இருப்பதனால் இயமனுக்குக்கூட அஞ்ச வேண்டியதில்லை. இறை வழிபாடு செம்மையாகச் செய்யும் அடியார்கள். சனி போன்ற கோள்களைக் கூட அஞ்ச வேண்டியதில்லை. சனிக் கிரகத்தை பகவான் எனக் கற்பனை செய்து வணங்க வேண்டியதும் இல்லை. மலர்ப்பாதம் தரும் கடவுளை மட்டும் திரிகரண சுத்தியுடன் வழிபட்டால் போதும். கோளும் வினையும் கொடுக்கும் பலன்களை அறுத்தெறிந்து விடலாம் எனத் திருமூலர் தெளிவுபடுத்துவதைப் பயின்றுவாருங்கள்.

ஆகும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாரு மனத்தொடும் வைத்தொழிந் தேனே!

ஊழுக்கும் கோளுக்கும் அஞ்சாத ஆத்ம வீரர்களே மெய்யடியார்கள். அவர்களையே போற்றி அவர்களுடைய வழிகாட்டுதலின்படியே நாம் நடக்கக் கடவோம். மேற்குறித்த திருமந்திரம் தோத்திரமாக உள்ளது. இறை வழிபாடு செய்யும்போதெல்லாம் அதை அடியார்கள் தினமும் பாராயணம் செய்தல் நன்றாகும். பாராயணம் செய்தால் மட்டும் போதாது. அதற்குத்தக நிற்கவும் பயிலுதல் வேண்டும்.

-திருமூலர் நூலிலிருந்து.

## ஆணவம் அழியட்டும்

கடவுளின் ஆலயம் வஞ்சகர்களின், கள்வர்களின் வீடாக மாற்றப்பட்ட நிலையை இயேசு கண்டு கொதித்தெழுந்து கயவர்களை, வஞ்சகர்களை விரட்டியடிக்கும் செயலை மாற்கு 11:15-17 சுட்டி காட்டுகின்றது.

இழிந்த சமூகத்தை மாற்ற, அடக்கி ஆள்பவர்களின் வரட்டுப் போக்கை அழிக்க வாளையே கொண்டுவந்தேன் (மாத்தேயு 10:36) அழித்து ஒழிக்க தீயை மூட்ட வந்தேன் (லூக்கா 12:48-51) என இயேசு கூறுகிறார். இவர் அதிகார ஆதிக்கத்தை அழிக்க வந்த சமூக செயற்பாட்டாளர்.

இத்தகைய போக்கின் மூலம் சமூகத்தில் அடிமட்ட மக்களின் இழிநிலைக்கு விடுதலையைக் கொண்டுவரவில்லை. இதற்கு மேலாக அடக்கி ஆளும் அதிகார சக்திகளின் ஆணவக் கொள்கைகள், செயற்பாடுகள் இவற்றை மாற்றியமைக்க இயேசு செயற்படுகிறார்.

இயேசுவைப் போல் சமூக செயற்பாட்டாளராக நாமும் மாறுவோம்.

எமது நாட்டையும் மாற்றுவோம்.

-க.நிசாந்தன் ஸ்ரீபன், கண்டி.

## இஸ்லாம் கூறும் நற்குணம்

இஸ்லாம் விரும்பும் செயல்கள் யாவும் எப் பண்பினால் வெளிவருகின்றனவோ அப் பண்பு நற்குணமாகும். இறுதிநாளில் ஒரு மு.'.மினுடைய நன்மைத் தட்டில் வைக்கப்படக்கூடிய மிகப் பாரமான நற்கிரியை நற்குணமே.

ஆதாரம் : அபூதாவூத்.


இந்த நற்குணத்தை நாம் எவ்வாறு பெறலாம். அன்பு, அடக்கம், ஆடம்பரமின்மை, இறையச்சம் இன்னோரன்னவற்றின் மூலம் அடைந்துகொள்ளலாம்.

நற்குணம் சந்தோஷமான சமூக வாழ்வுக்கு மட்டுமல்லாது நிம்மதியான ஆத்மீக ஈடேற்றத்துக்கும் இன்றியமையாதது.

நல்லொழுக்கம் நற்குணத்தின் பிரதிபிம்பமே. நற்குணமுடையோர் நல்லொழுக்கச் சீலர்களே. அகிலமும் அவர்களைப் போற்றும், அல்லாஹ்வும் இவர்களை நேசிக்கின்றான். இஸ்லாம் கூறும் நல்வழிகள் துர்க்குணத்தைத் தூர வீசி, நற்குணத்தை நம் வாழ்வில் இயல்பாக்கின்றது.

—எம்.சி.கலீல், கல்முனை – 05.

## கவிதைப் போட்டி இல.578



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

பரிசுக்குரிய கவிதை

### பூட்டு?

உதடுகளைப்
பூட்டினாலும்
உடைப்பெடுக்கும்
உணர்வுகளை
உள்ளடைத்து
வைப்பதற்கு
உலகினில்
உள்ளதோ ஒரு பூட்டு?

-ரேணுகா றிபாய்தீன்,
ஏறாவூர் - 02.

### புதிய சட்டம்

சமாதானத்திற்கும்
ஜனநாயகத்திற்குமாய்....
குரல் கொடுத்தாயா...?
- இல்லை
அநீதிக்கெதிராய்
கோஷமிட்டாயா...?
ஏன் உனக்குத் தெரியாதா....?
இவைகள்தான்
தற்போதைய நாட்டின்
தண்டனைக்குரிய
குற்றங்களென்று....?

—எம்.எம்.மிஃப்ராஸ், தில்லையடி.

### சுவாசிக்க...

மாற்றுத் கருத்துரைத்த
மறுகணமே மரணம்
வாழ விரும்பினால் மூக்கினால்
மட்டும் சுவாசி
வாயைத் திறக்காதே.

—சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### எண்ணம்!

இருபத்திரண்டு
ஆசனம் பெற்றும்
இஷ்டப்படி
பேச முடியாது
கஷ்டப்படும்
கூட்டமைப்பு
எம்.பிக்களின்
நிலையும்
மறைமுகமாக
இப்படித்தான்
இருக்குமோ - என
எண்ணத் தோன்றுகிறது!

—சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி - 03.

### முடியாது

யாரப்பா இந்த வாய்க்கு சிப்
போட்ட பாவி...
உரிமை இழந்ததை உடைமை
இழந்ததை
கூறக் கூட இவனுக்கு
வழியில்லையா?
வீசும் - புயல் காற்றைக் கூட
அடக்கிவிடலாம் - ஆனால்,
உள்ளக் குமுறல்களை அடக்கிவிட
முடியாது!

—கோ.மோகன், உவர்மலை.

### ஜாக்கிரதை!

பேசாதே நியாயத்தை! - தட்டிக்
கேட்காதே அநியாயத்தை!
துப்பாக்கிச் சன்னங்கள்
குறிபார்த்திருக்கு உன் தேகத்தை!
அக்கம் பக்கம் பார்த்து...
வாய்விடு வார்த்தையை!

—முகைசிரா முகைடீன், பாலையூற்று.

## கவிதைப் போட்டி இல.581



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 29.09.2004

கவிதைப் போட்டி இல.581
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பாருங்கள் இங்கே!

சிங்காரமாய் சிரித்து விளையாடிக்
கொண்டிருந்த தமிழினம்!
இன்று தன்னைத் தானே அழித்து
மரணத்தின் பிடிக்குள்
சிதைந்து போய்விட்டதே!

—நா.ஆர்த்தீபன், சங்கமன்கண்டி.

### வாய்ப் பூட்டு!

எத்தனை கொலைகள்
நடந்தாலும்
செய்தது யார் எனக்
கேட்காதே!
செய்தது யார் எனத்
தெரிந்தாலும்
மறந்தும் நீ வாய்
திறக்காதே
திறந்தால் நீ வாய்
மூடுமுன்
மரணம் உனக்கும்
மறக்காதே!

-அ.சந்தியாகோ, கண்டி.

### தடைச்சட்டம் - பெயர் "லிப்ஸிப்"

தற்போதைய பிரகடனம்
பேச்சுவார்த்தை தடைச்சட்டமோ?
அதன் அடையாளமாய் என்ன
லிப்ஸிற்கு ஸிப் அணிதலோ?
மூச்சுவிடவும் தடைச்சட்டம் வரலாம்
கப்சிப் ஆகவிருங்கோ!

—பூ.பிரதீபன், திருமலை.

### வாய்ப்பூட்டு

பயங்கர அழிவு தரும்
ஆயுதங்களை பதுக்கி
வைத்திருக்கிறார்கள்
என்ற பச்சைப் பொய்
பிரசாரக் கதையை
இனியும் வாய் திறந்து
பேசக் கூடாது
என்றோ இந்த
வாய்ப் பூட்டு.

—எஸ்.பி.பி.கணேஷ், தாண்டியடி.

### வாயடக்கிப் பேசு!

மாற்றுக்கருத்துக் கொள்ளாதே.
மனிதக் கொலைகளுக்கு
மனம் வருந்தாதே
பூமி புகழ் தலைவருக்குப் புகழ் பாடு
வீண் பேச்சுகளுக்கு வாய்ப்பூட்டு
மீறினால் வாய்க்குள் வரும் வேட்டு.

-வறோனி சில்வெஸ்டர், மூதூர்.

# உங்கள் பக்கம்


## தண்ணீரின்றித் திண்டாடும் தாண்டியடி மக்கள்! நல் இதயங்கள் இரங்குமா?

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய கிராமமாகிய தாண்டியடி கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் அடிப்படைத் தேவைகள் இன்றி மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள். அந்த வகையில் நீர், மின்சாரம், போக்குவரத்து, தொடர்பாடல், சுகாதாரம் போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றபோதிலும் மக்கள் மிகவும் முக்கிய பிரச்சினையான தண்ணீர் இல்லாப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நியாப் நிறுவனத்தினர் எமது கிராமத்தில் 3 இடங்களில் 3 குழாய்க் கிணறுகளைத் தோண்டினார்கள். அதில் இரண்டு கிணறுகளில் நீர் உள்ளதை அறிந்து குழாய்கள் பொருத்தப்பட்டன. ஆனால் இதுவரை நீர் விநியோகிக்கப்படவில்லை. எமது கிராம மக்கள் குழாயின் மீது விழிவைத்து நீருக்காகத் தவமிருக்கின்றார்கள். கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக நீர் வடிகால் அமைப்புக்குப் பல தடவை அறிவித்தும் எவ்வித பயனும் அளிக்கவில்லை. எனவே எமது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்த நீர் விநியோகத்தைப் பெற்றுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-பெ.சதீஸ்வரன், தாண்டியடி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள் - உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசக[ர்] சாலை



### தொடரட்டும்...

அன்புள்ளம் பொருந்திய
முரசே!
பெயரைப் போல தினந்தோறும்
வருவாய்
தினமுரசே!
நீ சமந்து வரும் ஆக்கங்கள்
யாவும் தரமானவை!
இலங்கையில் நடக்கும் தீய
சக்திகளின் திருட்டு
வேலைகளையும்
கபட விளையாட்டுக்களையும்
உடனே மக்களுக்கு எடுத்துக்
காட்டுகிறாய்! எனவே உன்
சேவை
மென்மேலும் தொடர
என் சார்பில் வாழ்த்துக்கள்.

—நாகமணி கவிசாந்தி,
சங்கமன்கண்டி.

### முரசு.....

இதழுக்கு இதழ் இதமளித்து
இனிமையான அம்சங்களை
இதமாகத் தரும்
இன்ப முரசே!
உனது இதழ் 577..சொல்லவே வேண்டாம்.
அரசியல் விடயங்கள் தொட்டு அத்தனை
அம்சங்களும் இனிமையே!
தகவல் பெட்டியில்..... கொடுக்கான்களை
வைத்து உணவை அலங்கரித்திருந்ததைப்
பார்த்த ஒரு கணமே மெய்சிலிர்க்க
வைத்தது.
தாயும் - சேயும் புகைப்படம் பார்த்தேன்.
தாயின் பாசத்துக்கு ஈடாக எது இருக்க
முடியும் என்பதை உணர்த்தி நின்றது.
முரசுக்கு நன்றிகள்.
தொடரட்டும் உன் இனிய சேவை.

—முஸம்மில், குவைத்.

### வியாழன் தோறும் மகிழ்விக்கும் என் இனிய தினமுரசே!

தூர இருக்கும் எங்களைத் தினமும் நாடி, நாட்டு நிலைமையை எமக்குப் புலப்படுத்துகிறாய். எங்கிருந்தாலும் உன்னை அன்புடன் அரவணைப்பதில் எமக்கு ஓர் ஆனந்தம்! தாய் நாட்டுச் செய்திகள் மற்றும் பயன் தரும் பல சுவையான ஆக்கங்களை எமக்கு வழங்கிவரும் உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

—ஆர்.மணிமாறன், அமெரிக்கா.

### தித்திக்கும் தினமுரசே!

உன்னுடைய ஒவ்வொரு ஆக்கமும் தரம்மிக்கவை. தினமும் அதனைப் படித்துப் பயன் பெறுகிறோம். காலத்தின் தேவை அறிந்து ஒவ்வொரு செய்தியையும் எமக்கு அவ்வப்போது தருவதில் உனக்கு நிகர் எதுவும் இல்லை. உன் சேவை தொடர்ந்து வளம்பெற என் வாழ்த்துக்கள்.

—எம்.நிர்மலன், பதுளை.

### வாழ்த்துக்கள்

சேற்றின் மத்தியில் மலர்ந்த செந்தாமரை போன்றும், முட்களின் நடுவே முளைத்த மோகன ரோஜா போன்றும், இன்று வாசக நெஞ்சங்களில் மலர்ந்திருக்கும் இனிய முரசே! கடந்த வார முரசில் உனைப் பாராட்டி வாசகர்சாலை என்ற பகுதிக்கு அனுப்பிய மடலினை வெளியிட்டிருந்தாய். நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நன்றி முரசே! இனிய முரசே! நீ வெற்றியெனும் பாதையில் பயணத்தைத் தொடர்கின்றாய். உன் வெற்றிப் பாதைக்கு முற்றுப்புள்ளி ஏது? முன்னேறு முரசே! உன் சேவை வளர்ந்து புகழ் பெருக வாழ்த்துக்கள் பல கோடி!

—கு.ஜெகசுதன், திருக்கோவில் – 02.



கடந்த 20ஆம் திகதி நோர்வே தூதரகத்துக்கு முன்னால் ஈ.பி.டி.பி.யினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

## புலிகளைச் சந்திக்கும் நோர்வே தூதுவர் மனிதர்களைச் சந்திக்கப் பயப்படுகிறார்!

புத்தளத்தில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தம்பித்துரை சிவகுமாரனின் (பவான்) பூதவுடல் தாங்கிய பேழையோடு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்னால் ஆயிரக் கணக்கான மக்கள் கடந்த 20ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சமாதான காலத்தில் புலிகள் நடத்தும் அராஜகக் கொலைகளைக் கண்டித்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நோர்வே தூதுவரிடம் மகஜரொன்றினை சமர்ப்பிக்க முற்பட்டபோது பெரும் இழுபறிநிலை ஏற்பட்டது. தனக்குப் பாதுகாப்பில்லையெனக் கூறிய நோர்வேயின் உதவித் தூதுவர் தூதரகத்துக்கு வெளியே வர மறுத்துவிட்டார். ஆயுதபாணிகளான புலிகளை வன்னிக்குச் சென்று சந்தித்துவரும் நோர்வேத் தூதுவருக்கு நிராயுத பாணிகளான எம்மைச் சந்திப்பதற்கு என்ன அச்சம்? என்று ஆர்ப்பாட்டப் பேரணிக்குத் தலைமைதாங்கிய தலைவர்கள் கேள்வி எழுப்பினர். வெளியே வந்து நிராயுதபாணிகளான எங்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக்கொள்ள தூதுவர் தயங்கினால் தூதராலய வாசலிலேயே பூதவுடல் தாங்கிய பேழைக்கு எரியூட்டப் போவதாக ஆர்ப்பாட்டக் காரர்கள் எச்சரித்ததோடு அதற்கான தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டனர். இதன் எதிரொலியாகப் தூதுவர், பொலிஸார், அதிகாரிகள் மூலம் சமரசம் பேசி மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

## இந்திய ரோந்துக் கப்பல்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறுவதற்கு இன்னமும் ஒரு சில வாரங்களே இருக்கும் நிலையில், இலங்கைக் கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கென ரோந்துக் கப்பல்களைப் புதுடில்லியிடமிருந்து இலங்கைக் கடற்படையினர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அருண் பிரகாஷ் இலங்கையின் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு இந்தியா உதவுமெனக் கூறியிருந்தமை குறிப்பிடத் தக்கது. ❒

# புலிகளுக்கு சமாதானத்தில் அக்கறை இல்லை! சாடுகிறார் தமிழ் விமர்சகர்

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் அக்கறையில்லை. அவர்கள் ஏதேதோ காரணங்களைக் கூறி சமாதானப் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கின்றனர் என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது அர்த்தமற்ற நொண்டிச் சாட்டு என்று இலங்கை ஜனநாயக அரங்கு என்ற அமைப்பின் பேச்சாளரான எஸ்.கதிர்காமநாதன் கூறினார். ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக பல முயற்சிகளையும் விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொண்டுள்ளார். தென்னிலங்கையிலுள்ள சிங்களத் தேசிய சக்திகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் புலிகளோடு பேசுவதற்கு ஜனாதிபதி தயாராகவே இருக்கிறார். புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்த ஜனாதிபதி அதனை அடிப்படையாக வைத்துப் பேசத் தயாரெனக் கூறித் தனது தளர்வுப் போக்கினை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், புலிகள்தான் முதலில் தன்னாட்சி அதிகாரசபை யோசனை பற்றிப் பேசி அதனை நிறுவ வேண்டுமென்று நிபந்தனை வைத்துள்ளனர் என்று கதிர்காமநாதன் சொன்னார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டுமானால் இரண்டு நிலைகளில் தடைகள் தாண்டப்பட வேண்டும். ஒன்று தென்னிலங்கைச் சக்திகள் மத்தியில் ஏகோபித்த நிலைப்பாடொன்று தோற்றுவிக்கப்பட வேண்டும். மற்றது புலிகளும் அரசும் உண்மையான விசுவாசத்தோடு நேர்மையாகப் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும். எந்த விடயத்திலும் நூற்றுக்கு நூறு வீதமான ஆதரவு கிடைப்பதில்லை. பெரும்பான்மையான சிங்களக் கட்சிகள் மற்றும் சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்காகவே தேசிய ஆலோசனைச் சபை மூலம் ஒரு முடிவுக்கு வர ஜனாதிபதி விரும்புகிறார். அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கூட பல விடயங்களில் விட்டுக்கொடுத்து வருகிறது. புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளல்லர். இடைக்கால நிர்வாகசபை' தேவையில்லையென்றெல்லாம் கூறிய ஜே.வி.பி.யும் ஈ.பி.டி.பி.யும் கூட பேச்சைக் குழப்ப விரும்பாமல் தளர்வுப் போக்கினைக் காட்டியுள்ளன இந்த நிலையில் நிபந்தனையை விதித்திருப்பதும் பேச்சுக்கு வர மறுத்து மரணப் பிடிவாதமாக நிற்பதும் புலிகளே என்றும் அவர் சொன்னார்.

இடைக்காலத் தீர்வுப் பொறிமுறை, இறுதித் தீர்வோடு தொடர்புபட்டிருக்க வேண்டுமென்றுதான் ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களும் தெரிவித்திருக்கின்றன. இந்த நிலையில் தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு விடாப்பிடியான தன்மையை விடுத்து, புலிகள் நெகிழ்ச்சித் தன்மையோடு பேச்சுக்கு வர வேண்டும். கள்ளனே கள்ளனைப் பிடியென்று கத்தும் கடைகெட்ட தந்திரத்தைப் புலிகள் பாவிக்கக் கூடாதென்றும் அவர் சொன்னார்.

## கிழக்கில் அறிவுறுத்தல்

கருணா அணியினரால் தம் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போராளிகள் அனைவரினதும் விவரங்களை அவர்களது பெற்றோர், பாதுகாவலர் அல்லது உறவினர்கள் தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனப் புலிகள் கிழக்கில் புதிய அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். இந்த விவரங்களைத் தம்மிடம் பதிந்துகொள்ளத் தவறுவோர் 'தேசத் துரோகிகளா'கக் கருதப்பட்டுத் தண்டனைக் குள்ளாக்கப்படுவார்கள் எனவும் அறிவித்துள்ளனர்.

## தமிழ் இளைஞர்களுக்கு ஜேர்மனியில் குடியுரிமை மறுப்பு

ஜேர்மனி, ஸ்டுட்கார்ட் பிராந்தியத்தில் ஜேர்மன் குடியுரிமை கோரிய பல தமிழ் இளைஞர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனவென்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகமென்ற அமைப்பைச் சேர்ந்தவர்களென இரகசியப் பொலிஸார் தெரிவித்த தகவல்களையடுத்தே இவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இந்த அமைப்பின் நடவடிக்கைகளில் இனிமேல் ஈடுபடமாட்டோமென்று எழுத்து மூலம் உறுதிசெய்து சத்தியக் கடதாசிகள் வழங்கிய 21 பேருக்குக் குடியுரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

## கள்ளவாக்குகள் மூலம் தெரிவானவர்கள் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றனர்

-அமைச்சர் டக்ளஸ்

"வடக்கில் கடந்த பொதுத் தேர்தலின் போது பாரிய மோசடிகள் இடம்பெற்றன. இதனால் தமது உண்மையான பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க முடியவில்லையெனத் தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளனர். மக்களின் வாக்குகளைப் பயன்படுத்திக் கள்ள வாக்குகள் மூலம் தெரிவானவர்கள் தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்கின்றனர். அவர்கள் சமாதானத்தை விடுத்து யுத்த நினைப்பிலேயே உள்ளனர்" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார். தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கள்ள வாக்குகள் மூலம் தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி வேலைகளை மேற் கொள்ளவதற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் இடைஞ்சலாகவே செயற்பட்டு வருகின்றனர். கடந்த தேர்தலின்போது அடையாள அட்டை பயன்படுத்தப்பட்டிருந் தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 22 எம்.பி.க்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்க மாட்டார்கள். உண்மையான பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கேற்ப அபிவிருத்தித் திட்டங்களை விரைந்து முன்னெடுக்க சந்தர்ப்பங்கள் கிட்டியிருக்கும். வடக்கில் தேர்தலைக் கண்காணித்த தேசிய, சர்வதேச அமைப்புகள் அங்கு பாரிய மோசடிகள் இடம்பெற்றன என்று அறிக்கை சமர்ப்பித்தன. இதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களைப் பார்த்து அமைச்சர் தேவானந்தா கேள்வி எழுப்பியபோது, குறுக்கிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. "இந்த அறிக்கைகளை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வதில்லை" என்றார்.

"தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் அறிக்கைகளை நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறதா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. மோசடி நடைபெற்றதென்பது உண்மையா? பொய்யா? என்பதே இங்குள்ள விடயம்" என்று பதிலடி கொடுத்தார் அமைச்சர் தேவானந்தா.

இன விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகள் தெரிவாவதில்லை. எனவே இதற்கு வழிவகை செய்யும் விதத்தில் தேர்தல் விதிகளில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார் அமைச்சர் தேவானந்தா.

## வயோதிபர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அருணாசலம் முத்தையா என்ற 63 வயது விவசாயி, கடந்த ஒன்பதாம் திகதி மாலை தோட்ட வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இவரைக் கொல்வதற்கு கடந்த வருடம் மே மாதம் 17ஆம் திகதியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. புலி இயக்க உறுப்பினர்களென்று கூறப்படும் துஷிகாந்த் (வயது 24), கந்தசாமி கனகலிங்கம் (வயது 23) ஆகியோர் மீது இக் கொலை முயற்சி தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்குச் சமுகமளித்துவிட்டு வீடு திரும்பிய அன்றைய தினமே இவர் தோட்டத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஈ.பி.டி.பி.க்கு ஆதரவாகச் செயற்பட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே புலிகள் இவரைச் சுட்டுக் கொன்றனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## நஞ்சூட்டிக் கொலை?

யாழ்ப்பாணத்தில் வெள்ளை வானில் சென்றவர்களால் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட யாழ்.வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உப செயலாளருமான விசுவலிங்கம் குலரத்தினம் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டிருக்கிறாரென அவரது மனைவி தெரிவித்தார். கடத்தப்பட்ட இவர், மயங்கிய நிலையில் வீதியில் கிடக்கக் காணப்பட்டார். யாழ்.வைத்திய சாலையில் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு இவர் அங்கு மரணமானார். அவருக்கு நஞ்சு கலந்த சாராயம் பலாத்காரமாகப் பருக்கப்பட்டிருப்பதாகவும் புலிகளே இவரைக் கடத்திச் சென்றனரென்றும் மனைவி தெரிவித்தார். இவ்வருட முற்பகுதியில் யாழ். வர்த்தகரான சூரன் என்பவர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## அடைக்கலம் கொடுத்தால் ஆபத்து

தமிழ்நாட்டிலிருந்து மன்னாருக்கூடாகப் போதைவஸ்துக் கடத்தலில் வன்னி மாவட்ட முக்கிய அரசியல்வாதியொருவர் சூத்திரதாரியாகச் செயற்படுவதாகச் சந்தேகம் தெரிவித்திருக்கும் போதைவஸ்துத் தடுப்புப் பொலிஸார், போதைவஸ்துக் கடத்தல்காரர்களுக்கு அடைக்கலம் கொடுப்போரும் ஆபத்தில் சிக்க வேண்டிவருமென எச்சரித்துள்ளனர். அண்மையில் வெடிமருந்துகள் கடத்தி வந்த இரு தமிழகப் படகுகளே பேசாலைக் கடலில் எரிந்ததென்றும் இப் படகுகளிலிருந்து தப்பி மன்னாருக்கு வந்து சேர்ந்த எட்டுத் தமிழக மீனவர்களும் இன்னமும் கைது செய்யப்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமன்னாரிலும் முருங்கனிலும் ஐம்பது கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மன்னாரில் போதைவஸ்துக் கடத்தல் முயற்சிகளை முறியடிப்பதற்குப் பொலிஸ் மாஅதிபர் இந்திரா டீ சில்வா விசேட குழுவொன்றினை நியமித்துள்ளார். தமிழகத்திலிருந்து வள்ளங்கள் மூலம் மன்னாப் பகுதிக்கு போதைவஸ்து பெருமளவில் கடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மன்னாரிலிருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிவந்த லொறியொன்றினை முருங்கன் சோதனைச் சாவடியில் வழிமறித்துச் சோதனையிட்ட பொலிஸார், இரு பெரிய பொதிகளுக்குள் பிரெளன் சுகர் என்று வர்ணிக்கப்படும் போதைவஸ்தைக் கண்டுபிடித்தனர். மூன்றரைக் கிலோ எடையுள்ள இப் போதைவஸ்தின் பெறுமதி 75 இலட்சம் ரூபாவெனப் பொலிஸார் தெரிவித்தனர். மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றி னைச் சோதனையிட்ட பொலிஸார் நான்கு கிலோ போதைவஸ்துடன் நபரொருவரைக் கைதுசெய்தமையும் குறிப்பிடத் தக்கது. ❒

## மரமுந்திரிகை செய்கையாளர்களுக்கு மானியம்

மட்டக்களப்பு மாவட்ட மரமுந்திரிகைச் செய்கையாளர்களுக்கு மூன்று வருடங்களுக்கான நிதி மானியங்கள் இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படுமென்று மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குணசேகரம் சங்கர் தெரிவித்தார். கடந்த மூன்று வருடங்களாக மானியங்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்த சங்கர், மானியங்களைப் பெற விரும்புவோர் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார். அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பணிப்பின் பேரில் இந்த மானியம் வழங்கப்படுவதாகவும் சங்கர் கூறினார்.

## கனடா பொங்கு தமிழ் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்தத் தடை

ரொறன்ரோ குயின்ஸ் பார்க்கிலுள்ள மத்திய நிலையத்தில் 25ஆம் திகதி சனிக்கிழமை புலி ஆதரவாளர்கள் நடத்த ஏற்பாடு செய்திருந்த பொங்கு தமிழ் பகிரங்க நிகழ்ச்சியை அங்கு நடத்த வேண்டாமென்று ரொறன்ரோ மாநகர நிர்வாகம் உத்தர விட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை நடத்த விரும்பினால் பெரும் எடுப்போடு பகிரங்கமாக நடத்தாமல் மண்டபங்களுக்குள் நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கியிருந்த மாநகர சபை நிர்வாகம் கனடாவிலுள்ள பல புத்திஜீவிகளும் மனித உரிமை அமைப்புகளும் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து இத் தடையுத்தரவை விடுத்துள்ளது.

புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர்களிடமிருந்து கனடியப் புலி ஆதரவாளர்கள் வலுக்கட்டாயமாகப் பணம் திரட்டி வருகின்றனரென்றும் ரொறன்ரோவிலுள்ள தமிழ் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடிப் பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு வற்புறுத்தப்படுகின்றனரென்றும் பலர் ரொறன்ரோ மாநகர சபை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் மாற்றுக் கருத்துக்கள் கொண்ட தமிழர்களைக் கொன்றுவரும் புலிகளுக்கு ஆதரவாக இப் பொங்கு தமிழ் நிகழ்ச்சியை நடத்த அனுமதி வழங்க வேண்டாமென்றும் இவர்கள் வற்புறுத்தியுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பொங்கு தமிழ் நிழ்வுக்குத் தடை விதிக்குமாறு கனடிய அரசாங்கத்தைக் கோரியிருந்தார். கடந்த இரு வாரங்களாகக் கனடாவில் தங்கியிருக்கும் ஆனந்தசங்கரி கனடியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்து, இந் நிகழ்ச்சியைத் தடைசெய்ய வேண்டுமென்பதற்கான காரணங்களை விளக்கியுள்ளார். கனடிய மனித உரிமைப் போராளிகளான கேவின் சிம்மின் மற்றும் டேவிட்சன் ஆகியோரும் இலங்கையில் புலிகள் நடத்திவரும் மிலேச்சத்தனமான படுகொலைகள் பற்றி முக்கிய அரசியல்வாதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிய வருகிறது. ❒

# முரசம்

## படுகொலைகளை நிறுத்தும் பொறுப்பு யாருடையது?

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இலங்கையில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறிக்கொண்டாலும், அரசியற் படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. அவை வர வர மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இப் பேச்சுவார்த்தைக்கான நடுவர்களாக மூன்றாம் தரப்பான நோர்வே செயற்பட்டு வருகிறது. யுத்த நிறுத்தத்தைச் சரியாக அமுல்படுத்துவதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்று செயற்பட்டு வருகிறது. இவர்களது கடமையென்ன? யுத்த நிறுத்த மீறல்களை இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிப்பதா அல்லது அவற்றை நிறுத்துவதற்கு வழி சமைப்பதா? தற்போது பார்க்கப்போனால் இரண்டுமே இல்லாத நிலைமைதான் காணப்படுகிறது. சமாதான ஒப்பந்தத்தின் பின் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்த அரசியற் படுகொலைகள் எவற்றுக்கும் இக் கண்காணிப்புக் குழு தீர்ப்பளிக்கவுமில்லை; அவை தொடராதிருக்க நடவடிக்கை எடுக்கவுமில்லை. இதேவேளை, பேச்சுவார்த்தைகளில் நடுவர்களாகச் செயலாற்றும் நோர்வேத் தரப்பினர், இத்தகைய படுகொலைகள் சமாதான முன்னெடுப்புகளுக்குப் பாரிய அச்சுறுத்தல் என்பதை ஒரு பாரதூரமான விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை. கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கிடையே ஏற்பட்ட உள் முரண்பாட்டால் நிகழ்ந்த படுகொலைகளை மட்டுமே அவர்கள் சமாதானத்துக்குப் பாரிய அச்சுறுத்தலெனத் தெரிவித்தார்கள். ஏனெனில், அவை புலிகளைப் பாதித்த படுகொலைகளாக அமைந்திருந்தன. ஏனைய படுகொலைகள் குறித்து அவர்கள் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. மாறாக அவற்றைப் பாரதூரமற்றவையாகச் சித்திரிக்கவே முயன்றார்கள். அண்மையில் கூட, சமாதான முயற்சிகளுக்காக இலங்கை வந்திருந்த நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், இந்த அரசியற் படுகொலைகளைப் பாரதூரமான உயிர்ச் சேதங்களாக கருதவில்லை என்ற கருத்துப்படக் கூறியிருந்தார். ஒரு யுத்தத்தில் நிகழும் உயிர்ச் சேதங்களை மட்டுமே அவர் முக்கியமானதெனக் கருதுகிறார். அங்கு படைத் தரப்பும் போராளிகளும் மோதும் போதும், பொது இலக்குகள் தாக்கப்படும்போதும் உயிர்ச் சேதங்கள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், அவற்றை அரசியல் படுகொலைகளுக்கு ஒப்பிட முடியாது. இங்கு அளவு ரீதியாக விடயத்தைப் பார்க்கலாகாது. பண்பு ரீதியாகவே பார்க்கப்படல் வேண்டும். அரசியல் படுகொலைகள் என்பன பண்பு ரீதியாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம். அரசியல் செயற்பாட்டாளர்கள் திட்டமிடப்பட்ட முறையில் தேடிப் படுகொலை செய்யப்படுவதென்பது வேறு விடயம். ஒரு யுத்த நடவடிக்கையில் நிகழும் எழுந்தமானமான உயிர்ச் சேதங்களுக்கும் இதற்கும் பாரிய வித்தியாசமுண்டு. எனவே எரிக் சொல்ஹெய்ம், இப் படுகொலைகளை பொதுப்படையாக நோக்குவது தவறு. அரசியல் படுகொலைகள் என்ற விடயத்தை தனியான, பாரதூரமான விடயமாக அவர்கள் கொள்ள வேண்டும். அதனை நிறுத்துவதற்கு முழு அளவில் முயல வேண்டும்.

இதேவேளை அரசாங்கமென்ற வகையில் இலங்கை அரசாங்கத்துக்கும் இதனைத் தடுப்பதற்கான பொறுப்புள்ளது. இதனை யுத்த நிறுத்தத்துடன் சம்பந்தப்பட்டதாகக் கருதி, தனித்துக் கண்காணிப்புக் குழுவினருக்குரிய ஒரு விடயமாக விட்டுவிட முடியாது. இது பாதுகாப்புத் தொடர்பான அரசின் கடமை. இவ்வரசியற் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிடில் அதுவே சமாதானத்துக்குக் கேடாகவிடலாம்.

▬▬

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை


***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரன்

# மீண்டும் துளிரும் சமாதான முயற்சிகள் சாத்தியமா?





சமாதான முயற்சிகளில் திரும்பவும் தீவிரம் காட்டும் முனைப்புக்கள் தோன்றியிருக்கின்றன. நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கை வந்து, அரசாங்கத் தரப்பினரையும், புலிகளையும், எதிர்க் கட்சியினரையும் மேலும் முஸ்லிம் காங்கிரஸ், மாற்றுத் தமிழ்த் தரப்பினரான ஈ.பி.டி.பி. ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார். முடங்கிப்போயிருக்கும் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க ஏதேனும் வழியுண்டா என்று தேடுவதே இச் சந்திப்புக்களின் பிரதான காரணம்.

-வழமையாக, அரசாங்கத்தையும் புலிகளையும் மீண்டும் சந்தித்துப் பேசினால் போதுமானதென்று நடந்துகொண்டிருந்த நோர்வே மத்தயஸ்தர்களின் அணுகுமுறை, இம் முறை சற்று மாறி, ஏனைய தரப்பினர்களையும் சந்தித்துப் பேசுவதாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்குப் பிரதான காரணம், அண்மைக்கால நிகழ்வுகளில் நோர்வே பதில் சொல்ல வேண்டிய கட்டத்திற்கு அல்லது அதன் பழிகளைச் சுமக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டமை எனலாம்.

அண்மைக்காலமாக மாற்றுத் தமிழ்க் கட்சியினர் மீதான படுகொலைகள் மோசமான அளவுக்கு அதிகரித்திருந்தன. சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்துக்கும் நடுவராக செயற்படும் நோர்வேயின் மீது அதிருப்தியும் கேள்விக் கணைகளும் அதிகரித்த அளவில் விழும் என்பது யதார்த்தமானதே. அண்மைய காலத்தில் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் மீதான படுகொலைகள் குறித்து நோர்வேத் தூதரகத்துக்கு முன்னால் பல தடவைகள் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. நோர்வேயைக் கேள்விக்குள்ளாக்கும் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் கணிசமான அளவு வெளிவந்துள்ளன. அண்மையில் கொல்லப்பட்ட மாற்றுத்தமிழ்க்கட்சியினரின் பிரேதப் பெட்டிகள் நோர்வே தூதரகத்துக்கு முன்னால் இரு தடவைகள் வைக்கப்பட்டு நியாயம் கேட்கப் பட்டுள்ளது. இந் நடுவர்களுக்கு இத்தகைய ஒரு சூழல் முன்னெப்போதும் வந்தது கிடையாது. இப்படியான ஆர்ப்பாட்டங்களும் பிரேதப் பெட்டிகளின் காட்சிப்படுத்தலும் உள்நாட்டு ஊடகங்களில் மட்டுமன்றி, சர்வதேச ஊடகங்களிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது நோர்வே நடுவர்களுக்குப் பாரிய தர்மசங்கடத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. சர்வதேச ரீதியாக நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு இருக்கும் கௌரவத்தை இது பாதிப்பதாகவுள்ளது. இத்தகைய சம்பவங்களை மறுக்க முடியாத நிலையில் இவை குறித்துப் பதில் சொல்ல வேண்டியவர்களாக அவர்களை ஆக்கியுள்ளது.

இந் நிலையில்தான் அவர்கள் இதர தரப்பினரோடும் பேசுவதன் மூலம், தாம் பக்கச்சார்பற்றவர்களெனவும் ஏனையோரது ஆதங்கங்களை அறிவதிலும் அக்கறை காட்டுபவர்களாகவும் காண்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மேலும், மறுபுறத்தில் திரண்டு வரும் தம் மீதான எதிர்ப்பையும் அவர்கள் நடுநிலைப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான எதிர்ப்பைத் திரளவிட்டால் அது நோர்வேயின் பங்கை ஒரு பக்கத்தினர் முழுவதும் ஏற்றுக்கொள்ளாத கட்டத்துக்கு இட்டுச் சென்றுவிடும். அவ்வாறு ஒரு தரப்பு முழுமையாக நிராகரிக்கும் நிலையில் நோர்வேயின் மத்தியஸ்தப் பங்கு அர்த்தமற்றதாகிவிடும்.

எனவேதான் மறு தரப்பினரையும் ஏதோ ஒரு அளவுக்காவது திருப்திப்படுத்த வேண்டும் என்பதை நோர்வேத் தரப்பினர் உணர்கின்றனர். அத்துடன் அண்மையில் நோர்வேயில் நடந்த இலங்கைப் பிரச்சினை பற்றிய ஒரு கலந்துரையாடலிலும் நோர்வேயின் செயற்பாடு பற்றிக் காரசாரமான கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. இவை நோர்வேக்கு தம் மீது எழுந்துவரும் விமர்சனங்களைப் பற்றி உணரவைத்திருந்தன.

இதற்கு மத்தியில் நோர்வேயை மேலும் தர்மசங்கடத்துக்குள்ளாக்கிய விடயம், நோர்வே புலிகளுக்குப் பயிற்சி கொடுத்ததாக வெளிவந்த செய்தியாகும். நோர்வே இதனை மறுத்திருந்தது. எனினும் தனது இராணுவத் தளங்களைப் பார்வையிடப் புலிகளை அழைத்துச் சென்றதாக ஏற்றிருந்தது. அது ஒரு இராணுவ உடன்பாடல்ல என நோர்வே தெரிவித்திருந்தது.

எனினும் நோர்வேயின் செயற்பாடுகள் நோர்வே, தனது மத்தியஸ்தர் என்ற நிலைமையையும் தாண்டி புலிகளுடன் ஈடுபாடு காட்டி வருகிறதென்ற சந்தேகத்தை சிங்கள, மற்றும் சில ஆங்கில ஊடகங்களில் ஏற்படுத்தியிருந்தன. முன்னரும் இவ்வாறே, நோர்வே மத்தியஸ்த நிலையைக் கடந்து, தனது இராஜதந்திரச் சலுகைகளைப் பாவித்துப் புலிகளுக்கு சக்திவாய்ந்த தொலைதொடர்புச் சாதனங்களை வரி விலக்குடன் பெற்றுக் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதைவிட, அண்மைக் காலத்தில் நோர்வேயின் பங்களிப்பைப் பற்றி இந்தியா தெரிவித்திருந்த சில கருத்துக்களும் அதற்குச் சங்கடமேற்படுத்துவதாக அமைந்திருந்தது. நோர்வே சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தமக்குத் தெரிவித்து வந்தாலும் அவர்கள் முழுமையாகத் தெரிவிக்கவில்லை. ஒரு சிலவற்றை சுமார் 5 சதவீதமானவற்றை - மறைந்திருந்தார்கள். அதனை எம்மால் புரிந்துகொள்ள முடியும். அவற்றை அறிந்துகொள்ளக்கூடிய வல்லமையும் ஏற்பாடுகளும் எம்மிடம் உண்டு என இந்தியத் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தாம் சமாதான முயற்சிகளில் பேசப்படுபவை அனைத்தையும் இந்தியாவுக்கு உடனுக்குடன் தெரிவித்தே வருகிறோம் என நோர்வே கூறிவரும் நிலையில், இந்தியாவின் இக் கூற்றானது அதற்கு அசௌகரியமானதாக அமைந்திருந்தது.

இப்படியான தொடர் செயற்பாடுகளின் திரட்சியாகவே தற்போது நோர்வே குறித்த சந்தேகங்களும் கேள்விகளும் தலைதூக்கியிருந்தன. அதற்கு ஏற்ற ஒரு பரபரப்பான சூழ்நிலையை, அதிகரித்த அளவில் நிகழ்ந்துவரும் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் மீதான அரசியற் படுகொலைகள் ஏற்படுத்தியிருந்தன.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கை வந்த எரிக் சொல்ஹெய்ம் சகல தரப்பினரையும் சந்தித்துப் பேசியிருந்தார். ஆனால், அவரது வருகையின் பிரதான காரணமான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சி இம்முறையும் கைகூடவில்லை. கைகூடாவிடினும் ஏதாவது ஒரு புறத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதாவென்று பார்த்தால் அதுவுமில்லை.

உண்மையில் இவர்களது சமாதான முயற்சியிலுள்ள பிரதான குறைபாடே இதுதான். இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினர்களிடம் இவர்கள் எதையும் முன்வைக்கக் கூடியதாக இல்லை. மாறாக, அவர்கள் தெரிவிப்பவற்றைத்தான் இவர்கள் கேட்டுக்கொண்டு வரவேண்டியதாக உள்ளது. இவர்கள் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினால், மறுநாள் பத்திரிகையாளர் மகாநாட்டில் நாம் நோர்வேப் பிரதிநிதிகளிடம் இவற்றை வலியுறுத்தினோம் என்றே புலிகள் தெரிவிப்பர். இவ்வாறே அரசாங்கத் தரப்புச் சந்திப்புக்களிலும் நிகழ்கிறது. அச் சந்திப்புகளின்போது நோர்வே இவையிவற்றை வலியுறுத்துவதாக ஒருபோதும் தெரிவிக்கப்படவில்லை.

> **அண்மைக்காலமாக மாற்றுத் தமிழ்க் கட்சியினர் மீதான படுகொலைகள் மோசமான அளவுக்கு அதிகரித்திருந்தன. சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்துக்கும் நடுவராக செயற்படும் நோர்வேயின் மீது அதிருப்தியும் கேள்விக் கணைகளும் அதிகரித்த அளவில் விழும் என்பது யதார்த்தமானதே. அண்மைய காலத்தில் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் மீதான படுகொலைகள் குறித்து நோர்வேத் தூதரகத்துக்கு முன்னால் பல தடவைகள் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. நோர்வேயைக் கேள்விக்குள்ளாக்கும் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் கணிசமான அளவு வெளிவந்துள்ளன. அண்மையில் கொல்லப்பட்ட மாற்றுத்தமிழ்க்கட்சியினரின் பிரேதப் பெட்டிகள் நோர்வே தூதரகத்துக்கு முன்னால் இரு தடவைகள் வைக்கப்பட்டு நியாயம் கேட்கப் பட்டுள்ளது. இந் நடுவர்களுக்கு இத்தகைய ஒரு சூழல் முன்னெப்போதும் வந்தது கிடையாது.**

இவ்வாறு ஒரு தரப்புச் சொல்வதை மறு தரப்பிடம் தெரிவிக்கின்ற தபாற்காரனாக மட்டும் செயற்பட்டு இத்தனை சிக்கல் வாய்ந்த நிலையிலுள்ள விடயத்துக்குத் தீர்வு காண முடியுமா என்பதே இங்குள்ள கேள்வி. யதார்த்தத்தில் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையின் சாத்தியக்கூறுகளை எடுத்துப் பார்த்தால் இரு துருவ நிலையிலேயே நிலைமை உள்ளது. ஒருபுறம் புலிகள் இடைக்கால சுயாட்சி அதிகாரசபை என்ற ஒரு வரைபை முன்வைத்து அதனடிப்படையில் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்து வருகிறார்கள். இதுவே கடந்த தேர்தலில் தமிழ் மக்களால் தமக்குத் தரப்பட்ட மக்களாணை என அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அவர்கள் முழுமையான அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளுக்கும் தற்போது தயாரில்லையெனவும், இடைக்கால சுயாட்சி அதிகார சபையினைச் செயற்படுத்திக்கொண்டே முழுமையான அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவித்துள்ளார்கள். இரண்டையும் சமாந்தரமாகப் பேசுவது குறித்து ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட கருத்தையும் அவர்கள் வரவேற்கவில்லை.

இதேவேளை இன்னொருபுறத்தில் இடைக்கால சுயாட்சி அதிகாரசபையினடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடாதென்ற எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்குகின்ற ஜே.வி.பி., இடைக்கால அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தமிழீழத்துக்கான ஆரம்பப் படியாக அமைந்துவிடுமெனத் தெரிவிக்கிறது. எனினும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமென ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், புலிகளோ, இடைக்கால சுயாட்சி அதிகாரசபை தவிர்ந்த வேறு எந்தப் பேச்சுக்களையும் தாம் ஏற்கப்போவதில்லையெனத் தெரிவிக்கும் நிலையில், ஜே.வி.பி.யின் கருத்தில் பேச்சுக்களை நடத்துவதற்கான சாத்தியங்கள் தெரியவில்லை. அதேவேளை ஜே.வி.பி.யை விடுத்தும் அரசாங்கத்தால் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது.

இதேவேளை, சிஹல உறுமய கட்சியினரும் புலிகளின் இடைக்கால சுயாட்சி அதிகாரசபையை எதிர்த்து வருகிறார்கள். இவை ஒருபுறமிருக்க, புலிகளின் வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களில் அரசியல் யாப்புச் சிக்கல்கள் பலவும் உள்ளன. இன்றைய அரசியல் யாப்பின் கீழ் அத்தகைய ஒரு ஆட்சியமைப்பை வழங்க முடியாத சட்டப் பிரச்சினை உள்ளது. அதற்கு அரசியல் யாப்பை மாற்றியமைக்க வேண்டிய அவசியமும் உள்ளது. இதேவேளை அவ்வரைபின் சில அம்சங்கள் இலங்கையின் இறைமையை மீறுவதாகவும் சர்ச்சைகள் உள்ளன. அதுமட்டுமன்றி இந்தியாவிற்கும் முரண்பாடான சில அம்சங்கள் அமைந்துள்ளதாகவும் சர்ச்சைகள் உள்ளன. இத்தகைய நிலையில் இந்தியாவின் அங்கீகாரத்துக்கும் இவ்விடயம் உட்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

இவையெல்லாம் குறித்து நடுவர்களான நோர்வே என்ன சிந்தித்துள்ளது? எப்படிக் கையாளப் போகிறது? எவ்வாறு இவற்றை ஒரு தளத்திற்கு கொணர்ந்து பேச்சுவார்த்தைகளை நகர்த்தப் போகிறது? இதற்கெல்லாம் வெறும் தபாற்காரனாகத் தொழிற்பட்டால் முடியுமா?

இப்படியான ஒரு கனமான விடயத்துக்கு மத்தியில் எரிக் சொல்ஹெய்ம் இறுதியாக மேற்கொண்ட சமாதான முயற்சிக்கான இலங்கை விஜயத்தில் எவ்வித பெறுபேறுமில்லாமல் அவர் வெறுங்கையோடு திரும்ப நேர்ந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. பேச்சுவார்த்தைத் தரப்பினர்களில் மாற்றம் ஏற்படுமா என்பது ஒருபுறமிருக்க, பேச்சுவார்த்தையில் நடுவர்களாகச் செயலாற்றும் இவர்களது வலுவற்ற அணுகுமுறையில்தான் முதலில் மாற்றமேற்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

# சர்வதேசத்தின்

# கண்டனமும் தொடரும் படுகொலைகளும்

**பு**திய அரசியல் நகர்வுகள், புதிய திட்டமிடல்கள் என்பதற்கப்பால் கொலைச் செய்திகளே அன்றாடச் செய்திகளாகிப் போயுள்ளன. இரு தசாப்தங்களுக்கு மேலான தமிழர் விடுதலைப் போராட்டத்தில் பல திருப்புமுனைகள் இருந்தன என்பது அனைவரும் அறிந்ததே. இதில் ஒரு அம்சமாகிப் போனதுதான் இந்தப் படுகொலைகள்.

ஆரம்ப காலத்தில் அல்பிரட் துரையப்பா முதல் தமிழர்களின் தேசியத் தலைவர் அமிர்தலிங்கம் உட்பட்ட பலர் கொல்லப்பட்டபோது அதற்காகக் கூறப்பட்ட காரணங்கள் வேடிக்கையானவை.

தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு மாறான நடைமுறையைக் கொண்டிருந்ததும், பாராளுமன்ற அரசியல் ரீதியான அணுகுமுறையில் நம்பிக்கை கொண்டிருந்ததும் இவர்கள் கொல்லப்படுவதற்கான காரணமாகக் கூறப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதானால் தமிழ் இனத்தின் விடுதலைப் பயணத்தில் இவர்கள் துரோகிகளாகச் சித்திரிக்கப்பட்டனர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அப்போது துரோகிகளைச் சுடுகின்றோம் என்று மிதவாத அரசியல்வாதிகளையும் சக இயக்க உறுப்பினர்களையும் கொன்றொழித்த படுகொலைக் கலாசாரம் இப்போது தமிழரைத் தமிழரே கொன்றொழிக்கின்ற நிலையை அடைந்துள்ளது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் சிங்களப் படையினரால் சொத்தழிவுகளும், உயிரிழப்புகளும், பாரிய இடப் பெயர்வுகளும் ஏற்பட்டன என்பதை எவரும் மறுத்துக் கூற முடியாது. ஆனால், தமிழ்ப் புத்திஜீவிகள், தலைமைப் பண்புள்ளவர்கள், சிறந்த வழிகாட்டிகள், சிறந்த கல்விமான்கள் ஆகியோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது சிங்களப் படைகளால் அல்ல என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இதையெல்லாம் புரிந்துகொண்டுள்ள தமிழ் மக்கள் இவ்வாறான அநியாயமான படுகொலைகளை எதிர்த்து எப்போதுமே குரல் கொடுத்ததில்லை. அச்சம் காரணமாக மக்கள் மௌனம் காத்தனர். ஆனால் இந்த மௌனங்களை தாம் செய்யும் படுகொலைகளுக்கான அங்கீகாரமாக வெளி உலகுக்குக் காட்டி தொடர் படுகொலைகள் அரங்கேறின. துப்பாக்கி முனைகள் தமிழ் மக்களை நோக்கி நீட்டப்பட்டுக்கொண்டிருப்பதை எவரும் அறியாமலில்லை. பேரினவாதத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டம் ஒரு கட்டத்தில் திரும்பி தமிழ் மக்களையே அச்சுறுத்தியதுதான் வேடிக்கை. போராட்டத்தின் பெயரால் செய்யப்பட்ட படுகொலைகளை ஒரு தமிழன் கூட எதிர்க்கவில்லை என்றும் கூற முடியாது. எதிர்த்த, விமர்சித்த அல்லது நியாயம் கேட்ட பல தமிழர்களின் குரல்கள் நசுக்கப்பட்டன. இரவோடிரவாக வெட்டிப் புதைக்கப்பட்டனர் என்பதும் எமக்கு இருண்ட வரலாறு.

ஒருவருக்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுமம் இருக்கின்றபோது ஒரு கருத்துக்கு மற்றொரு கருத்து முன்மொழியப்படுவது வாழ்வியல் இயல்பு. இதை விடுத்து எல்லோரும் ஒன்றையே விரும்புகின்றார்கள், ஒரே கருத்துப்பட போராடுகிறார்கள் என்று கூறிக்கொண்டு கொடூரமான கொலைகளை நடத்துவதானது வெறித்தனமானது. ஆகவேதான் புத்திஜீவிகள் உட்பட்ட சர்வதேச சமூகம் நம்பிக்கையீனத்தை அவ்வப்போது வெளிப்படுத்திவருகின்றது. இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொள்ளாமல் அல்லது விளங்கியும் விளங்காதது போல் நடந்துகொள்கின்ற மனநிலை கொண்டவர்களின் கைகளில் ஆளுகின்ற அதிகாரங்கள் போய்ச் சேருமாக இருந்தால் அப் பகுதியில் வாழுகின்ற மக்களின் வாழ்வு முறை எப்படி இருக்கும் என்பதை விவரிக்க முடியாது.

அதைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உதாரணத்துக்கு வன்னியில் வாழ்கின்ற மக்களின் நிலைமை போதுமான சான்றாகும். வன்னியிலிருந்து வந்து சந்தித்தவர்களுடன் பேசுகின்றபோது அவர்கள் கூறிய விடயங்கள், ஒரு சமூகம் வாழ்கின்றபோதே நரகத்தை அநுபவிப்பதானது கொடுமையிலும் கொடுமை என்று எண்ணத் தோன்றியது. சில குறிப்பிட்ட அம்சங்களைக் கூறுவதானால் ஒருவரின் வீட்டு வளவுக்குள் இருக்கும் தென்னை மரத்துக்கும் வரி கொடுக்க வேண்டும். சர்வதேச அமைப்புகள் இலவச சிகிச்சையளிக்க வருவதாக இருந்தால் அதற்காக முதல்நாளே ஐம்பது ரூபாய் கட்டி அனுமதி பெற வேண்டும். சிங்கள தேசம், சிங்களப் படைகள் என்று தூற்றிக்கொண்டே அவர்கள் மக்களுக்காக அனுப்பும் நிவாரணப் பொருட்களில் பாதியை இறாஞ்சிப் பறித்துக்கொள்கிறார்கள். தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் அல்லது உதவிகளில் பெரும் பங்கினை அவர்களே எடுத்துக் கொள்வார்கள். உதாரணத்துக்கு ஒரு அமைப்பு மூக்குக் கண்ணாடி வழங்குவதாக இருந்தால், அதைத் தாங்களே வழங்குவதாக விளம்பரப்படுத்துவார்கள். தவிரவும் அவர்கள் நிர்வகிக்கும் மருத்துவமனைகளில் தலையிடி என்றாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி, பெருந்தொகைப் பணம் அறவிடப்படும். இப்படிக் கூறிக்கொண்டே போனவரின் கண் கலங்கிப்போனது துயரத்திலும் துயரம்.

இந்த நிலைமைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏன் வெளி உலகுக்குச் சொல்ல முன்வருவதில்லை? இந்தக் கேள்விக்கு அவர் சொன்ன பதில் பலவாறும் சிந்திக்க வைத்தது.

“தம்பி அவர்களுக்கு முழுவதும் தெரியும். ஆனால் அவை சொல்லமாட்டினம். ஏன் தெரியுமே. மறுமுறை வர அனுமதிக்கமாட்டினம். அப்படி அனுமதிக்காட்டால் தொண்டு நிறுவனங்கள் எதைக் காட்டி வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுவது? இப்படிப் பல காரணங்கள் இருக்குது?” என்று ஒருவர் கூறினார். இன்னும் பல விடயங்கள் வெளிவராமல் உள்ளதற்கும் இப்படியான வலுவான காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

மக்கள் நேரடியாக முகங்கொடுக்கும் வாழ்வு நிலைமை இப்படியாக இருக்க, அடுத்தபடியாக தொடரும் அரசியல் படுகொலைகள் பற்றி ஈ.பீ.டி.பி. உறுப்பினர் ஒருவரிடம் கேட்டேன்.

“புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது தொடக்கம் இதுவரை 53க்கும் அதிகமான எமது உறுப்பினர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எம்மைத் துரோகிகள் என்று கூறும் புலிகளே தமிழினத்தின் உண்மையான துரோகிகள். புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதற்கு அமைய எமது பாதுகாப்புகளுக்காக வைத்திருந்த ஆயுதங்களைச் சர்வதேச சமூகத்தின் முன் மீள அரசிடம் கையளித்தோம். இப்போது நிராயுதபாணிகளாக உள்ளோம். மக்களே எங்கள் கவசங்கள் என்று நம்பினோம். ஆனால் அந்த மக்களை வாய் திறக்க முடியாதபடி அடக்கி வைத்துக்கொண்டு கொலைகள் தொடர்கின்றன. ஆயுதமேந்திய போராட்டத்திலிருந்து ஜனநாயக வழிக்கு வந்து, ஜனநாயகத்தின் மீதும், மனித உரிமைகள் மீதும் நம்பிக்கை கொண்டு வாழ்கின்ற எங்களுக்கே இந்த நிலைமை என்றால், தற்போது தமிழர் போராட்டத்தின் பார்வையாளர்களாக மாற்றப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலை எவ்வாறானதாகும் என்பதை முழு உலகுமே நன்கு புரிந்து கொண்டுள்ளது. அதாவது எங்கள் அலுவலகங்களில் கட்டப்பட்ட கறுப்புக் கொடிகள் அவிழ்க்கப்பட வேண்டிய அவசியமற்றுத் தொடர்ந்து தொங்கவிடும் நிலையே உள்ளது. ஏனெனில் எமது தோழர்கள் ஒவ்வொரு வாரமும் புலிகளால் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். இதை நாம் சர்வதேச சமூகத்துக்கும் எமது மக்களுக்கும் தெரியப்படுத்தி வருகிறோம். இந்த அராஜகப் போக்குக்கும் ஒரு முடிவு உண்டு என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இனந்தெரியாத நபர்கள் என்ற போர்வையில் புலிகள் புரிகின்ற படுகொலைகள் எங்களுக்குத் தெரியாதவையல்ல. ஊடகங்களும் பேராசிரியர்கள் சிலரும் இவ்வாறான அரசியல் படுகொலைகளைக் கண்டிக்கத் திராணியற்றுப் போயுள்ள நிலை ஒன்றேபோதும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை, மனித உரிமை எந்தளவில் மதிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு.

> **தமிழ்ப் புத்திஜீவிகள், தலைமைப் பண்புள்ளவர்கள், சிறந்த வழிகாட்டிகள், சிறந்த கல்விமான்கள் ஆகியோர் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டது சிங்களப் படைகளால் அல்ல என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.**

இவ்வாறான கொடுமைகளை தமிழ் பேசும் மக்கள் எதிர்க்கின்ற தொடக்கப் புள்ளிகள் பரவலாகத் தோற்றம் பெற்று வருவதை உணர்ந்து வருகிறோம். காலப்போக்கில் அல்லது மிக விரைவில் தொடக்கப்புள்ளிகள் ஒன்று சேர்ந்து வன்முறைக்கும், கொலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் அல்லது வைக்கப்படும் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. எந்த மக்களிடம் இருந்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அதே மக்களால் இப்போது நிராகரிக்கப்பட்டுமுள்ளது என்பதுதான் இத்தனை வருடகால அநுபவமாகவுள்ளது. சர்வதேசமும் இலங்கையின் நிலைமைகளைச் சரியாகப் புரிந்துகொண்டுள்ளது.

அலசுவது
- மதியூகி -

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், நோர்வே, கனடா, ஜேர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகள் புலிகள் மீது தங்கள் கண்டனங்களையும் அதிருப்தியையும் அவ்வப்போது தெரிவித்து வருகின்றன. ஆனால் இவைகளைப் பொருட்படுத்தாமல் புலிகள் தொடர்ந்தும் தமது அரசியல் எதிரிகளைக் கொலை செய்து வருகின்றனர். இது மிகவும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்” என்று கூறினார்.

இப்படியான சமகாலம் குறித்த விமர்சனங்கள் இருக்க, இதற்கு மாறாக அல்லது இவற்றைக் கண்டுகொள்ளாத படுகொலைகளும் வன்முறைகளும் போராட்டத்தையும், மக்களையும் எங்குகொண்டு போய்விடப்போகின்றனவோ? மக்களின் மௌனம் கலைய வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

## அதிரடி அய்யாத்துரை



**தனியார்** தொலைக்காட்சி விவாதமொண்டில போனமுறை இ.தொ.கா.காறர் அரசாங்கத்தோட சேந்ததை வைச்சுப் பெரிய சர்ச்சை கிளப்பினவையளெல்லோ. அதில இ.தொ.கா. காறர் குடுத்த பதிலடி எதிர்த் தரப்பாருக்கு ரொம்பச் சுட்டுப் போட்டுதாம். எதிர்த்தரப்புத்தான் ஏதோ அரசியல்வாதிகள் விடுங்கோ. நடுவராயிருந்து நடத்திறவருக்கு என்ன வந்ததாம். இ.தொ.கா.காறரை மடக்கிக் காட்டிறனெண்டு வெளிக்கிட்டிருக்கிறார் போல. நேரா வன்னிக்குப் போய் மூட்டிப் பாத்தார். ஆனால் அவையோ அலட்டிக்கொள்ளாமல், அரசாங்கத்தோட சேர்ந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கிடைச்சால் சந்தோஷமான விஷயந்தானெண்டிட்டினம். அதுதான் பிழைச்சுப் போச்சுதெண்டிட்டு அடுத்த விவாதத் துக்கு மலையக மக்கள் முன்னணியாரை இழுத்துக் கொண்டு வந்து வெளுத்துக் கட்டச் செய்திருக்கிறார். விவாதமெண்டால் ரெண்டு தரப்பாரையும் வைச்செல்லோ நடத்திறது. ஆனால் ஆள் ஒருதரப்பை மட்டும் கூட்டிவந்து ஒப்பினாப் பேச விட்டிருக்கிறார். பெட்ஸ் மென் இல்லாமல் போலரை மட்டும் பந்துவீச விட்டால் விக்கெட் விக்கட்டா விழுத்தலாந்தானே ! ம்....வட் ட்டு டு? நடுவர்களெல்லாம் இப்ப தரகர்களாப் போட்டினம் போல.

**மலையகச்** சந்திரனார் இப்ப புதிய விவாதமொண்டத் துடங்கி வைச்சிருக்கிறார். மலையகத் தமிழர் தனித் தேசிய இனமே எண்ட வாதம் முத்தித் துடக்கம் நடந்து வந்தது. அவைக்குத் தனிப் பிரச்சினையிருக்கெண்டு சொல்லித்தான் மலையகத் தமிழருக்குத் தனி மாவட்டம் வேணுமெண்டும் தனி மகாண சபை வேணுமெண்டும் செமினார் வைச்ச ஆக்கள்தான் உவை. இப்ப என்னடா வெண்டால் வடக்கு கிழக்கோட ஒண்டுசேர வேணுமெண்டிறார் சந்திரனார். நல்லதுதான். சமாதான காலத்தில சேந்து நிக்க நினைக் கிறவை, எக்கணம் யுத்தம் துடங்கினால் 'பிச்சை வேண்டாம். நாயைப் பிடி'யெண்டு விட்டிட்டு ஓடாட்டாச் சரி, எல்லாம் எங்கட இ.தொ.கா. இப்ப அரசாங்கத்தில சேந்ததால எதிர்க்கட்சி அரசியலுக்காகப் பேசிற பேச்சுப் போலதான் கிடக்கு. மலையகத்துக்குள்ளயும் வன்முறைகள் வெடிக்க வழிதேடிப் போடாதயுங்கோ. பிளீஸ்!

**நடுவில** இந்த போர் நிறுத்தத்த தக்கவைச்சிருக்கிறதால கொலைகளும் மரணங்களும் கணிசமாக் குறைஞ்சிருக் கெண்டு சொல்ஹெய்ம் அறிக்கை விட்டிட்டுப் போனார். அடுத்தநாளே ஒரு கொலை விழுகுது. விழுந்ததைக் கூடக் காதில விழுத்தாத மாதிரி இருந்திட்டுப் போறார். சண்டை வந்து செத்தாத்தான் 'சா'. மற்றதெல்லாம் 'சீ'எண்ட பேச்சு அவை வர முன்னம் ஒண்டு, வந்திருக்கேக்க இன்னொண்டு போன பிறகு எத்தினையோ எண்ட கணக்கில மனிசர் மண்டையப் போடினம். எதையும் கண்டு கொள்ளாமல் இவை இப்பிடிக் கதை சொல்லினம். யாருக்கு என்ன நடந்தாலுஞ் சரி, தங்களுக்கு நோபல் பிறைஸ் கிடைச்சிட வேணுமெண்டுதான் தெண்டிக்கினம் போல ஏதோ, சமாதானம் சமாதானமெண்டு சாக்காடாய் ஆக்கிப் போடாட்டால் சரிதான்.

**'எழுதிச்** செல்லும் விதியின் கை எழுதி மேற்செல்லும்' எண்டதை மாத்தி, கொலைகள் இப்ப அடுக்கடுக்காய் நடந்தபடியிருக்கு. கிழமைக்கு ஒண்டெண்ட ரேட்டுக்கு வந்திட்டுது. கிழக்கில மட்டுந்தான் யுத்த மீறல் மற்ற இடங்களில சுத்த மீறல் எண்ட கதைய எத்தின நாளைக்கு நம்பிறது? யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம் எண்டெல்லாம் தேசியமயமாயிட்டுது கொலைகள். பிள்ளையோட போறனெண்டும் பாக்காமல் சுட்டு வீதியில போட்டிட்டுப் போற அளவுக்கு மனிதாபிமானம் இங்க கொடி கட்டிப் பறக்குது. சவப்பெட்டிக் கடைக்காறனுக்கு செத்தால்தான் யாவாரமெண்டது போல, பத்திரிகைகளுக்கும் இப்ப படுகொலைகள் நல்ல புதினங்களாப் போச்சுது. படுகொலை நடந்தால் படம் போட்டுச் செய்தியெழுதிறவை, அதுகளைக் கண்டிச்சு ஒரு வரி எழுதினமோ வெண்டால், இல்லை. பிள்ளைக்கு முன்னால தந்தை கொலையாகிற காலம். பரிதாபம் அனுதாபமெல்லாம் மரத்துப் போன சமுதாயம்! என்னாகுமோ ஏதாகுமோ!

**இந்தியக்** கடற்படைத் தளபதி திருகோணமலையைப் போய்ப் பாத்திட்டுச் சொன்ன விஷயம் கொஞ்சம் ஸ்ரோங்காத்தான் கிடக்குது. திருமலைத் துறைமுகத்துக்கு இந்தியப் பாதுகாப்புத் தேவைப்படுமெண்டிருக்கிறார். அதோட, திருகோணமலை எண்ணைக் குதங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறதால அங்க இந்திய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியிருக்குதெண்டிறார். இலங்கைப் பிரச்சினையத் தீர்க்க இந்தியா உதவினால் அது இந்தியாவுக்கும் நல்ல தெண்டிருக்கிறார். இதுக்கு நடுவில இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் வேற அடுத்த மாசம் கைச்சாத்திடப்படலாமெண்டு ஒரு கதை. என்ன விளங்குதெண்டால், வெள்ளைக்காறரைக் கொஞ்சம் தள்ளியிருக்கச் சொல்லிப்போட்டு அயல்நாட்டார் அருகில வரப்போகினம் போல. சமாதானம் எண்டது கானல் நீராத் தள்ளிக்கொண்டு போனால், அள்ளித்தாறனெண்டு யாரெண்டாலும் வருவாங்கள் தானே. வரவை நல்வரவாக்கிக் கொள்ளுறது எங்க ஆக்களின்ர பக்குவத்திலதான் இருக்கு. பொறுத்திருந்துதான் பாக்க வேணும்.

**தமிழர்கள்** இனி அடங்கிப் போக முடியாதெண்டு மன்னார் ஆயர் சொன்னதாத் தமிழ்ப் பத்திரிகையொண்டில தலைப்புப் போட்டிருந்திச்சுது. தமிழ்ச் சனத்தில பாதி வெளிநாட்டுக்குப் பறந்து அடைக்கலம் எடுத்திட்டுது. சனத்தொகை சரியாக் குறைஞ்சு போச்சுது. தமிழ்ச் சமூகத்துக்குத் தலைவர்களெண்டிருந்தவையெல்லாம் மேல போய்ச் சேந்திட்டினம். இனிமேல் சாதுக்களாய் இருக்கிறவைதான் வழிகாட்ட வேணும். அடங்கிப் போறமோ என்னமோ, முடங்கிப் போயிடாமலெண்டாலும் காப்பாத்தினாச் சரி! தலைமை குடுத்தா. அறிக்கைகள் அடங்கிப் போயிடும்.

**சட்ட** விரோதக் கடைகளை அகற்றுவதே சட்ட விரோதமெண்ட சர்ச்சை வலு சுவாரசியமாத்தான் கிடக்கு. வீதிகளை விஸ்தரிக்க வேணும்தான். ஆனால் பேமென்ற் கடைக்காறரும் பிழைக்க வேணுமெல்லோ. இந்தா எடுத்தன் கவிட்டனெண்டில்லாமல், அவையளுக்கும் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்து குடுத்துக்கொண்டு வீதியை விஸ்தரிச்சாலென்ன?

# விளம்பரப்பகுதி

## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.



## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

25.09.2004 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**0208767800 4 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513


## நடேஷ்வராலய கலைவிழாவில் தென்னிந்திய பாடகர்

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் அரங்கில், நடேஷ்வராலய நுண்கலைக் கல்லூரியின் இரண்டாம் வருடக் கலைவிழா நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நிகழ்ச்சிக்குத் தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர் திரு.வி.ஆர்.மாணிக்கவிநாயகம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். கலைநிகழ்ச்சிகளில் 192 மாணவர்கள் பங்கு கொள்கின்றனர். பல .சை, பரத, வாத்திய நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
☎ 067-2250349


# தோட்டத் தொழிலாளியின் மகன் ஒருவரின் பகிரங்கக் கடிதம்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அன்பு வணக்கம்.

நாட்டு மக்களின் உணர்வுகளை அறிந்து, புரிந்து கொண்டு அவர்கள் மகிழ்ச்சியில் வாழக் கூடியவாறு சேவை செய்வதே ஒரு நாட்டின் தலைமையின் தலையாய கடமை என்பதை தாங்கள் அறிவீர்கள்.

ஆனபடியினால் உங்கள் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டுவருவதில் பூரிப்படைகிறோம்.

தற்போது நம் நாட்டின் சகல பொருள்களின் விலை வாசிகளும் கூடிக்கொண்டே போகிறது. மறுபுறம் இறக்குமதி செய்கின்ற பொருள்களின் விலையும் சர்வதேச மட்டத்தில் அதிகரிக்கிறது. இதனால் உங்கள் தலைமையிலான கூட்டு அரசு பல சிரமங்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது என்பதும் உண்மைதான். அதேவேளை தற்போது உள்ள அரசு மலையகப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் நன்றி உணர்வோடு நினைவு கூருகிறோம்.

இருப்பினும் நம் நாட்டின் தேசிய வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதில் மலையகத் தோட்டத் தொழிலாளிகளின் பங்கு சொல்லில் அடங்காது. தனது வாழ்வையும் உடலையும் கூடத் தியாகம் செய்துகொண்டு நம் நாட்டின் மீது அன்புடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், இவர்களின் உழைப்புக்கு ஏற்ற சம்பளம் கிடைப்பதில்லை என்பதை நினைத்தால் நாமும் ஒரு தொழிலாளியின் மகன் என்னும்போது மிகவும் மன வேதனையைத் தருகிறது. அதுவும் அட்டைக் கடியினால் இரத்தத் தியாத்துடன் கூடிய 8 மணி நேர் வேலை.

அதிலும் மலையகத் தலைமைகள் இவ்விடயத்தில் மௌனம் சாதித்துக்கொண்டு வருவது புரியாத புதிராக உள்ளது. மக்கள் நம்பியவர்களிடையே பனிப்போர் நடைபெறுகிறது. அரசின் பங்காளியான ஜே.வி.பி.யினரும் தோட்டத் தொழிலாளிக்கு அடிப்படைச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். இவ்வேளையில் தொழில் அமைச்சர் 400ரூபா கொடுக்க முடியும் எனவும் கூறியுள்ளார். தகைமை இல்லாத தலைமைகள் சிலர் பதவிகள் கிடைத்தால் போதும் என்ற நோக்கம் உடையவர்களாக உள்ளார்கள். இதில் ம.ம.மு. தலைவர் பி.சந்திரசேகரன் அண்மையில் தனிப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுபோய் உள்ளார். தோட்டத் தொழிலாளிக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படைச் சம்பளத்தை கொடுக்க வேண்டும் என்று.

இதற்கும் முஸ்லிம் கட்சிகளும், தமிழரசுக் கட்சிகளும் ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார்கள். ஓரளவு ஆதரவு கிடைத்ததாக நாம் அறிகிறோம்.

இந் நிலையில் மேன்மை தங்கிய ஜனாதிபதியாகிய தாங்கள் இதில் உடன் தலையிட்டு தொழில் அமைச்சரையும், முதலாளிமார் சம்மேளனத்தையும், மலையகத்தின் சகல தொழிற் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களையும் இணைத்துப் பேசி அதி வறுமையில் வாழ்கின்ற தொழிலாளர்களின் எண்ணப்படியே வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கேற்ப சம்பளத்தைப் பெற்றுத் தருமாறு சகல தோட்ட தொழிலாளர்கள் சார்பிலும் உங்களிடம் அன்புடன் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வழங்கினால் உங்கள் அரசு நீடித்து அரசு நடத்தக் கூடிய ஆசீர்வாதத்தை இறைவனும், ஆதரவைத் தோட்ட தொழிலாளர்களும் வழங்குவார்கள் என்பது உறுதி என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி.

இப்படிக்கு பணிவுள்ள,
தோட்டத் தொழிலாளி
ஒருவரின் மகன்,
வெலிஓயா ஜேசுதாஸ்.
(வெலிஓயா சமூக
அபிவிருத்தி ஒன்றியம், அட்டன்)


## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சூப்பர் மார்க்கெட்டுக்கு பணியாளர்கள் தேவை. கிராம சேவகர் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

Jeyakody Super Market,
No. 75, Jeyaratna Road, Negambo.



Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

# மலையான மாந்திரீக சக்தி
# கை கண்ட பலன் பெற




பேராசிரியர்
கருணாகரபூஷணம்
உலக மலையாள மாந்திரீக
ஜோதிட சக்ரவர்த்தி

எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

பிரிந்தவர்கள் ஒன்றுசேர, திருமணம் கைகூட, காதலில் வெற்றிபெற, பிரயாண தடை நீங்க, வியாபாரம் விருத்தியடைய, கல்வி ஞானம் பெற, கூந்தல் வளர, இளநரைக்கு திட்டவட்ட ஔஷதம் பெற, கூந்தல் கறுக்க, இன்னும் பல தேவைகளுக்கு தெட்டத்தெளிவான ஜாதகம் எழுதிக்கொள்ள, இப்படியான பல பிரச்சினைகளுக்கு தெய்வீக அருள் ஆசியுடன் வெற்றி பெற்றோர் எத்தனை எத்தனையோ, மாந்திரீகர்கள் இருந்தாலும் வாடிக்கையாளர்கள் என்னை தேர்ந்தெடுப்பதன் காரணம் எனது வேலையின் புனிதத்தன்மையே. முடியாத வேலைகள் இங்கு பாரம் எடுப்பது கிடையாது.



**ரமேஸ்வரன், லண்டன்:**
**கனம் பேராசிரியர் ஐயா அவர்களுக்கு வணக்கம்!**
எனது 28 வயதில் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்த கலியுகக் கடவுள் தாங்களே. ஐயா கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார். கலியுகத்தில் நான் மானிட உருவத்திலேயே மானிடருக்கு நன்மை செய்வேன் என்று. என்னைப் பொறுத்தவரை இக் கலியுகத்தில் தாங்களே பரமாத்மா, எங்களை ஆபத்தில் இருந்து காப்பாற்றும் ஆபத்சகாயன் தாங்கள்தான் என்று திடமாகக் கூறுவேன் தங்களின் அற்புத சக்தியை விளக்க வார்த்தைகளே இல்லை ஐயா! தாங்கள் எந் நேரமும் உச்சரிக்கும் ஆதிபராசக்தி என்ற மந்திரத்தை நானும் உளப்பூர்வமாக உச்சரிக்கின்றேன். மேலும் மேலும் தங்களுடைய ஆசீர்வாதம் எனக்கு வேண்டும். தாங்கள் பாதங்களில் என் நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.



**கணேசமூர்த்தி ஜீவலதா, கனடா:**
**கனம் பேரன்புக்குரிய கருணைமிகு ஐயா!**
பலகோடி வந்தனங்களை நன்றியுடன் தெரிவிக்கின்றேன். ஐயா எனது திருமணம் பல வருடங்களாகத் தடைப்பட்டு நின்றதால் எனது பெற்றோர் கவலையுற்றிருந்த போது தங்களிடம் வந்து பரிகாரம் செய்த பின்பு எனக்கு நலமுடனே திருமணம் நடந்தது. திருமணம் நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. எனக்கு ஒரு மழலைச் செல்வமும் உண்டு. நாங்கள் கனடாவில் சுபீட்சமாக வாழ்கின்றோம் என்பதை இத்தால் அறியத் தருவதுடன் ஐயாவுக்குப் பலகோடி நன்றிகள்.

**அப்துல் ஹமீட், கொட்டாவ:**
கடவுள் வடிவில் அவதரித்த ஐயா அவர்களுக்கு எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்துல் ஹமீட் ஆகிய நான் அறியத் தருவது என்னவெனில், நான் தங்களிடம் தொழில் விருத்திக்கும் நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கும் மாந்திரீக பரிகாரங்கள் செய்துகொண்டேன். அதன் பின் எனது வாழ்வில் பல மாற்றங்கள் நிகழ்ந்ததை எனது உள்ளத்தால் உணரக் கூடியதாக உள்ளது. எனது வியாபாரமும் நன்கு விருத்தியடைந்து நான் நோயிலிருந்து விடுதலை பெற்றுள்ளேன் என்பதை இத்தால் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத் தருகிறேன்.

**சபேசன், மட்டக்களப்பு:**
**பேராசிரியர், டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்களுக்கு!** நான் உங்களிடம் தொலைபேசியில் ஆலோசனை கேட்டபொழுது எனது பிறந்த நேரத்தினைக் கணித்துத் தரும்படி கூறினேன். ஐயா! என்னைப் பொறுத்தவரை ஆழம் தெரியாமல் காலை விடமாட்டேன். என்றாலும் எனக்கு வயது 33 ஆகிறது. இந்தக் காலத்தில் உங்கள் துறையில் சேவை புரிபவர்களிடம் ஆராய்ச்சி செய்து இக்கலையில் எனக்கு கிடைத்த பலன் ஒன்றும் இல்லை. அன்றாடங் காய்ச்சியிடம் ஆலோசனை கேட்பதைத் தவிர்த்துக்கொள்கிறேன். தங்களையும் ஏனோதானோவென்று ஆராய்ச்சி செய்யவே வந்தேன். நடந்தது என்ன அற்புதமாக இருக்கின்றது. உங்கள் கதிரையில் அமர்ந்தபோது என் வாழ்க்கை சரித்திரத்தையும் நான் சொல்ல வந்த காரியத்தையும் செய்ய வந்த காரியத்தையும் சில நொடியில் கூறினீர்கள். நிச்சயமாக நான் கூறுகிறேன், என் வேலை பூர்த்தியாகுமென்று. தங்குதடையின்றி உங்கள் பணத்தை நான் வங்கியில் செலுத்துவேன். ஆசீர்வாதத்திற்குரிய தசாவதானி ஐயா அவர்களே! என் பிரச்சினையை மின்சார வேகமாகச் செயற்பட வைக்குமாறு உங்களை நான் கேட்கிறேன். எத் துறையிலும் தேர்ச்சிபெற்றவர்களிடம் சென்றால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை என்று எனக்கு இன்றுதான் தெரிகிறது.

**சித்தி பாத்திமா:**
**அன்புள்ள ஐயா!**
எனது மகளுக்கு எத்தனையோ வரன்கள் வந்தும் இன்று, நாளை என்று திருமணம் நடக்காமல் இருந்தது. அதே நேரத்தில் எங்கள் உறவினர்களிடம் இது விடயமாகப் பேசிக்கொண்டிருந்த போது ஐயாவிடம் போய் ஆலோசனை கேட்டு பரிகாரம் செய்து பாருங்கள். அவர் நிவர்த்தி செய்து தருவார் என்றார்கள். அதேபோல் நாங்கள் 28.06.2002இல் உங்களிடம் வந்து கலந்து அதற்குரிய சாந்தி பரிகாரங்களைச் செய்து கொடுத்தீர்கள். இத்தனையாம் திகதிக்குள் திருமணம் நடக்கும் என்றீர்கள். அதேபோல் ஐயாவின் அமுதவாக்கால் சொன்னது போல் 11.10.2002இல் காலை 11.21க்கு திருமணம் நிறைவேறியது. தற்போது ஒரு ஆண் குழந்தையும் உண்டு. ஐயா! குழந்தை எந்த நேரமும் அழுதுகொண்டே இருக்கின்றது. இரவில் பயந்து எழும்புகின்றது. உங்கள் அருளால் இதையும் செய்து தருவீர்கள் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதோடு, ஐயாவுக்கு எனது கோடான கோடி நன்றியுடன் தங்கள் சேவை மேலும் வளர எங்கள் குடும்பம் அனைவரும் 'துவா' செய்கின்றோம்.

**வித்யா ஜேர்மனியிலிருந்து:**
அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஐயா அவர்களுக்கு வித்யா எழுதிக்கொள்வது. மனித ரூபத்தில் வந்த கடவுள் நீங்கள். உங்களை என் உயிர் உள்ளவரை மறக்கமாட்டேன், வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை வரைக்கும் போக இருந்த என்னை இன்று மிகவும் சந்தோஷமான வாழ்க்கையை அநுபவிப்பதற்கு வழிகாட்டி, எனக்கு சகல உதவியையும் ஸ்ரீதுர்க்கை அம்மன் அருளைக் கொண்டு என் கணவரை அன்பாகவும் ஒற்றுமையாகவும் இருப்பதற்கு உதவி புரிந்த ஐயா உங்களுக்கு எனது ஆயிரம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் விபூதி பிரசாதமும் போட்டோவும் அனுப்பியுள்ளேன். நாங்கள் எல்லோரும் சீக்கிரம் வருகிறோம். கணவருடன்தான். உங்களை வந்து சந்திப்பது கொஞ்சம் சிரமம் தான். எப்படியும் வருவேன். உங்கள் ஆசீர்வாதத்தை என்றும் வேண்டி நிற்கிறேன். மேலும் உங்களின் பணி தொடர ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

**மகேந்திரன், வெள்ளவத்தை:**
**டாக்டர் ஐயா அவர்களுக்கு!**
எனது மகன் எனது பணிவன்பான ஐயா அவர்களைச் சந்திப்பதற்குமுன் தேவையற்ற சினேகிதம், கல்வியில் குறைவு ஆகியவற்றால் எனது மனநிலை பாதிக்கப்பட்டது. ஐயா அவர்களிடம் எனது குறையைச் சொன்னேன். நீங்கள் இதற்கு வேண்டிய பரிகாரம்செய்து தந்தீர்கள். அதன் பின் ஒரு கிழமையாக அட்டகாசம்பண்ணி ஓய்ந்துவிட்டார். பரீட்சை எடுக்கமாட்டேன் என்று இருந்த அவரை பரீட்சைக்கு அனுப்பி ஏதோ அடிப்படைச் சிந்தனையைப் பெற்றுக் கல்வியில் சித்தியடைந்தார். சினேகிதர்களைக் குறைத்தார். இதற்குப் பின்னர் தற்போது 23.05.2004 அன்று தொடக்கம் மீண்டும் என்னோடு வெறுப்பாகவும் படிப்பினைத் தொடராமல் குழப்பியும் பழைய நிலைமையை உருவாக்குகின்றார். எனது மனம் மிகுந்த வேதனை அடைந்துள்ளது. ஐயா அவர்களே! எனது மகனை மீண்டும் பழைய நிலைமைக்கு உருவாக்கித் தருமாறு கேட்கிறேன். எனது மகன் என்னை முற்றாக வெறுப்பது போன்ற உணர்வு தென்படுகின்றது. எனக்கு மூன்று குழந்தைகள் உண்டு. இவர் கடைசி மகன். உங்களையே நம்பி இருக்கிறேன்.

**குறைம், சுவிஸ்:**
**அன்புள்ள சாமி ஐயா** அவர்களுக்கு பணிவுடன் எழுதிக்கொள்வது யாதெனில், நான் என்னுடைய வருத்தம் சம்பந்தமாகத் தங்களுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு எனது வேதனையைத் தங்களுக்குத் தெரிவித்தேன். தாங்களும் என் மீது கூடிய கவனம் செலுத்தி ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளுடன் எனக்கு உதவி செய்தீர்கள். அதன் பின்பு என்னுடைய வேதனைகள் மிகவும் குறைந்துள்ளது. எனவே தங்களையும் ஸ்ரீ துர்க்கை அம்மனையும் எப்பொழுதும் வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**யோகராஜா, நோர்வூட்:**
அன்பு உள்ளம் கொண்ட மேன்மைதங்கிய ஐயா அவர்களுக்கு யோகராஜா எழுதிக்கொள்வது, கடந்த ஐந்து வருட காலமாக எனது மனைவியாகிய ராஜலட்சுமிக்கு பேய் கோளாறு, மனப்பயம், திடீரெனக் கீழே விழுதல், கணவனை காட்ட முடியாது. இப்படிப் பல துன்பங்கள். எனக்கு கண்கண்ட தெய்வமாகிய உங்களிடம் வந்து என் மனைவியைக் காட்டிப் பிராயச்சித்தம் பெற்றுக்கொண்டேன். ரூபாய் 25,000 செலவு செய்ததில் எனக்குக் கிடைத்த பெறுமதி இது. இப்போது நான் மிக நிம்மதியாகவே இருக்கின்றேன். ஐயா அறிவது எனது உயிர் இருக்கும் வரை உங்களை மறக்கமாட்டேன். மாதாந்தப் பூஜையில் கலந்துகொள்வேன் இது உறுதி.

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N)J.P .**
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

**நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சிகளை முடுக்கிவிடும் நோக்கோடு இலங்கை வந்து கொழும்புக்கும் கிளிநொச்சிக்குமிடையில் அலைக்கழிந்துவிட்டு விரக்தியோடு நாடு திரும்பிவிட்டார். இந்த விஜயம் பற்றியும் புலிகளின் புதிய நிலைப்பாடு பற்றியும் கொழும்பிலிருந்து வெளிவரும் "சண்டே டைம்ஸ்" ஆங்கில வாரப் பத்திரிகையின் அரசியல் பட ஆசிரியர் எழுதிய இந்த விமர்சனம் கடந்த 19ஆம் திகதி அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இட நெருக்கடி காரணமாக ஒரு சில பந்திகளைத் தவிர ஏனையவை இங்கே முழுமையாகப் பிரசுரிக்கப்படுகின்றன.**

## இன்னொருவர் பார்வையில்

# மேலும் மேலும் மேலும்

1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்திருந்தன. 1986ஆம் ஆண்டு சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தன பெங்களூருக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது இங்கு விடயங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த இந்தியர்கள், புலிகளையும் பெங்களூர் வருமாறு வற்புறுத்தினர். கொழும்பு அரசாங்கத்துடன் தொடர்புகொண்டமைக்காக ஏனைய சகல தமிழீழ இயக்கத் தலைவர்களைப் போக்கிரிகளென்றும், துரோகிகளென்றும் புலி இயக்கத் தலைவர் வர்ணித்த அன்றைய நிலையில், புலி இயக்கம் அரசுடன் பேசப் போகிறதாவென ஏனைய தமிழீழ அமைப்புகள் யாவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தன. வடக்கு, கிழக்கு யுத்த களங்களில் ஈழத்தை வென்றெடுப்போமென்று புலிகள் அமைப்பு அப்போது தம்பட்டமடித்தது.

அக் காலத்தில் செல்லிடத் தொலைபேசிகளோ சர்வதேச நேரடித் தொலைபேசி வசதிகளோ இல்லை. ஆனால், வானொலி மூலமான தொடர்களை இலகுவில் பெறக் கூடியதாக இருந்தது. தமிழ்க் குழுக்கள் பாக்கு நீரிணைக்கு அப்பாலுள்ள தமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு வானொலித் தொடர்புகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. இவற்றைப் பயன்படுத்தி ஏனைய குழுக்களின் உரையாடல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. ஏனைய தமிழ்க் குழுக்கள் இந்த வானொலித் தொடர்பு உரையாடலை ஒட்டுக் கேட்கின்றனவென்பது அனைத்துக் குழுக்களுக்கும் தெரியும்.

பெய்ருத்திலுள்ள யசீர் அரபாத்தின் பெக்கா பள்ளத்தாக்கிலுள்ள பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்ற டக்ளஸ் தேவானந்தா ஒருநாள் தனது வானொலிக் கருவி மூலம் புலிகளின் சம்பாஷனையைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் புலிகள் பெங்களூருக்குப் போவார்களா என்பதை அறிந்துகொள்வதில் அப்போதிருந்த இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகியவை ஆவலாக இருந்தன. புலிகளின் கடும்போக்காளர்கள் சிலர் பேச்சுவார்த்தைக்குப் போகக் கூடாதென்ற அபிப்பிராயம் கொண்டிருந்தனர். அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தார். சென்னையில் ஓரளவு வசதியான பெசன்ற் நகரின் அடையார் பகுதியில் அப்போது பாலசிங்கம் வசித்துவந்தார். கடும்போக்காளர்களிலொருவரான திலீபன் நிலைமையை அறிவதற்காக வானொலிக் கருவி மூலம் அன்ரன் பாலசிங்கத்தோடு தொடர்பு கொண்டார்.

**திலீபன் :-** அண்ணை நீங்கள் பேச்சுவார்த்தைக்குப் போகப் போகிறீர்களா?

**பாலசிங்கம் :-** ஆம். பேச்சுவார்த்தைக்குப் போகப் போகிறோம்.

**திலீபன் :-** அப்படியானால் நாம் எமது மக்களுக்கு என்ன சொல்வது? சிங்கள அரசாங்கத்தை நம்ப முடியாதென்றும் ஆயுதப் போராட்டத்தையே நாம் நடத்துவோமென்றும் எமது மக்களுக்கு எப்போதுமே சொல்லி வந்திருக்கிறோம்.

**பாலசிங்கம் :-** நாம் எமது கோரிக்கைகளை முன்வைத்து எமக்கு என்ன வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுவோம். இல்லையேல் நாம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

**திலீபன் :-** எமது கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் என்ன செய்வது?

**பாலசிங்கம் :-** நாம் மேலும் கோரிக்கைகளை முன்வைப்போம்.

புலிகள் பேச்சுக்கு வருவதாகப் பாசாங்கு செய்வார்கள். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும், ஒலிவர் ட்டுவிஸ்ரைப் போல, மேலும்..... மேலும்..... மேலும் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக இந்த உரையாடலை டக்ளஸ் தேவானந்தா சொல்லுவார். புலிகள் டக்ளஸ் தேவானந்தா மீது கொண்டிருக்கும் வெறுப்பு ஒன்றும் பெரிய இரகசியமல்ல. நேற்றுக் காலையில்தான் புலிகள் புத்தளத்தில் அவரது முக்கியமானவர்களில் ஒருவரான தம்பித்துரை சிவகுமாரன் என்பவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். டக்ளஸின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான இவர், தெல்லிப்பளையிலிருந்து பாதுகாப்புத் தேடி புத்தளத்திலுள்ள ரத்மலியாய கிராமத்துக்கு இடம்பெயர வேண்டியிருந்தது. புலிகளின் பிஸ்டல் குழு அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டது. தேவானந்தா கூறியதை உறுதிப்படுத்தும் வகையில் புலிகளின் நடவடிக்கை அன்று மட்டுமல்ல, இன்றும் அதே போலத்தான்.

ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் ஆகியவற்றின் தலைமைத்துவத்தைக் கெட்டித்தனமாக அழித்தொழித்த புலிகளால், எவ்வளவுதான் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டபோதும் ஈ.பி.டி.பி.யை அழிக்க முடியவில்லை.

அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமர்ப்பித்த யோசனைகளுக்குப் பதிலாக 2003ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி தமது ஆவணமாகப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை முன்வைத்தனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மறுநாளே இதற்குப் பதிலளித்தது. எவ்வாறாயினும் ஐ.தே.மு.வின் பேச்சாளரான ஜீ.எல்.பீரிஸ் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளோடு அரசாங்கத்தின் யோசனைகளையும் சேர்த்துக் கலந்துரையாடலாமென்பதை ஆர்வமின்றித் தெரிவித்திருந்தார். பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமும், அரசாங்கத்தின் யோசனைகளோடு சேர்த்து புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பற்றியும் பேசலாமெனத் தெரிவித்திருந்தது. ஆனால் பின்னர் புலிகள் வேறொரு நிலைப்பாட்டை எடுத்தனர். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றி மட்டுமே பேச வேண்டும். இல்லையேல் பேச்சுவார்த்தையே இல்லையென்று தெரிவித்துவிட்டனர். புலிகளைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதற்காகச் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் மற்றொரு நடவடிக்கையை எடுத்தது. முதலில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேசுவோம் என்று கூறிய அரசாங்கம், இறுதித் தீர்வு போன்ற ஏனைய விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு முன்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையா அல்லது சுயாட்சி அதிகாரசபையா முதலில் நிறுவப்பட வேண்டுமென்பது பற்றி எதுவும் கூறாமல் மௌனம் சாதிக்க விரும்பியது. எனினும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையோடு சேர்த்து இறுதித் தீர்வு பற்றியும் பேச வேண்டுமென்று ஜே.வி.பி. விடாப்பிடியாக வலியுறுத்தியது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேச முடியாதென்று அது முன்னர் எடுத்திருந்த கடும்போக்கு நிலைப்பாட்டிலிருந்து மாற்றம்பெற்ற நிலை இதுவாகும்.

புலிகள் இப்போது மற்றுமொரு தந்திரத்தை மேற்கொண்டனர். பிரதம நிறைவேற்று அதிகாரியைப் போலப் புலிகளின் நாளாந்த விடயங்களைக் கையாளும் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன், தனது இயக்கம் நெகிழ்ச்சித் தன்மையோடு நடந்துகொள்ளத் தயாராக இருப்பதாக இவ்வாரம் தெரிவிருந்தார். நோர்வேயிடமிருந்தும் நிதியுதவி களைப் பெறும் தேசிய சமாதான சபை, தமிழ்ச்செல்வனைச் சந்திக்க தென்னிலங்கைப் பத்திரிகையாளர் குழுவொன்றினை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்ற வேளையில், சரியான நேரத்தைப் பாவித்து இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. நோர்வேயின் சமாதானத் தரகர் எரிக் சொல்ஹெய்ம் சில நாட்கள் பிந்தி வன்னிக்குச் செல்லவிருந்த வேளையில், எவ்வித சந்தேகங்களும் கொள்ளாத தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களிடம் சரியான நேரத்தில் இக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இது உரிய தருணத்தில் முன்வைக்கப்பட்ட நாடி பிடித்தறியும் நடவடிக்கையாகும். சமாதான சபை இப் பத்திரிகையாளர்களைக் கெட்டித்தனமாக நல்லதொரு சவாரிக்கு எடுத்துச் சென்றுள்ளது.

இதன் தொடர்ச்சியாகத் தெரிவிப்பது போல கீழ்க்கண்டவற்றை மட்டுமே 'தமிழ்நெற்' குறிப்பிட்டுள்ளது.

தென்னிலங்கைப் பத்திரிகையாளரொருவருக்கு அளிக்கப்பட்ட ஓர் பேட்டியென மிக இலாவகமாகக் குறிப்பிடுகின்றது. தமிழ்ச்செல்வன் கூறியது என்னவென்றால், 'புலிகளின் யோசனைகள் நெகிழ்ச்சித் தன்மையற்றவையோ, இறுதியானவையோ அல்ல இவை பற்றிப் பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்பட வேண்டும்' இவ்வாறு 'தமிழ் நெற்' தெரிவித்தது.

எனினும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு **முன்னர்** அரசாங்கம் மாற்று யோசனைகளை முன்வைக்கக் கூடாதென்றும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளே அடிப்படையாக இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார் என்றும் தமிழ்ச்செல்வனை மேற்கோள் காட்டித் 'தமிழ் நெற்' தெரிவித்தது. கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த வார்த்தைகளே இங்கும் எதிரொலித்தன.

எனவே, 'தமிழ்நெற்' கூறியது, கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தவை, தமிழ்ச்செல்வன் சொன்னதெல்லாம் இவர்களின் முன்னைய நிலைப்பாட்டிலிருந்து பாரியதொரு மாற்றமாகும். "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கட்டாயம் நிறுவப்பட வேண்டும்.

அதனை நிறுவுவதற்கான யோசனைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினூடாகத் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ளனஎன்று தமிழ்ச்செல்வன் கடந்த மாதம் "சண்டே டைம்ஸ்"ஸுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

அவரின் சொந்த வார்த்தைகளில் கூறுவதானால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்பட வேண்டுமென்பதே அவரின் கூற்றாகும்.

எனவே, இதனைப் புதிய வார்த்தைகளில் மீண்டுமொரு முறை கூற வேண்டியுள்ளது. பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு **முன்னர்** அரசாங்கம் மாற்று யோசனைகளை முன்வைக்கக் கூடாது. அவர்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் இதுதான். பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட **பின்னர்**, அரசாங்கம் மாற்று யோசனைகளை முன்வைப்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எனவே, சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்திறங்கும்போது புலிகள் அழுங்குப் பிடியாக இல்லாமல் நெகிழ்ச்சித்தன்மையோடு விட்டுக்கொடுக்க விருப்புடையவர்களாக உள்ளனர். இந்த நிலைப்பாட்டினால் சந்தோஷமடைந்த சொல்ஹெய்ம், தெற்கில் ஓர் இணக்கப்பாட்டை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும் புலிகளைத் தாக்கும் தமிழ்க் குழுக்களுக்கு உதவுவதைப் படையினர் நிறுத்த வேண்டுமென்றும் சொல்கிறார். புலிகளும் கிழக்கில் கொலைகளை நிறுத்த வேண்டுமென்றும், அவர் கூறுகிறார். சொல்ஹெய்ம் இந்தப் பலமான ஆலோசனையைக் கூறிவிட்டுத்தான் கொழும்பிலிருந்து ஒஸ்லோவை நோக்கிப் புறப்பட்டார். கொழும்பில் அவர் சகலரையும் சந்தித்தார். ஆனால், பிரபாகரனைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. புலிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரியை மட்டுமே அவரால் சந்திக்க முடிந்தது.

"எங்குமே விரக்தி காணப்படுகிறது. அரசாங்கத்துக்குள்ளும் புலிகளிடமும் மக்களிடமும் விரக்தி காணப்படுகிற" என்று நாட்டை விட்டுப் புறப்படும்போது உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

சமாதானப் பேச்சின் இந்தத் தேக்க நிலையில், நோர்வேக் காரர்கள் மீதும் விரக்தியே கொண்டுள்ளோமென்று கூற முடியும். சமாதானத்தைப் பொறுத்து அவர்கள் எதனையும் செய்யவில்லை. இலங்கை வெளிக்களத்தில் என்ன நடைபெறுகிறதென்பதைப் பார்ப்பதற்காக இடைக்கிடை இந்த நாட்டுக்கு விஜயம் செய்யும் சொல்ஹெய்ம் போன்ற கீழ்நிலைச் செயற்பாட்டாளரொருவர் திறமையானவர் அல்லரென்பதை வெளிப்படையாகவே நிரூபிக்கிறார்.

அப்படியானால் உண்மையில் என்ன நடக்கிறது? இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை முதலில் ஏற்படுத்திவிட்டுப் பின்னர் பேச்சுவார்த்தை நடத்தலாமென்ற புலிகளின் விட்டுக்கொடுக்காத போக்குக்கு உலகளாவிய அங்கீகாரம் கிட்டவில்லையென்பது புலிகளுக்குத் தெரியும். சமாதானம் கிட்டுமென்று நினைப்பவர்கள் கூடப் புலிகளின் நிலைப்பாடு எந்த வகையிலும் நியாயமற்ற தென்றே கருதுகின்றனர். இதற்கு நிச்சயமாக எந்தவொரு சுயகௌரவமுள்ள அரசாங்கமும் இணக்கம் தெரிவிக்கமாட்டாது. புலிகள் நெகிழ்ச்சித் தன்மையற்றவர்களென்ற கொழும்பு அரசாங்கத்தின் கருத்தை நோர்வே ஏற்றுக்கொள்வதைப் புலிகள் விரும்பவில்லை. புலிகள் விட்டுக்கொடுப்புகளின்றி அழுங்குப் பிடியாக உள்ளனரென்று நியூயோர்க்குக்குச் சென்று சந்திரிகா குமாரதுங்க உலகுக்குச் சொல்வதும் அவர்களுக்கு விருப்பமில்லை.

கொழும்பு அரசின் மீது பழியைப் போடுவதிலேயே புலிகள் விருப்புடையவர்களாக உள்ளனர். இப்போது எழுதப்படாத புதிய பேரம் முன்வைக்கப்பட்டுள்ளது. புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பற்றிப் பேசலாமென அரசைச் சம்மதிக்கச் செய்வதற்குப் புலிகள் சமிக்ஞைகளை அனுப்பியுள்ளனர். அது ஏற்றுக்கொள்ளப்பட்டதும் புலிகள் அரசாங்கத்தின் யோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தயாரென்பதே அதுவாகும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கம் மாற்று யோசனைகளை முன்வைக்கக் கூடாதென்று கூறுவதன் மூலம் மிகக் கவனமாகத் தனது வார்த்தைகளை வெளியிட்டுள்ளார் தமிழ்ச்செல்வன். பின்னர் மாற்று யோசனைகளை முன்வைப்பதென்பது வேறொரு விடயம் போலத் தெரிகிறது.

மேலும், ஏதாவது பேச்சுவார்த்தைகளைத் தொடருவதற்கு முன்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவ வேண்டுமென்ற புலிகளின் நிலைப்பாடு இப்போது கைவிடப்பட்டுள்ளதென்பதே உண்மையில் இதன் அர்த்தமாகும். பேச்சுவார்த்தைகளின் மூலம் தமக்குச் சாதகமானவற்றை ஏற்படுத்தும் ஒரு முயற்சியே இதுவாகும். அரசாங்கத்துக்குத் தாம் அடிபணியவில்லையென்று தமது ஆட்களுக்குக் காட்ட விரும்புகின்றனர். அதேவேளை, தாம் அழுங்குப் பிடியாக இல்லையென்றும் விட்டுக் கொடுக்கத் தயாரென்றும் உலகுக்குக் காட்ட விரும்புகின்றனர்.

**அடுத்த வருடம், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் வரை சமாதான வழிமுறையை இழுத்தடிப்பதிலேயே இப்போது புலிகள் ஈடுபட்டுள்ளனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் மீண்டுமொருமுறை பேச்சுக்கு அழைக்கப்படும் வரை இழுத் தடிப்பதே அவர்களின் நோக்கம் என் கிழக்குத் திமோரில் ஏற்பட்டதைப் போன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கவே அவர்கள் விரும்புகின்றனர். அதாவது கிழக்குத் திமோரைப் போலத் தமக்கொரு தனிநாடு கிடைக்கப்போகிறதென்று உலகுக்குக் காட்டுவதே அவர்களின் நோக்கம். மாதக் கணக்காக, வருடக் கணக்காகப் பேச்சுகளை இழுத்தடித்த பின்னர் தனித் தேசமென்ற அந்தஸ்தை அவர்கள் கோருவர் என்கிறார் தேவானந்தா**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முகாமிலுள்ள புறாக்களுக்கு மத்தியில் பூனையை விடுகின்ற செயல் இது. புலிகளின் புதிய நிலைப்பாட்டினை ஜனாதிபதி குமாரதுங்க ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தென்னிலங்கைச் சமூகம் அழுத்தம் கொடுக்குமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஜனாதிபதியே தனது ஆதரவாளர்களுக்கு இதனை ஜே.வி.பி. எவ்வாறு விளக்குமென்பது கேள்விக்குறிதான். ஏற்கெனவே பல்வேறு விடயங்களில் விட்டுக் கொடுத்தமைக்காக அக் கட்சி அழுத்தங்களுக்கு இலக்காகியுள்ளது.

புலிகள் தமது மங்கிப்போன பெயரை நிலைநிறுத்துவதற்காக உலகளாவிய இயக்கமொன்றினை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். இதற்காகப் பிரதம நிறைவேற்று அதிகாரி தமிழ்ச்செல்வன் விரைவில் ஐரோப்பா செல்லத் திட்டமிட்டுள்ளார். இதைத் தவிர புலிகளின் சகல நடவடிக்கைகளுக்கும் மதிப்புமிகு தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரியிடமிருந்து பலத்த எதிர்ப்பு எழுந்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீது புலிகள் பிரயோகிக்கும் நிர்ப்பந்தம், அச்சுறுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கனடாவில் புலிகள் நடத்தவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்ச்சியைத் தடைசெய்யுமாறு கனடிய அரசாங்கத்தை ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.

திருவாளர்கள் ஆனந்தசங்கரி, தேவானந்தா, கருணா போன்றவர்கள் புலிகளுக்கும் அவர்கள் பெரிதாகத் தூக்கிப் பிடிக்கும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டுக்கும் பெரும் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளனர். தனது நோக்கத்துக்கேற்ப காலத்துக்குக் காலம் புலிகள் தமது நிலைப்பாட்டினை மாற்றுவது பற்றிய 1986ஆம் ஆண்டுக் கதையை மக்களுக்குச் சொல்லிவருவதை தேவானந்தா விட்டுவிடவில்லை. தனது ஆட்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற ஒரு நிலையிலும் கூட அவர் அடக்கப்பட முடியாதவராகவே உள்ளார்.

"அடுத்த வருடம், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் வரை சமாதான வழிமுறையை இழுத்தடிப்பதிலேயே இப்போது புலிகள் ஈடுபட்டுள்ளனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் மீண்டுமொருமுறை பேச்சுக்கு அழைக்கப்படும் வரை இழுத் தடிப்பதே அவர்களின் நோக்கம் என்று" தேவானந்தா கூறுகிறார்.

"கிழக்குத் திமோரில் ஏற்பட்டதைப் போன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கவே அவர்கள் விரும்புகின்றனர். அதாவது கிழக்குத் திமோரைப் போலத் தமக்கொரு தனிநாடு கிடைக்கப்போகிறதென்று உலகுக்குக் காட்டுவதே அவர்களின் நோக்கம். மாதக் கணக்காக, வருடக் கணக்காகப் பேச்சுகளை இழுத்தடித்த பின்னர் தனித் தேசமென்ற அந்தஸ்தை அவர்கள் கோருவர்" என்கிறார் தேவானந்தா.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

மான்பூண்டியாப்பிள்ளையோடு சைக்கிளில், என்னைப் பார்க்க என் வீட்டிற்கு வந்திருந்த அந்த நபர், அப்போது ஸ்ரீரங்கம் நகராட்சியில் Town Planning Inspctor ஆகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் வாய்விட்டுச் சிரித்தால் வெண்கலக் கடையில் யானை புகுந்ததது போலிருக்கும் அன்பும், பண்பும்



அவரது சொல்லிலும் செயலிலும் துல்லியமாகத் துலங்கியது.பிறகு அவரை என் நாடகக் குழுவில் சேர்த்துக் கொண்டேன். மிகச் சிறப்புற நடித்து என் மேன்மைக்குக் காரணமானார். இப்போது அவர் இருக்கும் நிலையை அப்போது நான் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை. ஆண்டவன் ஒருவனே அதை அறிந்து வைத்திருந்தான்.

அன்று என் நாடங்களில் நடித்துவரும், நகராட்சிப் பணியில் இருந்தவருமான நண்பர்தான், இன்று நைஷ்டிகபிரும்மசாரியாக திகழ்ந்து வள்ளலாரின் வாரிசாக விளங்கும் தவத்திரு ஊரன் அடிகள்.

நானறிந்த ஓர் நடிகர் இப்படி ஒப்புயர்வற்ற ஞானியாக மலருவார் என்று அந்நாளில் எங்களில் யாருமே நினைத்தில்லை.

ஸ்ரீரங்கம் உயர்நிலைப் பள்ளியின் கிளையாக, திருவானைக்காவில் ஒரு நடுநிலைப்பள்ளி இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது திரு. நடராஜ அய்யர் என்பவர் அதன் தலைமையாசிரியராக விளங்கினார். அவர் எனது நண்பர் பள்ளி மாணவர்களுக்காக ஒரு நாடகம் எழுதிக் கொடுத்து அதை இயக்கியும் தர வேண்டும் என்று அவர் என்னைக் வேண்டினார்.

நான் ஒப்பக் கொண்டேன்.

அந்த நாடகத்தின் பெயர் 'காலேஜ் குமாரி'

பள்ளி மாணவர்களிடையே, சற்று வசீகரமாகவும், சிகப்பாவும் இருந்த ஜம்பு என்கிற பையனைத் தேர்ந்தெடுத்து, நாடகத்தில் கதாநாயகி வேடத்தில் நடிக்க தினமும் பயிற்சி கொடுத்து வந்தேன்.

ஒத்திகை, தினமும் மாலை நேரத்தில் அந்தப் பள்ளிக் கூடத்தில் நடக்கும். நான் ஸ்ரீரங்கத்திலிருந்து நடந்து சென்று, முக்கால் மைல் தான் · ஒத்திகையை மேற்பார்வையிட்டு வந்தேன்.

கதாநாயகியாக நடித்து ஜம்புவின் கூட, மிகுந்த களை நிரம்பிய முகத்தோடும், கட்டுக் குடுமியோடும் ஒரு பையன் சில நேரங்களில் ஒத்திகைக்கு வந்து ஓரமாக உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பதை ஒருநாள் கவனித்தேன்.

'இந்தப் பையன் லட்சணமாக இருக்கிறானே... இவனுக்கு ஒரு வேஷம் கொடுத்தால் என்ன?' என்று ஜம்புவிடம் கேட்டேன்.

"சாரி! இவன் என் சினேகிதன்.. இந்தப் பள்ளிக்கூடத்துல படிக்கல்லே... பாடசாலையிலே வேதாத்தியயனம் பண்ணிண்டிருக்கான்.. சும்மா என்கூட ஒத்திகையைப் பார்க்க வந்திருக்கான் சார்! இவனுக்கு நாடகம்னா ரொம்பப் பிடிக்கும்..." என்று ஜம்பு என்னிடம் விளக்கிச் சொல்லவே, அந்தப் பையனை நாடகத்தில் பயன்படுத்தும் யோசனையை நான் கைவிட வேண்டியதாகி விட்டது.

இந்த ஜம்பு என்கின்ற சிறுவன்தான், பிற்காலத்தில் சிவாஜி அவர்களுக்கும், நடிகர் பாலாஜிக்கும் மிக நெருக்கமாகிப் படத்துறையில் நடிகனாகவும், தயாரிப்பு மேற்பார்வையாளனாகவும். விளங்கியவர். அந்த ஜம்புவின் மகள்தான் திரையுலக நட்சத்திரம் இளவரசி.


அதுசரி, ஜம்புவோடு வந்த அந்த வேத பாடசாலைப் பையன் யார் தெரியுமா?

இன்று காஞ்சி காமகோடி பீடத்தின் அதிபதியாக விளங்கும் ஜகத்குரு புதுப்பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

(தொடரும்.......)




உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து ஆரம்பிப்போம்......




### சில அநுபவங்கள்

தன்னுடைய வார்த்தைகளுக்கு நேரு மதிப்புக் கொடுப்பார் என்பது அவருக்குத் தெரியும். நேருவின் வாதங்களை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு பாஜ்பாய் அமைதியாகச் சொன்னார் :

"பண்டிட்ஜி, உங்கள் மனோபாவம் சரிதான். ஆனால் வெளிநாடுகளில் எனக்குள்ள அநுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். வெளிநாடுகளில் செயற்படும் எந்த நாட்டுத் தூதரகமும் உளவாளிகளை வைத்துக்கொள்ளாமல் செயற்படவில்லை என்பது எனக்குத் தெரியும். சில நாட்டுத் தூதர்களே உளவாளிகளாகவும் இருந்ததை நான் அறிவேன்."

நேரு கேட்டுக்கொண்டார். அவருடைய முகத்தில் கவலைக் குறி படர்ந்தது. காந்திய நெறியில் வளர்ந்து உருவானவர் நேரு. அரசியல் நியாயங்கள், தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை என்கிற கோட்பாடு அவருக்கு உடன்பாடானது அல்ல.

ஆயினும் பாஜ்பாய் அனுபவ ரீதியாகச் சொல்லும் யோசனையை அவரால் புறக்கணிக்கவும் முடியவில்லை. ஒருவாறு பாஜ்பாயின் யோசனையை நேரு ஏற்றுக்கொண்டார்.

சர்வதேச உறவுகள் அனைத்தும் தர்ம நியாய அடிப்படையில் அமைவதில்லை என்கிற நடைமுறை உண்மை எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும் அதை ஏற்று செயல்படுவதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. ஏனெனில் வல்லரசுகளில் இருந்து சிறிய நாடுகள் வரை அனைத்துமே சர்வதேச உறவுகளில் இரட்டை வேடம் போடுவதை எவராலும் மறுக்க முடியாது.

சுதந்திர பாரதத்தின் நிர்வாக அமைப்பில் உளவுத் துறை ஓர் முக்கிய அங்கமாயிற்று.

### கை மேல் பலன் :


உளவுத்துறை சிறப்பாக அமைந்து செயல்பட அனுமதித்ததின் பலனை விரைவிலேயே உணரமுடிந்தது. நம்மிடமிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தான் தன்னுடைய இராணுவத்தின் துணையோடு காஷ்மீர எல்லைக்குள் கலகக்காரர்களை அனுப்பி குழப்பம் விளைவிக்க முயன்றது. உடனே இந்திய அரசு விழித்துக் கொண்டது. கலகக்காரர்கள் ஊடுருவிய பகுதிகளில் நம்முடைய உளவாளிகள் நுழைந்தார்கள். பாகிஸ்தான் இராணுவத் துணையோடு கலகக்காலர்கள் என்னென்ன திட்டங்கள் உருவாக்குகிறார்கள் யார் யார் பாகிஸ்தானுக்கு உடந்தையாக நம்முடைய நாட்டில் செயல்படுகிறார்கள்? இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் இரகசிய திட்டங்கள் என்ன? என்பவற்றையெல்லாம் இவர்கள் கண்டறிந்து இந்திய அரசுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். இது கலகக்காரர்களின் ஊடுருவலைச் சமாளிக்க நமக்குப் பேருதவியாக இருந்தது.

வெளிநாடுகளிலிருந்த நம்முடைய தூதரகங்களில் உளவு பார்க்கும் நிபுணர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

(தொடரும்.......)

# இணையத்தளத்தில் சிறுவர் பாலியல்

எக்ஸ் என்று வைத்துக்கொள்வோம். இவருக்கு இப்போது 16 வயதாகின்றது. சில வருடங்களுக்கு முன்பதாக இவர் ஒரு பாடசாலை மாணவனாக இருந்தபோது இவரது பெயர், வயது, விலாசம் போன்ற விபரங்கள் அப் பாடசாலையில் குறித்து வைக்கப்பட்டிருந்தது.



இன்றும் கூட இவர் தொடர்பான சகல விபரங்களுடன், மார்புப் பகுதி திறந்த இவரது புகைப்படம் இணையத்தளத்தில் காணப்படுகின்றது. ஆனால், விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது. அதாவது தென்பகுதியிலுள்ள ஒரு ஹோட்டலின் விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு விசேடமான குறிப்பும் காணப்படுகின்றது. அதாவது இவருடன் சுதந் திரமாக பொழுதைக் கழிக்க விரும்புபவர்கள் மேற்படி ஹோட்டலுக்கு வருகை தரும்படி குறிக்கப்பட்டுள்ளது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பதாக சிங்கப்பூரில்



இருந்து வெளிவருகின்ற ஒரு பத்திரிகையில் சிறுமியர்களுடன் விபசாரத்தில் ஈடுபட வேண்டுமானால் தாய்லாந்துக்குச் செல்ல வேண்டும் என்றும் ஆண் சிறுவர்களுடன் இருக்க விரும்புவர்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டும் எனவும் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்த விளம்பரத்தினால் அன்றைய இலங்கை சமூகம் பாரியளவில் பதற்றமடைந்தது. எனினும் இலங்கையில் விபசாரத்தில் ஈடுபட்டுள்ள ஆண்களது தகவல்களைக் கொண்ட 600 இணையத்தளங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் இது தொடர்பில் எவரும் பதற்றம் அடைவதில்லை. ஆக சிறுவர் விபசாரத்தின் எண்ணக்கரு இதன் மூலம் தெளிவாகின்றது.

இந்த வருடத்துக்குள் இலங்கைக்கு வருகை தருகின்ற உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையை 10 இலட்சமாக அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது. கடந்த காலங்களில் இத் தொகைக்கு அண்மித்த ஒரு தொகையினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரிப்பதுடன் சிறுவர் பாலியல் விற்பனைச் சந்தையும் வலிமையடைகின்றது.

குறிப்பாக, இலங்கையின் தென்பகுதிக் கடற்கரையோரங்களில் அமையப்பெற்றுள்ள தங்குமிடங்களில் வியாபித்துக் காணப்படுகின்ற சிறுவர் விபசாரச் சந்தை தொடர்பில் எவருமே அக்கறை கொண்டு செயற்படுவதாக இல்லை. ஏனெனில், இவை மிக நுட்பமான ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. அத மட்டுமல்லாது இச் சந்தையின் செயற்பாடுகள் இலங்கையைத் தாண்டி ஐரோப்பிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள பிரபலமான உல்லாசப் பிரயாண நிறுவனங்களுடன் தொடர்புபட்டவையாகவும் இருக்கின்றன.

ஒன்றுக்கு ஒன்று போட்டியான வகையில் விலைகளும் பிற வசதிகளும் கொண்டு இணையத்தளங்களில் சிறுவர் பாலியல் சந்தை செயற்படுத்தப்பட்டு வருவதுடன் தான் விரும்பிய சிறுவர்களை இணையத்தளத்தின் மூலமே ஒதுக்கிக்கொள்ளவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

உலகில் எந்தப் பகுதியில் இருந்தாலும் கூட 'கிறெடிட் காட்' மூலம் பணம் செலுத்தி சிறுவர்களை ஒதுக்கிக் கொள்ள இயலும் என ஓர் இணையத்தளம் கூறுகின்றது. அதுமட்டுமல்லாது கடல் சவாரிகள், விருந்துபசாரங்கன் போன்ற இதர வசதிகளும் கூட இதன் போது செய்து கொடுக்கப்படுவதாகவும் இணையத்தளங்கள் கூறுகின்றன.

ஆசிய உல்லாசப் பிரயாணத்துறையைப் பொறுத்த வகையில் பல மட்டங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் அதிகக் குளிரில் இருந்து சற்று விடுபடும் நோக்கத்துடன் வருகின்ற உல்லாசப் பிரயாணிகள் இதில் கீழ் மட்டத்தினராவர். இவர்கள் தான் மிக அதிகமாக தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் வருகின்றனர். இம் மட்டத்தைக் கொண்ட உல்லாசப் பிரயாணிகளுடன்தான் விபசாரச் சந்தை பெரும்பாலும் உல்லாசப் பிரயாணத் துறையுடன் ஒட்டிக்கொண்டு வருகின்றது.


எனினும் ஐரோப்பாவில் உள்ள முன்னேற்றம் கொண்ட உல்லாசப் பிரயாணத்துறை நிறுவனங்களின் மூலம் பெரும்பாலும் தங்களது விமானங்களில் குடும்பத்துடன் உல்லாசப் பிரயாணங்களில் ஈடுபட்டு வருகின்றவர்கள் விடுமுறையைக் கழிப்பவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

இவர்களில் மூலம் ஒரு நாட்டின் உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்சி பெறுகிற அநேகமான நாடுகளில் இவர்கள் கௌரவத்துடன் வரவேற்கப்படுகின்றனர்.

இவ் வகை உண்மையான உல்லாசப் பிரயாணிகள் சிறுவர் பாலியல் விற்பனை போன்ற துச்சமான செயல்களில் ஈடுபடுவது மிகவும் குறைவாகும்.

ஆகவே, இவ் வகை உயர்நிலை உல்லாசப் பிரயாணத்துறையை வளர்த்தெடுப்பதன் மூலம் சிறுவர் பாலியல் விற்பனைச் சந்தையை ஒழிக்க இயலும் என்றாலும் ஐரோப்பிய நாடுகளில் செயற்பட்டு வரும் மிக முக்கிய ஊடகமான இணையத்தளங்களில் இலங்கை சிறுவர் பாலியல் விற்பனைச் சந்தையின் முக்கிய இடமாகச் சித்திரித்துக் காட்டப்பட்டு வருகிறது.

இந்தச் சிறுவர் பாலியல் விற்பனைச் சந்தை இணையத்தளங்களில் பெரும்பாலும் மிகவும் நுட்பமான வகையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் தலைவர்கள் அல்லது நடத்துநர்கள் மிகச் சிலரேயாவர் அனைத்து நடவடிக்கைகளும் இணையத்தளத்தின் ஊடாகவே மேற்கொள்ளப் படுகின்றன.



இலங்கையில் சிறுவர் பாலியல் தொழில்கள் பெரும்பாலும் இலங்கைக்கு வெளியில் இருந்தே செயற்படுத்தப்பட்டு வருவதால், இச் சிறுவர்கள் மூலம் நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு. இவ் வகையான நோய்களுக்கு இப்போதே தாய்லாந்து முகங்கொடுத்து வருகின்றது. இதே நேரம் சர்வதேச ரீதியில் பாதுகாப்பற்ற உல்லாசப் பிரயாணத்துறையாக இலங்கை உல்லாசப் பிரயாணத் துறை பிரபல்யமாகி வருகிறது.

இன்றைய நிலையில் விபசாரத் தொழிலை உல்லாசப் பிரயாணத் துறையில் இருந்து முற்றாக ஒதுக்கிவிட இயலாது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். எனினும் பல்வேறு அனர்த்தங்களைக் கொண்டுவரக் கூடிய அந்தச் சிறுவர் பாலியல் விற்பனைச் சந்தையைக் கட்டுப்படத்தா விட்டால் உல்லாசப் பிரயாணத்துறை தொடர்பில் இந்த நாடு கொண்டிருக்கும் உயர் எதிர்பார்ப்புகள் சவாலுக்கு உட்படக்கூடும் என்பது நிச்சயமாகும்.

-பாரூக்

# இதய அஞ்சலிகள்

தில்லையடியிலுள்ள கட்சி அலுவலகத்தில் மக்களைச் சந்தித்துவிட்டு தனது இரண்டு வயதுக் குழந்தையுடன் சைக்கிளில் வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலிகளால் சுடப்பட்டார். குழந்தைக்கு காயங்கள் எதுவும் இல்லாதபோதும் குழந்தையின் கண் முன்னாலேயே தந்தை மீது துப்பாக்கியால் சுடப்பட்டு அப்பா படுகொலை செய்யப்பட்ட காட்சி எவ்வளவு கொடுமையானது என்பதை மனித நேயமிக்கவர்கள் உணர்ந்துகொள்ளுவது அவசியமாகிறது.


அடுத்தடுத்து எமது தோழர்களைப் புலிகள் சுட்டுச் சரிப்பதால் எந்நாளும் இறப்புச் செய்திகளே என்றாகிவிட்டது. சமாதானம் பேசி அரசியல் படுகொலை செய்யப்படும் கொடூரம் இலங்கையில்தான் நடக்கிறது. துப்பாக்கிகளுக்குப் பயந்து மௌனித்திருக்கும் மக்களே உங்கள் உதடுகள் திறக்கும்போதுதான் கொல்லப்பட்ட எங்கள் தோழர்களினதும் அப்பாவி மக்களினதும் ஆத்மாக்கள் சாந்தியடையும். அதுவரை தோழனே! இரத்தம் குடிப்போர் குடிக்கட்டும் எங்கள் மக்கள் பணி தொடரும் தோழரே! உன்னைச் சாய்த்தவர்களால் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் அழிக்க முடியாது என்பதை தோழர்கள் நாங்கள் எந்நாளும் எடுத்துரைப்போம்.

**மனைவி, பிள்ளைகள், தோழர்கள்.**



பவானின் புகழுடலுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அஞ்சலி செலுத்தும் காட்சி

பிறப்பு 16 04 1963



அழிப்பு 18 09 2004

## தம்பித்துரை சிவகுமாரன்
## (தோழர் பவான்)

*யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர்களில் ஒருவரும், புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் கட்சியின் மூத்த உறுப்பினருமானவர்*

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 03 1936

இறப்பு 05 10 1998



## அமரர் கந்தசாமி இரத்தினம்

**திதி**: 28.09.2004

அன்னையே!
ஆறு வருடங்கள் உன்னைப்
பிரிந்து
ஆறாத்துயரில் அழுது
புலம்புகிறோம்
தாயே நீ தந்த
இந்த ஜென்மத்தில்
இடைநடுவே நீ பிரிந்ததால்
வாடிய முகங்களோடு
வாழ் நாளெல்லாம் வாழ்கிறோம்
தெய்வமாகிப் போனவரே
உங்களின் நீங்காத நினைவுகள்
எந்நாளும் எங்களை
நல்வழிப்படுத்தும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

**தகவல்: அப்பன் (லண்டன்)**




சக்தி சக்தி சக்தீ சக்தீ
சக்தீ என்றே ஆடோமோ?
சக்தி சக்தி சக்தீ யென்றோ –
தாளங்கொட்டிப் பாடோமோ?

சுப்பிரமணிய பாரதியார்–



# பாம்பை மணந்த பெண்ணின் கதை



ஓர் ஊரில் ஒரு பிராமணன் தன் மனைவியுடன் வாழ்ந்த வந்தான். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. அதனால் அவர்கள் மிக்க கவலையுடன் இருந்தனர். அவர்கள் கடவுளுக்கு சிறப்புப் பூஜைகள் செய்தனர். அவர்கள் செய்த பூஜையின் பலனாக அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தோ பரிதாபம்! அது ஒரு பாம்பு.

எல்லோரும் அந்தப் பாம்பைக் காட்டில் விட்டுவிடுமாறு அவர்களிடம் கூறினர். ஆனால், அந்தப் பிராமணப் பெண்ணோ அதை மறுத்தாள். பாம்பாக இருந்தாலும் அது தன்னுடைய குழந்தை என்றும், கடவுள் எதைக் கொடுத்தாலும் அதை தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவள் நினைத்தாள்.

அந்தப் பெண், தன் குழந்தையாகிய பாம்பின் மீது அன்பைப் பொழிந்து கண்ணும் கருத்துமாக அதை வளர்த்து வந்தாள். வருடங்கள் கழிந்தன. அக்கம் பக்கத்தில் நடக்கும் திருமணங்களைப் பார்க்கும் போதெல்லாம், அந்தப் பெண்ணின் மனதில் கவலை வளர்ந்தது. அவள் தனக்கும் ஒரு நல்ல மருமகளைத் தேடினாள்.

"ஒரு பாம்பை யார் திருமணம் செய்து கொள்வார்?" என்று பிராமணன் தனது மனைவியிடம் கவலையுடன் கேட்டான். ஆனால் அவள் மனம் சமாதானமடையவில்லை. அவள் தினமும் அழுதுகொண்டிருந்தாள். அதனால் அந்தப் பிராமணன் தனது பாம்பு மகனுக்குப் பெண் தேடிப் புறப்பட்டான். அவன் நாடு முழுவதும் அலைந்து திரிந்து இறுதியில் தனது நண்பன் ஒருவன் இருக்கும் ஊரை அடைந்தான்.

பிராமணனின் நண்பன் அவனை அன்புடன் வரவேற்றான். அவனது நலம் விசாரித்தான். பிறகு அவன் பிராமணனிடம் அவனது பயணத்தின் நோக்கத்தைக் கேட்டான்.

அதற்கு பிராமணன், "நான் என் மகனுக்கு, பெண் தேடிக்கொண்டிருக் கிறேன்" என்று கூறினான்.

"எனக்கு ஒரு மகள் இருக்கிறாள், அவளை உன் மகனுக்கு மணமுடித்துத் தருகிறேன்" என்று பிராமணனிடம் அவன் நண்பன் சொன்னான்.

அதற்கு பிராமணன், "என் மகனை நீ பார்க்க வேண்டாமா?" என்று கேட்டான்.

உடனே நண்பன் தனது மகளை அழைத்துவரச் செய்தான். அவளோ தன் தந்தையின் முடிவை ஏற்பதாகவும், பிராமணனின் மகனை மணமுடிக்க சம்மதிப்பதாகவும் கூறினாள்.

அதனால் பிராமணன் அந்தப் பெண்ணை தனது ஊருக்கு அழைத்து வந்தான். அவள் அழகைக் கண்டு வியந்த ஊர்மக்கள், அவள் பாம்பை திருமணம் செய்யக் கூடாது என்று அவளிடம் கூறினார்கள்.

"ஒரு பெண் ஒரு முறையே மணமுடித்துக் கொடுக்கப்படுகிறாள். அதனால் நான் அவரையே மணப்பேன். என் தந்தை பிராமணனின் மகனுக்கு என்னைத் தருவதாக அவரிடம் வாக்களித்துவிட்டார். அதனால் பிராமணனின் மகன் பாம்பாக இருந்தாலும் கூட நான் அவருக்கு எதிராகச் செயல்படமாட்டேன். பாம்பைத் திருமணம் செய்ய வேண்டும் என்பது என் தலைவிதி என்றால் அப்படியே நடக்கட்டும். நான் பெற்றோர் சொல்லையே கேட்பேன்" என்று அந்தப் பெண் மறுமொழி கூறினாள்.

அப்பெண் கூறிய இப்பதிலால் அந்த ஊர் மக்கள் வாயடைத்துப் போனார்கள். பிராமணன் மகனுடன் அவளது திருமணம் விரைவில் நடந்தேறியது. அவள் தன் கணவனுடன் அன்புடன் வாழ்ந்து வந்தாள்.

ஒரு நாள் இரவு அவள் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவளுக்கு ஒரு வினோதமான ஒலி கேட்டது. அவள் கண் விழித்துப் பார்த்தபொழுது அவள் அருகில் ஓர் அழகான வாலிபன் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவள் உடனே அச்சம்கொண்டு அங்கிருந்து ஓட முயன்றாள்.

"ஏய்! ஏன் பயந்து ஓடுகிறாய்? நான் உனக்கு எந்தத் தீமையும் செய்யமாட்டேன். என்னைத் தெரியவில்லையா? நான்தான் உன் கணவன்!" என்று அந்த இளைஞன் புன்னகையுடன் அவளிடம் கூறினான்.

ஆனால், அவன் கூறியதை அவள் நம்பவில்லை. அதனால் அவன் பாம்பின் உடலினுள் புகுந்து மீண்டும் இளைஞனாக வெளியே வந்தான். அதைக் கண்டு அவள் மிக்க மகிழ்ச்சியடைந்தாள். அவள் மணந்து கொண்ட பாம்பு உண்மையில் ஓர் அழகிய இளைஞனாவன்.


தனது மருமகளின் படுக்கையறையிலிருந்து ஓர் ஆண்குரல் ஒலிப்பதைக் கேட்டு பிராமணன் அதிர்ச்சியடைந்தான். அவன் பல நாட்கள் விழித்திருந்து பார்த்து, ஒரு நாள் உண்மையைத் தெரிந்துகொண்டான். உடனே அவன் தன் மகளின் அறைக்குள் புகுந்து அங்கிருந்த பாம்பின் உடலை எடுத்து "இந்த உடலில் நீ மீண்டும் புகுவதை நான் விரும்பவில்லை" என்று கூறியபடியே அதை நெருப்பில் போட்டான்.

அன்றிலிருந்து பிராமணனும், அவன் மனைவியும் தமது மகனுடனும், மருமகளுடனும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

அதனால் நீங்களும் அந்தப் பெண்ணைப்போல என்ன நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பாப்பா முரசு சிறுகதை

## கழுதையும் கட்டெறும்பும்



கட்டெ றும்பு ஊர்ந்து ஊர்ந்து
கழுதை அருகில் சென்றதாம்.
கழுதைக் காலில் ஏறி ஏறிக்
காதுப் பக்கம் போனதாம்.


காதில் புகுந்து மெல்ல மெல்லக்
கடித்துக் கடித்துப் பார்த்ததாம்.
காள்கா ளென்று கழுதை கத்த
கட்டெ றும்பு மிரண்டதாம்!

காதி லிருந்து தரையை நோக்கிக்
கர்ணம் போட்டுக் குதித்ததாம்

அந்தச் சமயம் பாரததுக் கழுதை
அதன்மேல் காலை வைத்ததாம்.

காலில் சிக்கிக் கொண்ட எறும்பின்
கதை முடிந்த போனதாம்!

# அதிசய உலகம்




இங்கிலாந்தில் உலகக் கிண்ணப் பந்தயங்கள் நடந்த மைதானங்களில் ஒன்று கேன்டர்பரியில் ஓல்ட் ரிவர் ரோட்டில் இருக்கும் செயின்ட் லாரன்ஸ் மைதானம். இங்கே பந்தய மைதானத்திற்குள்ளேயே ஒரு மிகப் பிரம்மாண்டமான எலுமிச்சை மரம் இருக்கிறது. எல்லைக் கோட்டுக்குச் சில மீட்டர் தூரம் உள்ளேயே இருக்கும் இந்த மரத்தின் மீது பேட்ஸ்மன் அடிக்கும் பந்து பட்டாலே போதும்... அடித்த வீரருக்கு நாலு ரன்கள் வழங்கப்பட்டு விடும்! இது, அந்த மைதானத்தில் போட்டிகள் நடந்தால் பல காலமாய் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கண்டிஷன்களில் ஒன்று!.

நாய்க்கு மோப்ப சக்தி அதிகம் என்பது தெரிந்தே. ஒட்டகத்திற்கு பார்வைச் சக்தி மிக அதிகம்.... அது தெரியுமா?

உலோகங்களில் வெள்ளிக்கு நல்ல மருத்துவச் சக்தி உள்ளது. வெள்ளி பக்றீரியாக்களைச் சாகடிக்கும். மிக மிக மெல்லிய வெள்ளித் தகட்டை காயத்தின் மீது கட்டினால் புண் விரைவில் ஆறும். வெள்ளிப் பாத்திரத்தில் ஊற்றி வைக்கப்படும் தண்ணீர் வெகு நேரத்திற்குக் கெட்டுப் போகாமல் இருக்கும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.09.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **563**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 561

**பரிசுக்குரியவர்:**
**ரி.அன்புமைந்தன்,**
**8B, பெரேரா லேன், வெள்ளவத்தை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| க. பாத்திமா ஸனா, மாங்குளம், நேரியகுளம், வவுனியா. | எம்.எம்.எம். ஹிஸாம், இல. 134A, தும்லங்க, ஹந்தெஸ்ஸ. |
| ஹனான் நௌஷாத், மஸ்ஜித் வீதி, புத்தளம். | எம். வினோத், பி.சே. மண்டல மாவத்தை பெரியமுள்ள, நீர்கொழும்பு. |
| எஸ். ஜேக்கப் ஜெனஸ், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | எஸ். தீபா, நெல்லியான் வீதி, சுழிபுரம் |
| செ. தெய்வீகன், பிரதான வீதி, புளியங்குளம், திருகோணமலை. | இ.அருட்பிரகாசம், 6ஆம் வட்டாரம், நெடுந்தீவு. |
| யோகராசா சிவாஜினி, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. | எஸ். நிவேதா கண்டி வீதி, வவுனியா. |

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடைபெற்ற ஆண்டு எது?
   1988.08.29
2. ஒளியின் வேகம் யாது?
   ஒரு செக்கனுக்கு 1,86,000 மைல்.
3. முதலாவது அணுகுண்டு எங்கே, எப்போது போடப்பட்டது?
   நியூமெக்சிக்கோ பாலை நிலத்தில் 1945யூலை 16இல்.
4. போலியோ என்பது யாது?
   இளம் பிள்ளைகளைத் தாக்கும் இளம் பிள்ளை வாத நோய்.
5. கறுப்பு அன்னங்கள் எங்கு உள்ளன?
   அவுஸ்திரேலியாவில் கிழக்குக் கரையோரத்தில்.
6. ஐக்கிய நாடுகள் சபையில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?
   135 நாடுகள்.
7. இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டினால் அழிந்த நகரம் எது?
   ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி.
8. அமெரிக்காவில் உள்ள இலங்கை விஞ்ஞானி யார்?
   சிறில் பொன்னம்பெருமா.
9. கிரக தூரங்களைக் கணிக்கும் சபையின் விதிகளை அமைத்தவர் யார்?
   ஜோன்போட்
10. கலத்திற்குச் 'செல்' எனும் பெயரை இட்டவர் யார்?
   றொபேட் ஹுக்.

## தகவல் பெட்டி

# எமது புதுமை



உலகில் எத்தனையோ நாடுகளில் இடம்பெறும் அதிசயங்கள், புதுமைகள் தொடர்பான புகைபடங்கள், விபரங்கள் பலவற்றை நாம் எமது நாட்டில் பிரசுரமாகும் பத்திரிகை வாயிலாக அறிந்திருப்போம். அதே போல் எமது நாட்டுச் சிறப்பம்சங்களும் பிறநாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரமாகலாமில்லையா? ஆம். ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வெளியாகும் 'கலீஜ்டைம்' என்ற பத்திரிகையின் IN TO THE SEA என்ற தலையங்கத்தில் பிரசுரமான இந்தப் புகைப்படம் தொடர்பான விளக்கத்தில் இலங்கையின் சரித்திரப் புகழ் வாய்ந்த காலி கோட்டையில் இருந்து கடலில் குதிக்கும் இளைஞன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.


# கையில் ஃபோன்



நடமாடும் தொலைபேசிகளின் மற்றொரு புரட்சியே இது. தொலைபேசியின் பாகங்களைத் தனது ஆடையின் கையில் பொருத்தியுள்ளதோடு கேட்கும் கருவியை ஆடையின் கொலரின் ஊடாக காதில் பொருத்தியுள்ளார். அது மட்டுமல்ல, எம்.பி. 3 இசைத் தட்டுக் கேட்கும் கருவியும் இதில் அடக்கம்.


# செப்டெம்பர் 11ஐ புதுமையான முறையில் நினைவு கூரல்

செப்டெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் பலியானவர்களை நினைவு கூருமுகமாக 300 முட்களைத் தனது அங்கத்தில் குத்திக்கொள்ள கனடா வாசியொருவர் முடிவெடுத்துள்ளார். பிரான்ட் போபாட் என்ற 35 வயதான இவர் கனடா வினிபெக் நகரவாசியாவார். பிரான்ட் தனது சரீரத்தில் முதல் முள்ளை குத்தியது செப்டெம்பர் 11ஆம் திகதி காலை 9.46க்கு. அது இதற்கு மூன்று வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தில் ஏற்பட்ட முதல் தாக்குதல் நேரமாகும்.




இந்த அதிசயப் பூட்டு, பாதுகாப்பாக ஒன்றைப் பூட்டி வைப்பதற்காக உருவாக்கப்பட்டதல்ல. உலக சாதனை புரிவதற்காகவே உருவாக்கப்பட்டது. பாகிஸ்தானில் உருவாக்கப்பட்ட இப் பூட்டு 10 அடி உயரமும் 4 1/2 அடி அகலமும் கொண்டது.

இப் பூட்டைத் திறப்பதற்காகப் பாவிக்கப்படும் திறப்பின் நிறை 120 கிலோகிறாம். இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்படும் என இதனை வடிவமைத்தவர்கள் நம்புகிறார்கள்.



# அதிசய பூட்டு



# பிரயாணத்திற்கல்ல; நீராடுவதற்கு

இங்கிலாந்தில் உருவாக்கப்படும் மினி கூபர் மோட்டார் வாகனங்கள் உலகில் பிரபல்யமானவை. இந்த அபூர்வ மினி கூபர் கார் உருவாக்கப்பட்டிருப்பது பிரயாணத்திற்கன்றி நீராடுவதற்கே என்று சொன்னால் மிகையாது. அதற்குக் காரணம் 6 மீற்றர் நீளமுள்ள இக் காரில் இடம் இருவருக்கு மாத்திரமே. ஆனால் காரின் பின்புறத்தில் மிகவும் சௌகரியமாக ஒருவர் குளிப்பதற்கு வசதியான குளியல் தடாகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

# சினி விசிட்

## அருண் இயக்கத்தில் சூர்யா!

'நியூ' படத்தின் இறுதிக் கட்டப் பணிகளில் கூடமாட ஒத்தாசையாக இருந்து, ஓடியாடி வேலை செய்து கொடுத்த நடிகர் அருண் பாண்டியன், அதற்கு நன்றிக்கடனாக எஸ்.ஜே.சூர்யாவிடம் ஒரு படத்துக்கான கால்ஷீட்டைக் கோரினார். அதற்கு ஓ.கே.. சொல்லியுள்ளார் எஸ்.ஜே.சூர்யா. அருண் பாண்டியன் இயக்கத்தில் எஸ்.ஜே.சூர்யா நடிக்கும் பட அறிவிப்பு வெகு விரைவில் வரலாம்.



அஜித்
படம்: அட்டகாசம்

## களைகட்டும் பொருந்தாக் காதல்!

பொருந்தாக் காதலைக் கதைக் கருவாகக் கொண்டு பல படங்கள் உருவாவது இப்போதைய ரெண்ட். 'நியூ' படம் கூட பேரிளம் பெண்ணான சிம்ரனுக்கும், எட்டு வயது பிஸ்கோத்து பையனுக்கும் கசமுசா என்பதாகக் கதை. அடுத்து 'மீரா ஏஜ் 45' என்ற இந்திப் படம், இந்தியிலிருந்து தமிழுக்கு டப் ஆகியிருக்கிறது. இதுவும் 45 வயது அம்மணிக்கும், 15 வயதுப் பையனுக்குமான கஜகாமக்ஸ்தான்.

இதற்கிடையில் கன்னடத்தில் வெளியான 'பா... ரசிகா... பா' என்ற படம் 'வா... வாடா... மன்மதா' என்று தமிழில் டப் ஆகிறது. இதில் தன்னை விட 15 வயது குறைந்த பையனை 35 வயது முத்தல் ரம்யா கிருஷ்ணன் மோகிக்கும் கதை. இதுவெல்லாம் இயக்குநர்களின் நிறைவேறிய ஆசைகளா? நிராசைகளா?



## சிம்ரன் கர்ப்பம் வாந்தியா? வதந்தியா?

சிம்ரன் கர்ப்பம் என்ற செய்தி பரவ, இது மசக்கை வாந்தியா அல்லது வதந்தியா என்று ஒரு பட்டிமன்றமே நடந்து வருகிறது கோலிவுட்டில்... வரலாற்றையே புரட்டிப் போடும் இந்தச் செய்தி குறித்து ஆய்வில் இறங்கினால், அது வெறும் வதந்தி என்றே முடிவு கிடைத்தது.

சிம்ரன் 2005 வரை அவரே விரும்பினாலும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது. அவர் திறமை காட்டும் குளிர்பான நிறுவனத்தின் ஒப்பந்தப்படி 2005 வரை இந் நிறுவனத்துக்காக வீங்காமல், வெடிக்காமல் அப்படியே உடம்பை மெயின்டெயின் பண்ணி, அடுத்த வருடமும் சில புதிய விளம்பர கான்ஸெப்டுகளில் திறமை காட்ட வேண்டும் என்பது அக்ரிமெண்ட்.

## பாலா இயக்கத்தில் அஜித்!

பாலா இயக்கத்தில் அஜித் நடிக்க, மிகப் பிரமாண்டமாகப் படத்தை எடுக்கிறார் ஏ.எம்.ரத்னம்.

'பிதாமகனை'த் தொடர்ந்து அடுத்த படத்தை தானே தயாரித்து இயக்க இருந்தார் டைரக்டர் பாலா. ஹீரோவாக சூர்யாவையே புக் செய்தார். ஆனால் அதில் ஒரு மாற்றம். அந்தப் படத்தை இயக்கப் போவது பாலா அல்ல, ராம் சத்யா.

ராம் சத்யாவிடம் பொறுப்பைத் தந்துவிட்டு கமலுடன் சேர்ந்து ஒரு படம் பண்ணும் மூடில் இருந்தார் பாலா. ஆனால், அது கொஞ்சம் தள்ளிப் போவதால், அஜித்தை வைத்து ஒரு படத்தை எடுக்க முடிவு செய்திருக்கிறார்.

ஒரு காலத்தில் பிரேக்குக்காக ஏங்கிக்கொண்டிருந்த சூர்யா, தனது தந்தையின் விசிறியான பாலாவிடம் மனம் திறந்து பேசியதையடுத்துத்தான் 'நந்தா' கதை உருவானது. அதே போல அஜித்தும் பாலாவைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது.

அப்போதுதான் அவருக்காக நெடு நாட்களுக்கு முன்பே தான் உருவாக்கியிருந்த கதையைச் சொல்லியிருக்கிறார் பாலா.

உடனே அஜித் ஒப்புக்கொள்ள, இரு அருமையான கலைஞர்கள் சேருவதை அறிந்த ஏ.எம்.ரத்னம், உடனடியாக தானே படத்தைத் தயாரிக்க முன்வந்துவிட்டாராம்.

விரைவில் சூட்டிங்குக்குக் கிளம்புகிறார்கள்.

பாலாவின் படத்துக்குமுன் அஜித் பெரிய அளவில் நம்பியிருக்கும் படம் 'அட்டகாசம்'. 'அமர்க்களம்' என்ற அட்டகாசப் படங்களைத் தந்த சரண்தான் இதை இயக்கி வருகிறார்.


இதில் டிரைவிங் ஸ்கூல் நடத்தும் இளைஞராகவும், 'ரா'பர் பகுதியைக் கலக்கும் அடிதடி தாதாவாகவும் இரு வேடங்களாம் அஜித்துக்கு.

இதற்கிடையே அவர் நடித்து பிளாப் ஆன 'ஜனா' படத்தை தெலுங்கில் டப் செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்னேகாவுக்கு தெலுங்கில் உள்ள மார்க்கெட்டை வைத்து இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

'அட்டகாச'த்துக்கு முன்பே அஜித் கமிட் ஆன படம் 'ஜி'. ஆனால், அது ரிலீஸ் ஆகிற மாதிரியே தெரியலையே என்று விசாரித்தபோது புதிய விவரம் கிடைத்தது.

இந்தப் படத்தில் அஜித் மாணவர் தலைவராக இருந்து அரசியலுக்கு வருகிறாராம்.

இவர்கள் எடுத்து முடித்த வரை ரஷ் போட்டுப் பார்த்தபோது, 'ஆய்த எழுத்து' படத்தின் சாயல் அப்படியே இருக்க, அதிர்ந்து போய் கதையை மாத்தி, படத்தை ஆங்காங்கே ரீ-சூட் செய்துகொண்டிருக்கிறார்களாம்.



பார்த்தீபன்



பிரசாந்த்



விவேக் - சயாசிங்
படம்: சொல்லி அடிப்பேன்

தான் நடிக்கும் விளம்பரப் படங்களின் ஒப்பந்தத்தில் தனக்கும், விளம்பரம் செய்யும் பொருளுக்கும் சம்பந்தமில்லை என்று கையெழுத்துப் போட்டுவிட்டுத்தான் நடிக்கிறார் விவேக். எல்லாம் கரப்பான் பூச்சியின் கைங்கரியம்.

## ஷங்கரின் 'காதலில்' சந்தியா

ஷங்கர் தனது புதிய படத்தில் சந்தியா என்ற கேரளத்து அழகுக் கிளியை அறிமுகப்படுத்துகிறார்.

"சந்தியாவைப் பார்த்தால் பரவசப்படமாட்டீர்கள், துள்ளல் போடமாட்டீர்கள். ஆனாலும் உங்களுக்கு ரொம்பவே பிடித்துப் போகும்" என்கிறார் ஷங்கர். அவர் சொல்வது மாதிரியே, பக்கத்து வீட்டுப் பெண் மாதிரி படு இயல்பாக இருக்கிறார் சந்தியா.

ஷங்கரின் புதிய படம் என்றதும் 'அந்நியனு'க்கு அடுத்ததாக இயக்கப் போகும் படம் என்று நினைக்காதீர்கள். இது ஷங்கர் தயாரிக்க அவரது சீடர் பாலாஜி சக்திவேல் இயக்கும் படம். பெயர் 'காதல்'.

கதாநாயகியாக கேரளாவைச் சேர்ந்த சந்தியா அறிமுகமாகிறார். பார்ப்பதற்கு +2 மாணவி மாதிரி படு ஹோம்லியாக இருக்கிறார். சின்னப் பொண்ணாச்சே என்று நினைத்தால் காதல் காட்சிகளில் புகுந்து விளையாடுகிறாராம்.

அழுகைக்கு அழுகை, கோபத்துக்குக் கோபம், சாந்தத்துக்குச் சாந்தம், காமத்துக்கு காமம் என எல்லா ரோல்களிலும் கலக்கி வருகிறாராம் சந்தியா. நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு எதார்த்தமான ஹீரோயின் கிடைத்துள்ளார் என்கிறது சூட்டிங் யூனிட்.

## சிபியின் ஜொள்ளு சானல்!

உடன் நடிக்கும் அம்மணிகளிடம், தான் விடும் ஜொள்ளுகளை ஓப்பினாக ஸ்டேட்மென்ட் விட்டு, 'நான் ஒரு திறந்த புக்' என்று காட்டிக்கொள்வார் சத்யராஜ். இப்போது அவரது மகன் சிபிராஜும் அப்படி தன் ஜொள்ளு சானலை ஓப்பின் செய்கிறார். பார்க்கும் பத்திரிகையாளர்களிடமெல்லாம், 'தலைவா... ஷெரின்கூட கிசுகிசு வந்திச்சு... கிளுகிளுப்பா இருந்திச்சு... இப்போ எதையும் கிளப்பிவிடாததால் ஒரே பீலிங்கா போச்சு...' என்று சொல்லி கெக்கே யெக்கேவெனச் சிரிக்கிறார்.

---

திருவாசகத்திற்கு இசையமைத்த இளையராஜா மாதிரி, திருக்குறளுக்கு இசையமைக்கப் போவதாகச் சொல்லி வருகிறார் எஸ்.ஏ. ராஜ்குமார்.

---



சுவர்ணமால்யா



தனுஷ் - தியா
படம் : டிரீம்ஸ்

## மும்ஸ் விடுக்கும் மிரட்டல்!

'வீராசாமியில்', விஜய டி.ராஜேந்தருக்கு ஜோடியாக நடிக்கத் தொடங்கியதில் இருந்து புதுக் கண்டிஷன் போடுகிறார் மும்தாஜ்... 'இனிமேல் ஒரு பாட்டுக்கு குத்தாட்டம் போடாதே... துட்டுக்காக துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஆடாதே என்று குருஜி அட்வைஸ் பண்ணுது... அதனாலை "இனி ஹீரொயின் காரக்டர் இருந்தால் மட்டுமே தேடி வருபவர்களிடம் பேச்சு, இல்லை என்றால் வந்த வழியே ஓடிப் போய்விட வேண்டும்" என்று மிரட்டுகிறாராம். அது சரி, யார் அந்த குருஜி தெரியுமா? வேறு யார்.. விஜய டிஆர்.!தான்

## விலை மோரிலே...!

எய்ட்ஸ் குறித்து சல்மான் கான், ஷில்பா ஷெட்டியை வைத்துப் படமெடுத்திருக்கும் ரேவதி, நிஜமாகவே எய்ட்ஸ் நோயாளிகளைப் பராமரிக்கும் மையங்களைத் தத்தெடுக்கப் போகிறார். இதற்காக உலக அளவில் நிதி திரட்டி உதவ ஒரு அமைப்பைத் துவங்கப் போவதாகச் சொல்லி வருகிறார். அப்போ... பான்யன் என்ற மனவளர்ச்சி குன்றியோர் இல்லத்துக்கு உதவப் போவதாக 'ஸ்வாபிமான்' என்ற அமைப்பை துவங்கினீர்களே... என்ன ஆச்சுங்க அம்மணி? விலை மோரிலே வெண்ணெய் எடுத்து தலை மகளுக்குக் கல்யாணம் பண்ணிய கதைதானே!

---

## விவேக் பரிதாபம்!

'சொல்லி அடிப்பேன்' பட சூட்டிங்கில் நடிகர் விவேக் ஓட்டிவந்த மோட்டார் சைக்கிள் பாலத்தில் மோதியதில் அவர் படுகாயம் அடைந்தார்.

விவேக் முதன்முறையாகக் கதாநாயகனாக நடிக்கும் படம் 'சொல்லி அடிப்பேன்'. இந்தப் படத்தின் சூட்டிங் திருச்சி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. படத்தில் விவேக்குக்கு ஜோடியாக சாயாசிங் மற்றும் தேஜாஸ்ரீ ஆகியோர் நடிக்கின்றனர்.

படத்தின் பாடல் காட்சி ஒன்று திருவானைக்கால் காவிரிப் பாலத்தில் படமாக்கப்பட்டது. காட்சிப்படி விவேக் டெல்லி கணேசனுடன் மோட்டார் சைக்கிளில் வந்து பாலத்தின் ஓரத்தில் அவரை இறக்கிவிட்டு, வண்டியைத் திருப்பிக்கொண்டு வேகமாகச் செல்ல வேண்டும்.

ஆனால் டெல்லி கணேசனை இறக்கிவிட்டு, விவேக் வேகமாக வண்டியைத் திருப்பியபோது வண்டி அவரது கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிப் பாலத்தில் மோதியது. இதில் விவேக் தூக்கி வீசப்பட்டார்.

இந்த விபத்தில் காலில் காயமடைந்த விவேக், சிகிச்சைக்காகத் திருச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைக்குப் பின் இப்போது விவேக் குணமடைந்து வருவதாகவும், காலில் வலி குறைந்துவிட்டாதாகவும் படக் குழுவினர் தெரிவித்தனர்.

---

## கமலுக்கு அடுத்து விக்ரமா?

கமலின் 'மருதநாயகம்' வருவதற்கு முன்பு ஒரு சரித்திரப் படத்தில் நடித்துவிடும் முடிவில் இருக்கிறார் விக்ரம்.

தமிழ் சினிமாவில் சிவாஜியின் சிம்மாசனம் காலியானபோது, அந்த இடத்திற்கு அடுத்து யார் வருவார் என்று கேள்வி யார் மனதிலும் எழவில்லை. அனைவரின் சாய்ஸ்ஸாக கமல் இருந்தார்.

ஆனால் கமலுக்கு அடுத்து யார் என்ற கேள்வி எழுந்தபோது, பல ஆண்டுகள் பதிலே கிடைக்கவில்லை. அடுத்த தலைமுறை நடிகர் என்று வந்த விஜய், அஜித் ஆகியோர் கரம் மசாலா படங்களில் நடிப்பதிலேயே ஆர்வம் காட்டினார்கள். ஆனால் 'சேது' படத்திற்குப் பிறகு நம்பிக்கை அளிக்கும் நடிகராக விக்ரம் பரிமளிக்கத் தொடங்கினார்.

குறிப்பாக 'பிதாமகன்' படத்திற்குப் பிறகு, விக்ரம்தான் கமல் இடத்திற்குப் பொருத்தமானவர் என்று பலரும் கூறத் தொடங்கிவிட்டார்கள்.

கமலும் அதை ஆமோதிக்கும் விதமாக ஒரு விழாவில் பேசும்போது, "ஒவ்வொரு வருடமும் தேசிய விருது அறிவிக்கப்படும்போது என் பெயர் அதில் இருக்கிறதா என்று ஆர்வமுடன் பார்ப்பேன். பெயர் இல்லை என்றால் கொஞ்சம் ஏமாற்றமடைவேன்.

ஆனால் இந்த வருடம் சிறந்த நடிகருக்கான விருது விக்ரமுக்கு என்று அறிவிக்கப்பட்டபோது அந்த ஏமாற்றம் வரவில்லை. ஏனென்றால் தகுதியான ஒருவருக்குத்தான் அந்த விருது கிடைத்துள்ளது" என்று கூறினார்.

இதைக் கேள்விப்பட்ட விக்ரம், வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்ற சந்தோஷத்தில் இருக்கிறார். அதே போல் கமலின் பாராட்டைத் தக்கவைக்கும் முயற்சியாக அடுத்த படத்தைக் கவனமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இப்போது அதைப் பற்றித்தான் கோடம்பாக்கத்தில் பேச்சு.

'மருதநாயக'த்தை எடுக்காமல் சாகமாட்டேன்' என்று சபதமே போட்டுள்ளார் கமல். ஆனால் கமலுக்கு முன்பாக ஒரு சரித்திரப் படத்தில் நடித்து விக்ரம் முந்திக் கொண்டுவிடுவார் என்கிறார்கள்.

வித்தியாசமாக நடிப்பதில் கமலைப் போலவே படு ஆர்வம் கொண்ட சினிமா வெறியரான விக்ரம், தற்போது நடித்து வரும் 'அந்நியன்' படத்திற்குப் பிறகு ஒரு சரித்திரப் பின்னணி கொண்ட படத்தில் நடிக்கவுள்ளாராம்.

கிட்டத்தட்ட 'சாமுராய்' பாணி சாகஸ வீரனின் கதையாம் இது. இந்தப் படத்திற்காக இப்போதே பலவித ஆலோசனைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டாராம் விக்ரம். இந்தப் படம் தனது திரையுலக வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைய வேண்டும் என்பதில் படு கவனம் செலுத்தி வருகிறாராம் விக்ரம்.



இயக்குநர் ரமணா

'அந்நியனை' முடித்து விட்டு இந்தச் சரித்திரப் படத்தில் விக்ரம் முழு மூச்சாக இறங்கப் போகிறாராம். படத்தை மிகப் பெரும் பொருட் செலவில் எடுக்கவும திட்டமிட்டுள்ளார்களாம். படத்தைப் பற்றிய விவரங் களை மிகவும் இரகசியமாக வைத்துள்ள ார்கள். படத்தின் கதையை இன்னும் கொஞ்சம் ஷார்ப் செய்துவிட்டு வெளிப்படையாக அறிவிக்கப் போகிறார்களாம்.

வெளுத்துக் கட்டுங்க விக்ரம்!

---

## சோகத்தில் சொர்ணமால்யா!

ஒரு காலத்தில் இளமை புதுமை நிகழ்ச்சியின் மூலம் புன்னகை மன்னியாக அறியப்பட்ட சொர்ணமால்யா இப்போது சோகத்தில் மூழ்கியிருக்கிறார்.

சோகத்திற்கு சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மட்டும் காரணமல்ல; எந்தச் சினிமா உலகை நம்பி, மண வாழ்க்கை முறிந்தாலும் பரவாயில்லை என்று நினைத்திருந்தாரோ, அதே சினிமா உலகம் தன்னைக் கைவிட்டதுதான் சோகத்திற்குப் பெரிய காரணம்.

கதாநாயகியாக நடிப்பது என்ற முடிவுடன்தான் கோலிவுட்டில் களமிறங்கினார். "கல்யாணத்திற்குப் பிறகும் கவர்ச்சிக்கு ரெடி" என்றார். ஆனால் 'எங்கள் அண்ணா' வில் இரண்டாவது கதாநாயகி வேடம்தான் கிடைத்தது. அந்தப் படத்தில் பிரபுதேவாவின் ஜோடியாக நடித்தார்.

இதில் சொர்ணமால்யாவுக்கு பிரபுதேவாவின் நெருங்கிய நட்புக் கிடைத்ததே தவிர, படம் எதுவும் கிடைக்கவில்லை. பிரபுதேவாவே படம் இல்லாமல் இருக்கும்போது, நட்பை வைத்து என்ன செய்ய? பெருமாளே பஸ்ஸில் போகும்போது, பூசாரி புல்லட் கேட்டால் கிடைக்கவா போகிறது?

இதற்கிடையே போட்டோ செஷன் நடத்தி கவர்ச்சியாக எடுத்த ஸ்டில்ஸ் எல்லாம் பத்திரிகைகளுக்கு அனுப்பி அனுப்பி தாவு தீர்ந்து போனது. அடுத்து ஒரு போட்டோ செஷன் நடத்தி, தமிழில் வாய்ப்புத் தேடினாலும் கிடைக்குமா என்ற சந்தேகம் வேறு. இதனால் வேறு மொழிகளில் கவனம் செலுத்தும் முடிவுக்கு வந்துள்ளார் சொர்ணமால்யா.

---

## இயக்குநர் மகேந்திரன் மேற்பார்வை - இயக்கத்தில் சிங்களத்தில் காசி



நிரஞ்சன்
படம் : சூர்யா

கலாபவன்மணி கண் பார்வை யற்றவராக நடி

த் து வெற்றி பெற்ற 'லட்சுமியும் சரஸ்வதியும் பின்னே நானும்', தமிழில் 'காசி' யாக வெளி வந்தது. விக்ரமின் அபார நடிப்பில் வெற்றிப்படமானது.

கண் பார்வையற்ற இளைஞன், அவனுடைய தங்கை, அவனைக் காதலிக்கும் வாய் பேச முடியாத பெண், ஊர்ப் பண்ணையார் ஆகியோரை மையமாக வைத்துப் பின்னப்பட்ட கதை, இப் படம் இலங்கையில் தமிழ், சிங்கள கலாசாரத்தைப் பின்னி பிணைத்து சிங்கள மொழியில் தயாராகின்றது. இதன் பாடல்கள் இசைஞானி இளையராஜா இசையில் உருவாகியுள்ளது.

இப் படத்தை ஸ்ரீ சாயி மூவிஸ் சார்பாக திருமதி டிலுக்ஸி பெரேரா தயாரிக்கிறார்.

இப் படத்தை இயக்குவதோடு படத்தின் கதாநாயகனாகவும் தோன்றுகிறார் நிரஞ்ஜன். இப் படத்திற்கு சிங்களத்தில் 'சூர்யா' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதில் இலங்கைத் திரைப்பட உலகின் முன்னணி நட்சத்திரங்களான காஞ்சனா மெண்டிஸ், இவர்களுடன் 'பைலட் பிரேம்நாத்' என்ற படத்தில் நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன் ஜோடியாக நடித்த மாலினி பொன்சேகா முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.

இப் படத்திற்கான டைரக்ஷன் மேற்பார்வையை 'முள்ளும் மலரும்' 'உதிரிப்பூக்கள்' போன்ற வெற்றிப் படத்தைத் தந்த பிரபல இயக்குநர் மகேந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.




# எம் தலைமைக்கு

எங்களைக் கொஞ்சம் கவனியுங்கள்
நாங்கள் சமாதானப் பணியில்
சறுக்கிக் கொண்டிருக்கின்றோம்
எங்களைப் புதைக்க நினைத்தால்
புதைகுழிகளை நாங்களே
தோண்டுகின்றோம்
உங்கள் நேரங்களை வீணாக்க
நாங்கள் விரும்பவில்லை.

சுடுகின்ற பாலையாக
இருந்த எம் வாழ்க்கை இப்போது
குளிர்கின்ற சோலையாகி
இருக்கிறது.
எங்களைக் கொஞ்சம் கவனியுங்கள்
பாலும் சோறும் உண்ண வேண்டும்.
பசிக்குப் பிறந்தவர்கள் அல்ல
நாங்கள்
புசிக்கப் பிறந்தவர்கள்.

பூமித் தாய்க்குத் தாகமென்று
குருதியை நீராக்கிக் கொடுத்தீர்கள்
தரையின் தாகம் தீர்ந்தபோதும்
நீங்களே தாகத்தைத் தூண்டினால்
உங்கள் இதயங்களை ஏன்
பூட்டி வைத்துள்ளீர்கள்.
திறவுகோல் எங்கே....?
தேசம் தொலையப் போகிறது.

எம் தேசத்தில்
மரங்களுக்கு அடுத்தபடியாக
நாங்கள்
மரங்களுக்குள் மனிதத்தைப்
புதைக்க முடியாது.
மனிதர்களில் மனிதத்தையும் தேட
முடியாது.
வேண்டாம்.....

நாங்கள் இப்போதுதான்
கூரை வேய்ந்து கொண்டிருக்கிறோம்
எங்களால் மீண்டும்
வெயிலில் வேகவும் முடியாது
வேதனையில் தாழவும் முடியாது.
முடிந்தால்
எங்களைக் கொஞ்சம் கவனியுங்கள்.

*–எஸ்.எம்.ஹஸீர்,*
*வவுனியா கல்விக் கல்லூரி.*

## வேண்டுதல்

தலைப்பிட மறந்து போன
ஒரு கவிதை,
பிறந்ததும் இறந்து போனது.

சொற்களுக்குப் பதிலாக
உணர்வுகளைக் கோர்த்து
கவிதைக்குப் பதிலாக
வரைந்திருந்தேன் உன்னை

புன்னகைத்தாய், பூப்பூத்தாய்
புயலடித்தாய் - மிகவும்
அமைதியாக ஒடிக்கொண்டிருந்தேன்.

நிதானித்து மரணம் கொள்ள
எந்த தேவதையும் சபிப்பதில்லை.

அணுஅணுவாய் ஆபத்து வாங்கி
ஒவ்வொரு கலமும் இறந்துபோவதை
தெரிந்த கொண்டும்,
புன்னகைப்பது எனக்கு புதிதல்ல....!

பனிபடர்ந்து புல்வெளியும்
உடைந்த போன நிலாத்துண்டும்,
அமாவாசையில் பிறந்த எனக்கும்
பிடிக்கும்.

நேசிப்புத் தோல்விகளில்
நிதர்சனங்களைத் தொலைத்த
என்னைப் போன்றவனுக்கு,
தனியாக சூரிவனை வாடகைக்கு
அமர்த்தும் உன் கருணையை
வியந்தாலும் - ஒரு
புன்னகை போதுமென்றே
தோன்றுகிறது.
தரமுடியுமா? உன்னால்....!

*வை. சாரங்கன்.*

## சமாதியாகிப்போன காதல்

உறவுகள்
உடைந்துபோதும்
உன்நினைவுகள்
உள்ளத்திற்கு
இன்பத்தையே தருகிறது
பந்தங்கள்
பகையானபோதும்
உரிமையுடன்
சுகம் விசாரித்து
உள்ளன்புடன்
உரையாடியவை
எல்லாம்
உணர்வோடு
உறைந்துவிட்டது
ஒருவரையொருவர்
ரகஷ்யமாய்
ரசித்திருந்த
நிஜப்பொழுதுகள்
இன்றும் நெஞ்சில்
நிழலாடுகிறது.
கண்டிக்கப்பட்ட
சந்திப்புகள்
வேண்டுமானால்
தர்க்கிக்கலாம் - நம்முள்
விதைக்கப்பட்ட
சந்தோஷங்கள்
கசங்கிடுமா

*நஸீஹா சம்சுபாத்*
*ஏத்தாலை.*

## காற்றுக்கும் பூவுக்கும்..!

சின்னப் பூவே
உன்னைப் போலவே
நானும் மாறிவிட ஆசை

இல்லாத நினைவின்
ஞாபகக் குவியல்களாய்
விரும்புதே உயிர்
புதுமைகளை

காற்றும் பூவும்
குதூகலிக்கையில்
எதிர்பாராத முத்தம்
கிடைத்தது போல
நடன மாடியது காற்று
அப்போது நான்
பொறாமைப்பட்டேன்

யாருக்கும் தெரியா
இரகசிய உறவு
தேனுக்கும் தென்றலுக்கும்
நிச்சயமான காதலை

எதிர்வீட்டு வில்லனாய்
தேனீக்கள் வந்து
அந்தப் பூவை
கற்பழித்துவிட்டு
அந்தரிக்க விட்டது தென்றலை

கோவிலுக்கும் அவள்
கொண்டைக்கும் போகாமலே
வாடிய ஆசைப் பூ
பறந்தது காற்றோடு.

*–ஜோ.ஜெஸ்ரின், கொழும்புத்துறை.*

## நான் இறக்கும் நாழிகை



உன் இதழ் விரிப்பும்,
கண் மடலும்
தினம் நம் காதலை
அர்த்தப்படுத்துகின்றன.

நீ
இமைகளை கதவுகளாகத் திறப்பதால்
உன் இதய அறைக்குள்
நான் வர வழியாகுமே!

அன்றிரவு
கனவின் பலன்கள் புத்தகம் படித்தேன்.

என் கனவுகளில்
நீ வந்து முத்தமிடுவதன் பலன் என்ன?

அதில் எழுதியிருக்கவில்லை
என்பதால்
பலனில்லாத முத்தங்கள் தந்துவிடு.

உன்னைத் தொட்டு விழுங்கினால்
குட்டி நாக்கு இனிக்கும்
என் சீனிக்கட்டியே!
சித்திரப் பூச்சாக நான் வரவா?

தென்னை மர ஓலை கிழித்து
உள்ளங்கையில் வாட்டி,
பம்பரம் செய்து
அதில் உன் நெற்றிப்பொட்டை ஒட்டி
ஒவ்வொரு சந்தியிலும் நான்.

காற்றடிக்கவில்லை.
என்றாலும்
உன் தாவணித் தலைப்பால் வீசு.
அங்கேயே நான் உறங்க.

குழப்ப நேரங்களில்
என்னை
நாய் இழுத்துப் போகும் காலையில்
என் வேண்டுதல்களை
நிறைவேற்றும் இறைவா!
வானிலிருந்து ஓர் சுருக்குக் கயிறு
இறக்கு
அவளில்லாத நாழிகையில்
நான் இறக்க.

*–பைசால், பொத்துவில்.*

## கல்லறை கூறும் கவிதை

**என் கல்லறையின் அர்த்தமே....**
**ஒரு கன்னி!**

**என் காதலின் விளக்கமே...**
**கண்ணீர்!**

**அவளின் புன்னகையே....**
**எனது பைத்தியம்!**

**அவளின் மௌனமே...**
**எனது அவஸ்தை!**

**அவளின் மோகமே**
**எனது அறியாமை!**

**அவளின் மொழியே - என்**
**தரித்திர ஆயுள்!**

**அவளின் அழகே**
**எனது மூச்சுத்திணறல்!**

**அவளின் திருமண அழைப்பிதழோ...**
**எனது மரணம்!**

**அவளின் திருமணமோ - என்**
**கல்லறைக் கவிதை!**

*–எஸ்.எம்.றிஸ்வான், கிண்ணியா.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்


(பயிற்சிக் களம்)

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

கவிதை–புரிதல் என்பது குறித்து கவிஞர் அபியின் ஒரு கருத்து வருமாறு :

"பேச்சு, எழுத்து, மௌனம் எதன் மூலமாகவும் பூரணமான Communication சாத்தியமாவதில்லை. குறிப்பாகக் கவிதையின் Communication மேலும் சிக்கலானது. கவிதையில் ஒன்று மற்றொன்றாகவேதான் போய்ச் சேரும். இடம், காலம், கவிஞனுடைய - வாசகனுடைய மன அமைப்புகள் இவற்றுக்கேற்ப வேறு வேறு மற்றொன்று. கவிஞனின் உணர்வு அப்படியே வாசகனுக்கு இடம் மாற்றப்படுகிறது என்பது தவறாகிப்போன பழைய நம்பிக்கை. ஆழ்ந்திருக்கும் கவியுளத்தை அது ஆழ்ந்திருக்கிறது என்ற அளவில் மட்டுமே காணலாம். அந்த ஆழம் எத்தகையது என்று கேட்டால், வாசகன் தனது ஆழத்துக்குப்போய், அதைத்தான் பார்த்துக்கொள்ள முடியும். இவ்வாறு வாசகனை அவனது ஆழத்துக்குள் செலுத்தவே கவிதை பயன்படுகிறது. கவிஞனின் கவிதை வாசகனுள்ளிருக்கும் கவிதையை எழுப்புகிறது. ஆகவே கவிதை, மூலம் வாசகன் அடைவது அவனது சொந்த அநுபவமே. கவிதை மூலம் அவன் காண்பது அவனது கவிதையே. படிப்பே படைப்பு ஆகிவிடுகிறது. கவிதை புரிதல் என்பது இப்படித்தான்.

இந்த வாரம், மின்னல் தெறிப்பாய் நம் உணர்வை அருட்டும் சில குறுங் கவிதைகள்!



### தவிட்டுக் குருவி

எலும்பை முறிப்பதுபோல்
மடமடவென மச்சுப்
பலகையை அவர்கள்
பிரிக்கத் தொடங்கிய பின்னும்
சுற்றி சுற்றி வந்தது அந்த
கூடுகட்டிக் குஞ்சு பொரித்த
தவிட்டுக் குருவி
என்னைப் போல்.

*–ரவி சுப்பிரமணியன்.*

***

### என் நாமம் கெட்டு!

அன்றொரு நேற்று
அருணாசலம் பேரன்
லட்சுமி மவன்....
அடுத்தொரு நேற்று
சுசி புருஷன்...
'நேற்றொரு நேற்று
சுடர் அப்பா
கதிர் அப்பா
கண்மணி அப்பா....
இன்று
காவியா தாத்தா
ஓவியா தாத்தா.....
எனக்கொரு பெயர் இருப்பது
எப்படித் தெரியாமல் போனது
என் தெருக்காரர்களுக்கு!

*–மீரா.*

### என்னால்தானே....

சத்தியவானை
சாவித்திரி காப்பாற்றினாள்
'என்னால்தானே
இன்னும் நீ உயிரோடு....'
என்று
கேட்டுக் கேட்டு
கொல்ல.

*–அஞ்ஞானி.*

***

### அபாய அறிவிப்பு!

எப்போது
வேண்டுமானாலும்
ஆபத்து
நேர்ந்துவிடக்
கூடியதை
மௌனமாய்
உணர்த்தும்
ரயில் பெட்டியின்
அபாயச் சங்கிலி

*–யுகபாரதி*

***

### வேதனை

முன்னிருக்கையில்
யாரோ
முகம் தெரியவில்லை
தலையில் இருந்து
உதிர்ந்து
கொண்டிருந்தது பூ
தாங்க முடியவில்லை.

*–கல்யாண்ஜி.*

### கோனார் போனார்!

பெஞ்சனிலே வந்தழகக் கோனார்
பெருங்கதிரை மீதமர லானார்
அஞ்சாறுநாள் இருந்தார்
அடுத்த திங்கள் பின்னேரம்
பஞ்சியினாலே இறந்து போனார்.

*–மஹாகவி.*

***

### சலனம்!

நீ
உன் ஆடையைச்
சரி செய்கிற போதுதான்
நான்
அதிகம்
கலைந்து போகிறேன்.

*அறிவுமதி*

***

### வரம்

என்ன வரம்
வேண்டும்
என்கிறார் கடவுள்
அது தெரியாத
நீர் என்ன
கடவுள்?

*–நீலமணி.*

### கையருகே வை!

திண்ணை இருட்டில் எவரோ கேட்டார்
தலையை எங்கே வைப்பதாம் என்று.
எவனோ ஒருவன் சொன்னான்
களவு போகாமல் கையருகே வை.

*–ஞானக் கூத்தன்.*

***

### தரிசனம்

நந்தனுக்கு உண்டு
எப்போதும் புகழ்
நந்தியை
விலகச் சொன்ன
முதல் மனிதன் என்பதால்.

*–அறிவழகன்*

***

### நாணயம்

அரைச்சத நாணயம்
அடிப்பது நின்றதால்
எத்தனை கொடைஞரை
இழந்த தெம் தேசமே!

*–சில்லையூர் செல்வராசன்*

***

### துயரம்

அறைந்து சாத்தப்படுகிற
கதவுகளுக்கென்ன தெரியும்
வெளியே நிற்பவர் துயரம் பற்றி?

*–கல்யாணராமன்.*

***

### புறாக்கள்

தடித்த பச்சை
இலைகளுக்கு மேலாய்
சிவந்த இளம் மாவிலைக்
குருத்துக்கள்

முதிர்ந்து வளைந்த
கிளைகளுக்கு மேலாய்
மலர்ந்து சிரிக்கும் மஞ்சள்
பூக்கள்

புராதனக் கோவில்
சுவர்களுக்கு மேலாய்
பழகிக் குலாவும் வெளிர்நீலப்
புறாக்கள்

மொழியாய் இறுகும் எனக்கு
மேலாய்
நீராய் உருகி ஓடிடும் மனசு.


*–ஆர்.ராஜகோபாலன்.*

### கூண்டு!


குயிலாய் பாடவும்
மயிலாய் ஆடவும்
மானாய் ஓடவும்
முடியாத மனிதன்
யோசித்து பின்
கற்றான்
கூண்டு செய்யும்
விதம்.

*–மோகன்ரங்கன்.*


# பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : எம். துவாரகன்
வயது : 18
முகவரி : கச்சாய் வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர் : P.Rajeekaran.
வயது : 27
முகவரி : P.O. Box 9138, Doha, Qatar.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி.



பெயர் : எம்.ஆர்.எம். கைசர்
வயது : --
முகவரி : 180/8, லேயார்ட்ஸ் புரோட்வே, கொழும்பு –14
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : ந. துஸ்ஸந்தன்
வயது : 17
முகவரி : மருங்கையடிப்பூவல், மண்டூர், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : தினமுரசு, கவிதை.

# சுருக்கம் நீங்க....

**பருக்கள் நீங்க :**

1 தேக்கரண்டி ஆரஞ்சு பழச்சாறை 1 தேக்கரண்டி குளிர்ந்த நீரில் கலந்து முகத்தில் தடவி அரை மணி நேரம் ஊறிய பிறகு துடைத்துவிடவும். சருமத்தில் உள்ள எண்ணெய் நீங்கி பருக்கள் வராமல் பாது காக்கும்.

பார்லர்களில் இதே சிகிச்சையை ஆரஞ்சு பீஸ் மாஸ்க் என்ற பெயரில் செய்கிறார்கள்.



**தளர்ந்த முகம் இறுக்கமாக :**

ஒரு மண்சட்டியில் 20 கிறாம் மல்லித் தூள், 1 லிற்றர் சுத்தமான நீர், இரண்டு தேக்கரண்டி சீனி கலந்து இரண்டு நாள்கள் அரை மணி நேரம் வெயிலில் வைத்து எடுக்கவும். பின்பு மேலாக உள்ள நீரை வடிகட்டி முகத்தைக் கழுவவும். இது தளர்ந்த சருமத்தை வலுவடையச் செய்யும்.

4 தேக்கரண்டி பொட்டுக்கடலை மாவுடன் 3 தேக்கரண்டி தாழம்பூ தண்ணீர் அல்லது பன்னீர் கலந்து முகத்துக்கு பேக் போடவும். 15 நிமிடம் கழித்து முகத்தை அலம்பலாம். உடனடியாக முகம் பளபளப்படையும். சருமமும் இறுக்கமாகும்.

**முகச் சுருக்கங்கள் :**

வயதானவர்களுக்கு, அதிகமாக வெயிலில் இருப்பவர்கள், கோபப்படுபவர் களுக்கு சீக்கிரம் சருமம் சுருங்கிவிடும். கோபப்படும்போது முகத்தில் 44 தசைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே முகச் சுருக்கம் உண்டாகும். ஆனால் சிரிக்கும்போது 14 தசைகள் மட்டுமே செலவாகின்றன. சந்தோஷ மாகச் சிரிக்கலாம். கோபப்படக் கூடாது. முக அழகு கெட்டுவிடும். அவ்வப்போது முகத்துக் கான சில பயிற்சிகளைச் செய்தால் முகச் சுருக்கம் விழாமல் பார்த்துக்கொள்ளலாம்.

சத்தம் இல்லாமல் 'ஆ' வென்று வாயைத் திறக்கவும்.

அதேபோல் 'உ' என்றும் சொல்லலாம். கண்களை அகல விரித்து மூடலாம். வாயை பலூன் போல் ஊதவும். இரண்டு புருவங்களுக்கு இடையே கண்களை மூடி மனதை ஒருநிலைப்படுத்தவும்.

**அழகு நிலையத்தில் செய்யப்படும் சிகிச்சைகள் :**

முகத்தில் சிறு கரும்புள்ளிகள் இருந்தால் Electric cotere என்ற கருவியின் மூலம் நிரந்தரமாக கரும்புள்ளியை எடுத்து விடலாம்.

முகத்தை எப்போதும் சூடாக விடக் கூடாது. குளிர்ந்த நீரால் நிரப்பப்பட்ட மெஜிக் குளோப் என்ற பொருளால் முகத்துக்கு மசாஜ் கொடுப் பார்கள். இது முகத்தைக் குளுமைப்படுத்தும்.

முகத்தில் இருக்கும் கோடுகளுக்கு கூலிங் ஃபேஸ் மாஸ்க் சிகிச்சை அளிக்கலாம்.

புரதம் நிறைந்த வெஜிடபிள் ஆயிலால் செய்யப்பட்ட கொலாஜின் சீட்டை முகத்தில் வைத்து நீராவி கொடுக்கப்படுகிறது. புரதம் உள்ளே இறங்கி முகம் புஷ்டியாகத் தெரியும்.

முகத்தில் ஏற்படும் எல்லா அழகுப் பிரச்சினைகளுக்கும் தனித்தனியே சிகிச்சைகளைச் செய்யாமல் ஒரே பேக்கிலேயே கிடைக்கும் சீரம் தெரபியை இப்போது பார்லர்களில் செய்கிறார்கள். இந்த பேக்கில் உள்ள மருந்தை தொடர்ந்து 24 நாட்களுக்குப் பயன்படுத்தி வந்தால் முகத்தில் நல்ல மாற்றம் தெரியும். இந்த சீரம் தெரபி தளர்ந்த முகத்தை வலுவடையச் செய்யும். சருமத்துக்கு ஆக்ஸிஜன் கொடுத்து பருக்கள் வராமல் தடுக்கிறது. அதோடு கருவளையம், மன அழுத்தம் போன்றவற்றையும் இல்லாமல் செய்கிறது.




# அறுவைச் சிகிச்சை என்றால் அலறாதீர்கள்!

உலகம் எத்தனை முன்னேற்றம் அடைந்திருந்தாலும் உடலில் ஒரு பாதிப்பு ஏற்பட்டு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது மனதில் பயம் சூழ்ந்துகொள்கிறது. இதன் காரணமாக சிலா அந்த அறுவை சிகிச்சையை ஒத்திப்போட நினைக்கின்றனா். சிலா் அதனை முற்றிலும் தவிர்த்து மாற்றுச் சிகிச்சைகளின் உதவியை நாடுகின்றனா். இதனால் உடல் பாதிப்பு அதிகமாகி சீர்செய்ய முடியாத நிலை கூட ஏற்படக் கூடும்.

அறுவைச் சிகிச்சைகள் ஏன் செய்துகொள்ள வேண்டும்? எந்த நிலையில் செய்து கொள்ள வேண்டும்? என்ற ஐயங்களை தலை முதல் கால் வரை பார்ப்போம். முதலில் கண் என்ற உறுப்பில் அவசர நிலையாகவும், தவிர்க்கக் கூடாத நிலையாகவும் உள்ள அறுவை சிகிச்சையைப் பார்ப்போம்.

காடராக்ட் என்ற நிலை நடு வயது முதல் வயதானவர்கள் வரை அனை வருக்கும் எப்போது வேண்டுமானாலும் வரக்கூடிய ஒரு கண்பார்வைக் கோளாறு. கண்ணின் உள்ளே வெளிச்சம் ஒரு லென்ஸின் மீது பாய்ந்து நமக்கு உலகினைக் காட்டுகிறது. நாளடைவில் இந்த லென்ஸ் ஒளி ஊடுருவக்கூடிய தன்மையையிழந்து ஒளிக் கதிர்களை அதன் உள்ளே செலுத்த முடியாமல் போய்த் திரையாக மாறி விடுகிறது. இதனால் பார்க்கும் பொருட்கள், குறிப்பாக எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதில்லை.

மெதுவாகத் தொடரும் இந் நிலை, நடைமுறை வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கிறது. அறுவைச் சிகிச்சை செய்து சரிசெய்துகொள்ளாவிட்டால் கண்ணில் அழுத்தம் அதிகமாகி கண்ணின் உள்ளேயே வெடித்துப் போகலாம். இந்த நிலையில் அவசர நிலையாக அறுவைச் சிகிச்சை செய் தாலும் பார்வையை இழக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது.

முன்பெல்லாம் காடராக்ட் நிலை ஏற்பட்டால் அதை நன்கு பழுத்த பிறகே நீக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இதனால் அறுவைச் சிகிச்சை செய்த பிறகும் மிகவும் தடிமனான கண்ணாடி அணிய வேண்டியிருக்கும். அதோடு பார்வைச் சீராக ஓரிரண்டு ஆண்டுகளாகும். ஆனால், இன்று நடுவயதிலேயே கூட காடராக்ட் ஏற்பட்டுவிட்டது என்றால் பழுக்க விட இருந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. 'அல்ட்ரா சவுண்ட்' சக்தியின் உதவியுடன் 'பேகோ எமல்சிவிகேஷன்' என்ற முறையில் கண்ணில் வளர்ந்துள்ள சதையை நீக்கி, 'இன்ட்ரா ஆகுலர்' லென்ஸினைப் பொருத்திவிடலாம். சகஜ நிலையான வாழ்க்கைக்கு மிக எளிதில் வந்துவிடலாம்.

இத்தனை நாட்களாக தம்மால் சரியாக எழுதப் படிக்க முடியாமல் போனதற்கும் தைரியமாக வண்டி ஓட்ட முடியாமல் போனதற்கும், மாலை நேரத்திற்குப் பிறகு எந்தச் செயலையும் தெளிவாகச் செய்ய முடியாமல் போனதற்கும் காடராக்ட்தான் காரணம். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு தெளிவான பார்வையை அவர்கள் திரும்பப் பெற்றார்கள்,



ஆதிரை என்ற மூன்று வயதுக் குழந்தையை பெற்றோர் கண் டாக்டரிடம் சென்று காட்டினார்கள் இதனைச் சரிசெய்ய ஏழு வயதிற்குள் அறுவை சிகிச்சை செய்து கொள்ளவேண்டும் என்று கூறினார். தன் ஒரே செல்ல மகளுக்கு இத்தனை சிறிய வயதில் அறுவைச் சிகிச்சை செய்ய மனம் ஒப்புக்கொள்ளாததால், தா யார் விதவிதமான சொட்டு மருந்துகள், பார்வையைச் சரிசெய்ய கண் பயிற்சிகள் முதலியவற்றை மேற்கொள்ளச் செய்தாள். ஆதிரை வளர்ந்து பருவப் பெண்ணாக ஆனபோது, அவள் குறை அவளுக்குத் தாழ்வு மனப்பான் மையை ஏற்படுத்தவே, அறுவைச் சிகிச்சை செய்து பார்வையைச் சீராக்கிக் கொண்டாள். ஒரு மாதத்திற்குப் பிறகு மறு பரிசோத னைக்கு ஆதிரை வந்த போது, வழக்கம் போல் பார்த்து, "என்ன ஆதிரை, உன் தாழ்வு மனப்பான்மை போய் விட்டதா? மேலே என்ன படிக்கப் போகிறாய்?" என்று டாக்டர் கேட்டார். "உங்களைப் போல் ஒரு கண் மருத்துவர் ஆக வேண்டும்" என்று ஆசை என்றாள்.

அவளை ஆதரவாகத் தட்டிக்கொடுத்து, "அது உன்னால் முடியாதம்மா! அதற்கு உன் பெற்றோர் இந்த அறுவைச் சிகிச்சையை சிறிய வயதில் செய்திருக்க வேண்டும். இன்று செய்துள்ள இந்தச் சிகிச்சை மூலம் உன் தோற்றத்தில்தான் மாறுதலை ஏற்படுத்த முடியும். உன் பைனாகுலர் விஷன் என்ற ஒருங்கி ணைத்துப் பார்க்கும் திறனை மீட்டுத்தர முடியாது. அதனால் உன்னால் மருத்துவம், ஆராய்ச்சி போன்ற படிப்புகளைப் படிக்க முடியாது. கண்களை ஒருங்கிணைத்து பைனாகுலரில் பார்க்க முடியாது" என்றார்.

"தங்கள் தவறினை உணர்ந்த பெற்றோர் கண்களை கண்ணீர் நிரப்பிற்று. தக்க சமயத்தில் கண்ணாடி, ப்ரிஸம் பொருத்திய கண்ணாடி, அறுவைச் சிகிச்சை போன்றவற்றின் உதவியால் சரி செய்யப்படாததால் 'மாறுகண்' அறுவைச் சிகிச்சை வெளித் தோற்றத்தை மட்டுமே மாற்றக்கூடிய சிகிச்சையாக முடிந்தது.

'அறுவைச் சிகிச்சை' என்றாலே பயப்படுவது மட்டுமல்ல, முறையான மருத்து வம் எடுத்துக்கொள்ளத் தயங்குவதாலும் கண்ணில் பல குறைபாடுகளைச் சந்திக்க நேரிடலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## டெவில் பிறவுண்ஸ்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| இறால் | - 1/4 கிலோகிறாம் |
| தக்காளிப்பழம் | - 100 கிறாம் |
| கறிமிளகாய் | - 100 கிறாம் |
| பம்பாய் வெங்காயம் | - 1 |
| பச்சை மிளகாய் | - 5 |
| சில்லி கார்லிக் சோஸ் | - 2 மே.க. |
| உப்புத் தூள் | - அளவிற்கு |
| மிளகுத் தூள் | - அளவிற்கு |
| தேங்காயெண்ணெய் | - 4 மே.க. |
| ரேஸ்ற் மேக்கர் | - அளவிற்கு |
| சோயா சோஸ் | - 2 மே.க. |
| முட்டை | - 1 |

**செய்முறை:**

முட்டையை உடைத்துப் பாத்திரத்தில் விட்டுச் சிறிது உப்புச் சேர்த்து அடித்து வைக்குக.

இறாலைத் துப்பரவு செய்து கழுவி எடுத்துக் கொள்க.

தக்காளிப்பழம், கறிமிளகாய், வெங்காயம் என்பவற்றை அளவான துண்டுகளாக வட்ட வடிவில் வெட்டிக்கொள்க.

பச்சை மிளகாயைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்க.

தாச்சியில் எண்ணெயைக் கொதிக்க வைத்து இறாலையிட்டு அரைப் பதமாகப் பொரியவிட்டு, அதனுள் கறிமிளகாய், வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றைச் சேர்த்து முக்கால் பதமாக மரக்கறிவகை அவிந்து வரும்போது, தக்காளி, மிளகுத் தூள், உப்புத் தூள், அடித்த முட்டை, சிர்லி கார்லிக் சோஸ், சோயா சோஸ் என்பவற்றையிட்டு ரேஸ்ற் மேக்கர் அளவிற்குச் சேர்த்துக் கிளறி கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக்கொள்க.

# நலமாக வாழ்வோம்

## உட்டியான பந்தம் அக்னிசாரக்கிரியை

*செய்முறை :*

1. படத்தில் உள்ளபடி விரிப்பின் மீது கால்களை 1 1/2 அடி இடைவெளி விட்டு நிற்கவும்.

2. வெளிமூச்சை ஆழமாக மூக்கின் வழியாக இழுத்து உள்ளே சிறிது நேரம் வைத்திருந்து உடன் வேகமாக ஒரே மூச்சாக வாய் வழியாக அல்லது மூக்கின் வழியாக வெளியேற்றவும்.

3. வாயை இறுக மூடி மூச்சை உள்ளுக்கு எடுக்காமல் நிறுத்தி உடன் வயிற்றுத் தசைகளை இளக்கி உள்ளுக்கு முடிந்தளவு இழுத்து பிடித்து நிறுத்தவும். 10 எண்ணிக்கைகள் அப்படியே இருந்துவிட்டு வெளிமூச்சை மெதுவாக மூக்கின் வழியே எடுக்கவும். அதே நேரத்தில் வயிற்றை சாதாரண நிலைக்குக் கொண்டு வரவும். திரும்பவும் செய்யவும். இப்படி 5 முறை செய்து முடிக்கவும்.

அக்னி சாரக் கிரியை

1. உட்டியான பந்தம் சில நாட்கள் பழகிய பின்பு அதே நிலையில் இருந்து அதாவது மூச்சை வெளியேற்றி வயிற்றுத் தசைகளை உள்ளே இழுத்து அதே நிலையில் 5 எண்ணிக்கை உடன் வேகமாக வெளியே தள்ளி உடன் வேகமாக உள்ளே இழுப்பதுமாக தொடர்ந்து செய்யவும்.

2. உள்மூச்சுத் தேவைப்படும் உணர்வு வரும் வரை செய்யவும். இதற்கு அக்னி சாரக் கிரியை என்று பெயர்.

3. மெதுவாக வெளிமூச்சை எடுத்து சாதாரண நிலைக்கு வரவும். மறுபடியும் உட்டியான பந்தம் 5 எண்ணிக்கை, அக்னி சாரக் கிரியை முடிந்தளவு என 3லிருந்து 5 முறை செய்து முடித்து சவாசனத்திற்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

பலன்கள் :

1. உட்டியான பந்தத்தை ஒரு பொழுதுபோக்காகக்கூட வயதானவர்கள் செய்து வரலாம். அதனால் அவர்களது முதுமையைத் தள்ளிப் போடலாம் என்று ஹதயோக பிரதீபிகை எனும் பண்டைய யோக நூலில் காணப்படுகிறது.

2. ஒரு மாதப் பயிற்சிக்குப் பிறகு முன்னால் குனிந்து இப் பயிற்சியை செய்ய வேண்டியதில்லை. சாதாரணமாக நின்று கொண்டோ அல்லது உட்கார்ந்து கொண்டோ கூடப் பழகலாம்.

குனிந்து நிமிர்ந்து அதிகம் வேலை செய்ய விரும்பாத பெண்கள் இந்த உட்டியான பந்தத்தை மட்டும் 10 அல்லது 20 எண்ணிக்கை வயிற்றை இறுக்கப் பிடித்து நிறுத்தி செய்து வரலாம். இப் பயிற்சியை பஸ்ஸிற்காகக் காத்திருக்கும்போதோ அல்லது மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருக் கும்போதோ கூடச் செய்யலாம். மிகச் சுலபம். பலன் அதிசீக்கிரம் கிடைக்கும். இதனால் வயிற்றுத் தசைகள் உறுதியாவதுடன் அது சுருங்கி உடலோடு கச்சிதமாகி கம்பீரமாக இருக்கும். எங்கள் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெறும் பெண்களை இப் பயிற்சியை



தவறாது செய்து வரச் சொல்கின்றேன். அதனால் அதிக பலன் இருப்பதாகக் கூறி வருகிறார்கள்.

3. கேஸ்ரிக் கோளாறுகள் வராமல் தடுக்கிறது.

4. வயிற்றுப் பூச்சிகளைப் போக்குகிறது.

5. அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு கோபப்படுவதைத் தடுக்கிறது. அப்படி உணர்ச்சி வசப்படுவதால் வயிற்றில் அதிக அமிலம் சுரப்பை இப் பயிற்சி கட்டுப்படுத் துகிறது.

6. அக்னி சாரக்கிரியை பயிற்சியால் மலச்சிக்கலை நீக்கி அஜீரணத்தைப் போக்குகிறது. கல்லீரல், கணையம் பலம் பெறுகிறது.

7. அடிவயிற்றில் உள்ள சுதந்திரமாக இயங்கும் "சோலார் பிளக்ஸ்" எனும் நரம்பு மையங்கள் தூண்டப்படுகின்றன.

**குறிப்பு :-**

1. இப் பயிற்சியை எளிதில் பழக பயிற்சியை ஆரம்பிக்கும் முன்னால் பேதி மருந்து சாப்பிடவும். தவறாது வாரம் ஒருமுறை முடிந்தால் இருமுறை வாமனதௌதி கிரியை செய்து வரவும்.

2. கல்லீரல் வீக்கம், வயிற்றுப்புண், இருதய பலவீனம், அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இப்பயிற்சியைச் செய்யக் கூடாது.

3. யோகாசன நிபுணரின் உதவியுடன் இப் பயிற்சியைக் கற்றுக்கொண்டு பிறகு பழகுவது நலம்.

**யோகா தொடரும்.....**




எங்கே மச்சம்?

பரபரப்போடு இடது கணுக்காலையும் பார்த்தாள். அங்கேயும் அடையாளத்தைக் காணவில்லை.

அவநம்பிக்கையோடு அவனை விறைத்தாள். அவன் மெதுவாக எழுந்தான்.

"நான் இல்லை" என்று முழுங்கினான்.

எடுத்த காப்பி டம்ளரைக் கீழே அப்படியே வைத்தான்.

பின்னால் இருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டு வெளியே போனான்.

அவள் ஸ்தம்பித்து நின்றுகொண்டே இருந்தாள்.

வெளியில் தெரு ஓரத்தில் இரு மரங்களும் வரிசையாய் நிற்கும் பொலிஸ்காரர்களையும் பார்த்துத் திகைத்தான்.

வீட்டின் முகப்பிலே நின்றான்.

ஐந்து நிமிடம் ஓடியது. பத்து நிமிடம் ஓடியது. மனம் நெரித்தது.

அங்கே நிற்பதால் யாராவது வந்து அவனை சூரியகுமார் என்று அழைத்து விடுவார்களோ?

அல்லது சூரியகுமாரே நேரில் வந்து அவனைப் பிடித்து ஏதாவது செய்துவிட்டால்....

நிற்கவும் முடியாது. வெளியில் போகவும் முடியாது.

நின்றது வேறு விதத்தில் ஆபத்தாகியது.

அவன் பார்வை திரும்பி வீட்டின் நீள நடையில் சென்றபோது,

நேற்றுப் பார்த்த 'டீக்' ஆசாமி சுறுக்காகவே வந்துகொண்டிருந்தான்.

அவன்தான் இலட்சியம் என்று அவன் முகத்தில் தெரிந்தது.

அதே செகண்டில் வாசலில் வாழ்க கோஷங்கள்! எட்டிப் பார்த்தான். ஓர் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. ஓகோ! இதற்காகத்தான் சிவப்புக் குல்லாய்களா?

இறங்கினான். விடுவிடென்று ஒரு கர்மசிரத்தையைக் காண்பித்துக் கொண்டு கூட்டத்தில் போய்ச் சேர்ந்தான்.

கொடிகளும் பானர்களும் கூட்



டத்தை நெருக்கிக் காட்டின. அட்டைகளில் நாட்டை வளமாக்கும் மந்திரங்களை ஒட்டி இருந்தார்கள். ஒரு திறந்தவெளி ஜீப்பில் மத்திய மந்திரி காதிலிருந்து காதுவரை புன்னகை பூத்துக்கொண்டு அடிக்கடி கருடாழ்வார் ஸ்டைலில் கைகளைக் கூப்பிக்கொண்டு பவனி வந்தார்.

பொலிஸார் ஏராளமாய்க் கூட்டத்தை நிறைத்தார்கள்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு, சந்தேகத்தை எழுப்ப விடாமல் 20 அம்சத் தொண்டனாகக் காண்பித்துக் கொண்டு கூட்டத்தில் கலவை ஆனான்.

ரொம்ப நேரம் இதில் தங்க முடியாது. அந்த ஆசாமி வந்து விடுவான். என்ன செய்யலாம்?

ஒரு பலவீனக்காரனிடமிருந்து கொடியை வாங்கி 'வாழ்க'வை ரோஷமாகக் கத்தினான்.

மூலை திரும்பும்போது ஒரு சிவப்புக்காரனின் பார்வை அவன் மீது விழுந்தது.

தயங்கியது அவன் தப்பு!

"ஏய், சூரியகுமார்!" என்று அவன் கத்த இவன் கொடியைக் கீழே போட்டு விட்டுக் குறுக்கே பாய்ந்து விருட்டென்று ஓடினான்.

எதிர் பிளாட்பாரத்தில் அட்வகேட் அமர்நாத் கறுப்புக் கொடிகளுடன் நின்று அதிகார வர்க்கத்தைக் கூச்சலால் ஒழித்துக்கொண்டிருந்தார்.

அந்தக் கூச்சலை உடைத்துக் கொண்டு நுழைந்து, அமர்நாத்திடம் பரபரப்பாக "என்னைத் துரத்துகிறார்கள்" என்றான்.

அவர் அந்த யுவனிடம் கண்ணைக் காட்ட,

யுவன் ஒரு நொடியில் எல்லா விவரங்களையும் உறிஞ்சிக்கொண்டு,

தனியாக அம்போ என்று நின்று கொண்டிருந்த சைக்கிளைக் காண்பித்தான்.

உடன் துள்ளிக் குதித்து, சைக்கிளைக் காற்றாய்க் கரைத்தான்.

பின்னால் ஓடிவந்த பொலிஸ், விசில் ஊதி ஆர்ப்பாட்டக்காரர்களின் மனிதச் சுவரைக் கடக்கப் பிரயாசைப் பட்டு, பல பேச்சுத் துடிப்புகளுக்குப் பிறகு கடந்து பார்க்க,

குரு தூரத்தில் புள்ளியாகி இருந்தான்.

பொலிஸ்காரர் விசில் அடித்து தம் சகோதரர்களையும், ஒரு வண்டியையும் வரவழைக்கப் பிரயத்தனங்கள் செய்ய ஆரம்பித்தார்.

குரு நகரத்தின் விளிம்பை அடைந்து, சைக்கிளைப் புதருக்குப் பின்னால் கடாசி, இழைத்துக் கொண்டே ஓட ஆரம்பித்தான்.

தன்னைப் பின்தொடர பொலிஸும், அவர்களது தற்கால விஞ்ஞான சாதனங்களும் விரைவாக வேலை செய்துகொண்டிருக்கும் என்று நினைத்ததும்,

மெயின் சாலையை விட்டு, கிளையில் புகுந்து, ஓட்டமும் நடையுமாய் குடிபடை ஊர்களைக் கடந்து எங்கும் நில்லாமல் சென்றுகொண்டிருந்தான்.

அவனோடு கூட அவன் நினைவும் விரைவாக ஓடி வந்தது.

வாழ்க்கையில் ஓய்வே கிடையாதா? துன்பங்கள் தொடர் சங்கிலிகளாக வந்துகொண்டு இருக்கின்றனவே! எங்கேயாவது ஒரு கண்ணியை அறுத்துவிடலாம் என்றால் முடியவில்லையே! வெட்டிவிட்டால் கூடப் புதுக் கண்ணிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றனவே!

தடயங்களை விட்டுப் போக இஷ்டமில்லை. அதனால் டீக்குக்கூட எங்கும் நிற்கவில்லை. இன்று முழுதும் இதே சகதியில் ஓட வேண்டியதுதான். இவ்வளவு தூரம்தான் போயிருப்பான் என்ற அவர்களது கணிப்பை உடைத்துவிட வேண்டும்.

ஓர் இடத்தில் ரயில் மேட்டைக் கண்டவுடன் குஷி. சொஸ்தமாக தனியே நடக்கலாம், ஓடலாம்! ஒருத்தர் தனிமைக்காகவே ஏற்பட்ட ராஜபட்டை!

லைனைப் பிடித்தான். வேகம் சிறிது மட்டுப்பட்டு நடக்கும்போது, கண்ணில் நீர் தளும்பியது.

இதுபோல் வேட்டையாடப்படும் நாய் வாழ்க்கை எத்தனை நாளைக்கு?

மனம் வெந்துபோய் அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருந்தது.

லைனில் வெகுதூரம் நடந்தபின் பழக்கப்பட்ட கட்டடங்கள் கண்ணில் பட,

அந்தக் குடிசைக்காரி வாழும் இடம் இங்கேதான் இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

மத்தியான வெய்யில்! களைத்து வியர்வையாகக் கொட்டிக்கொண்டு, மூச்சுவிட முடியாமல் மார்பைப் பிடித்துக்கொண்டு, குடிசைக்குள் நுழைந்தான்.

"பார்வதீ."

புன்னகையோடு திரும்பினாள்.

"ரொம்பக் களைச்சிருக்கேன். துரத்தறாங்க! சோறு இருக்கா?"

"இதோ ஆக்கிடறேன்."

"இல்லை. பழஞ்சோறு போறும். ஆக்கிற வரை பொறுக்க முடியாது."

உலைமூடியைக் கொண்டு முன்னால் வைத்தாள். கறுப்புப் பானைக்குள் கை விட்டாள். அந்த இருட்டில் சோறு "வெள்ளை வெளேர்" என்று பூப்போல் தெரிந்தது. பழைய சோறு!

அவன் கண்கள் பளபளத்தன. நாக்கு சப்புக் கொட்டியது.

உலைமூடியில் சோற்றைக் குவித்தாள். "ஊர்கா வேணாம்?

ஏ விஜயா! விஜயாப் பொண்ணு!"

விஜயா தறிகெட்டு ஓடி வந்தாள்.

"அம்மா, அம்மா! வைத்தியர் ஐயா மவன் இல்லே! அவர் வந்திட்டிருக்காரு!"

அவன் கையை உதறினான். எழுந்தான், "பார்வதீ! நான் வர்றேன்."

அவள் ஸ்தம்பித்து நிற்க, குடிசையை விட்டு வெளியே பாய்ந்தான்.

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

"அதோ, அதோ!" குரல்கள்.

வைத்தியர் மவன் இரண்டு ஆட்களோடு தென்பட்டான்.

குருவின் மூளையில் தீப்பற்றியது. ஒரே தாவலில் மறு திசையில் குதித்தான். கல்லிலும் மண்ணிலும் விழுந்தடித்து ஓர் அசுரன் போல் ஓடத் தொடங்கினான்.

காதுகளில் காற்று 'உய்ய்' என்று வழிந்தது. வாயை 'ஆ' என்று திறந்து காற்றை வேகமாக இழுத்து விட்டான்.

(துரோகம் துரத்தும்......)

# நான் விபசாரி இல்லை!




**ந**டிகை விலாசினி. இவர் விபசார வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலை ஆனவர். தனது போராட்ட அநுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

"திண்டுக்கல் பக்கத்திலிருக்கிற மணிகாரன் பட்டி கிராமம் என்னோட சொந்த ஊர். அப்ப என் பெயர் கோமதி. குடும்பத்தில் அனைவரும் மெட்ராஸில் ஹோட்டல் நடத்திக் கொண்டிருந்தார்கள். எனவே, நானும் சென்னைக்கு வந்தேன்.

சென்னையில் எங்கள் வீடு சாலிக்கிராமத்தில் இருந்ததாலும், எங்கள் வீட்டைச் சுற்றி நிறைய நடிகைகள் இருந்ததாலும் எனக்கு சினிமா ஆசை வந்தது.

எங்கேயாவது நடிகைகள் தேவைனு கேள்விப்பட்டா உடனே அங்க ஓடிப்போவேன். சான்ஸ் கிடைச்சா பெரிய ஹீரோயின் ஆயிரலாம்னு நம்பிக்கை. ஆனால் சினிமாவில் வாய்ப்பு கிடைக்கவில்லை. சில விளம்பரப் படங்களில் மட்டும் வாய்ப்புக் கிடைத்தது.

அந்தச் சமயத்தில் ஒரு பெரிய இயக்குநர் வந்து, புதிய படம் ஒன்று பற்றிப் பேச வேண்டும் உடனே என்னுடன் வர வேண்டும் என்று அழைத்தார். நானும் அதை நம்பி ஒரு வீட்டிற்குச் சென்றேன். அந்த இடத்தில் நிறையப் பெண்கள் இருந்தார்கள். நிலைமை ஒரு மாதிரி இருந்தது. அதற்குள் பொலிஸார் வந்து என்னையும் அந்தக் கூட்டத்தையும் கைது செய்துவிட்டார்கள். மறுநாள், 'நடிகை விலாசினி விபசார வழக்கில் கைது' என்ற செய்தி பேப்பரில் வந்தது. நிறையவே அழுதேன்."

# விபச்சாரி ஆக்கப்பட்டேன்!

***எப்படி இவ்வளவு பெரிய சிக்கல்ல மாட்டுனீங்க?***

எல்லாம் பாழாப் போன ஆசைதாங்க. எனக்கு எப்பவுமே நல்லா சம்பாதிக்கனும்...சமுதாயத்துல பெரிய ஆளா வரணும்கிற ஆசை. ஆனா இருபது வயசிலயே கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. கணவர் பெரிய குடிகாரர். எவ்வளவோ சொல்லியும் திருந்தலை. காலைலருந்து குடிச்சிக்கிட்டே இருப்பாரு. இரண்டு வருஷம் வாழ்க்கை ஓடிச்சு. இரண்டு பிள்ளைகளும் பிறந்திச்சு. ஆனா என்னால அவரோட குடியை சகிக்க முடியலை. விவாகரத்து ஆயிடுச்சு. நான் ஏழாம் வகுப்பு வரைக்கும்தான் படிச்சிருக்கேன். தனியாளா எப்படி இந்த உலகத்துல வாழ்றது? ஏதாவது ஒரு பிஸினஸ் செய்யணும்னு நினைச்சேன். அப்போ தோனுன யோசனைதான் மல்டிலெவல் மார்க்கெட்டிங். ஈரோட்டுலதான் அந்த பிஸினஸ் இருந்துச்சு. அதனால அங்க போய்ட்டேன். அந்த பிஸினஸ்ல நிறையப் பேரை பார்த்து பொருட்களை விக்கனும். அந்த சமயத்துலதான் இந்த பொலிஸ்காரங்களையெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. சனி பிடிச்சது.


**இவ்வளவு தெளிவா பேசறீங்க. ஆனா நிறைய பேர்கிட்ட ஏமாந்ததா சொல்றீங்க. முதல் திருமணம் முறிஞ்ச பிறகு ரெண்டு கல்யாணம் வேற செஞ்சிருக்கீங்க.....**

எல்லாத்திலயும் நான் ஏமாந்துட்டேன்றது இப்பதான் புரியுது. மல்டிலெவல் மார்க்கெட்டிங் பிஸினஸுக்காக டி.எஸ்.பி. ராஜசேகரனை சந்திச்சேன். அவருக்கு வீட்டுல மனைவி சரியில்ல. என்னைக் கல்யாணம் செஞ்சு நல்ல முறையில வச்சிக்கிறேன்னு சொன்னார். நல்ல வாழ்க்கை கிடைக்குதே.....டி.எஸ்.பி. மனைவியாகுறோமே...என்ற எதிர்பார்ப்புலதான் திருமணம் செஞ்சேன். அவருக்கு ரெண்டு முகம்கிறது கல்யாணம் ஆனப் பிறகுதான் தெரிஞ்சது. தினமும் தண்ணி, பொண்ணுங்களை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து கும்மாளம் போடுவது...இதெல்லாம் பார்த்து எனக்கு அதிர்ச்சி, ஆத்திரம். நம்பி வந்தவளுக்கு எப்படியிருக்கும்? அந்த மட்டமான ஆளோடு வாழ்ந்திருப்பேன். அவரை விட்டுவந்து டைலரிங் தொழில்




செய்தேன். ஆனா திரும்பியும் வந்து கூப்பிட்டார். தொந்தரவு செய்தார். அப்போ அவர் திண்டுக்கல்லுக்கு வந்துவிட்டார். அதனால் மதுரைல வந்து என்னைத் தொந்தரவு செய்றது ஈஸியா போயிடுச்சு. அவர் தொந்தரவு தாங்காமல் உடுமலை போனேன். அங்கே கோவை ரூரல் எஸ்.பி. சொக்கலிங்கம் பழக்கமானார். நம்ம ஊர்ப் பெண்ணாக இருக்கியேனுதான் என்னோட பழக ஆரம்பிச்சார். எனக்கு எல்லா பெரிய ஆளுங்களையும் தெரியும். உன்னோட மல்டி லெவல் மார்க்கெட்டிங்குக்கு உதவுவாங்கன்னு சொல்லி என்னை அவரோட விஷயங்களுக்கு உபயோகிக்க ஆரம்பிச்சார். அப்படியே பொலிஸ்காரங்களின் வலை என்னை நெருக்கி பின்னத் தொடங்கி விட்டது. வெளிய வர முடியாத அளவுக்கு என்னை சிறைப்படுத்திவிட்டது. நிஜமாகவே பதினைந்து நாட்கள் சிறையிலும் தள்ளிவிட்டது என்று சொல்லும்போது, ஜெயலட்சுமியின் கண்கள் மீண்டும் கலங்குகின்றன.

# 28 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்



கொனி ஹோனக் (Conne Hoenk) மிகவுமே நீளமான கூந்தலுடைய அழகான எடுப்பான தோற்றமுடையவள், பொதுவாக சற்று ஒருபடி மேலே சென்று எமது மேற்கத்தைய பாணியில் சகல விடயங்களையும் ஒரு நடுநிலையான பார்வையில் நோக்குவாள். எல்லோருடனும் சிறந்த முறையில் ஒரு நிதானமான போக்குடன் பழகுபவள். எல்லாவிடயத்தில் அவளை ஒரு "மேற்கத்தைய நடுநிலைவாதி" என்று கூறுவது இங்கு பொருந்தும் என நினைக்கின்றேன். இங்கு நான் கடைசியாகக் குறிப்பிட்டவள்தான் சுசி சலமொன்(Suzy Salomon) என்ற எனது வகுப்பு தோழி. அவள் மிகவும் எடுப்பான ஆளுமையைக் கொண்டவள், மிகவும் திறம்பட அனைத்து விடயங்களிலும் கஷ்டப்பட்டு உழைப்பவள், கல்வி கற்பதில் என்னைப் போன்று கடுமையாக உழைப்பவள். இவள் சிகாகோவின்(Chicago) ஒதுக்குப் புறத்திலிருந்து கல்வி கற்க வந்தவள். இவள் எப்பொழுதுமே சிரித்த முகத்துடன் அடிக்கடி புன்னகைப்பவளாக இருப்பாள். மிக இலாவகமாக நல்ல நளினமான நடத்தை உடையவள். அத்துடன், எங்கள் வகுப்புத் தோழிகளில் எவராவதற்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் உடனே உதவிசெய்யக்கூடியவளாக (Helped Mind Girl) நடந்துகொள்வாள். இவ்வாறு நான் Wellesly யில் கல்வி கற்றது. ஒரு வகையில் சிறந்த படிப்பினையாகவும், ஒரு பிரயோசனமளிக்கக்கூடிய அனுபவமுமாகவே எனக்கு இருந்தது. இப்பேற்பட்ட பல்வேறு படித்தரங்களைக் கொண்ட பல்வேறு ஆளுமைகளைக் கொண்ட சிறந்த கல்வி கற்ற மாணவ குழாம், தற்பொழுது எமது அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல்வேறு படித்தரங்களில் எல்லோருக்கும் அனைத்து விடயங்களிலும் முன்மாதிரியாக இருப்பது பெருமை சேர்ப்பதாகும்.

மேலும் எங்கள் எல்லோருக்கும்; சிறந்த கருத்துக்களை ஆக்கபூர்வமான, தரமான ஆலோசனைகளை தரக்கூடியவர்களாக, பழைய மாணவர்கள், இருவர் இருந்தனர். அந்த இருவருடைய பொயர்களாவன, செல்லி பெரி (Selley Parry) லவ்ரா குரோச் (Laura Grosch) என்பவர்களே அவர்களாகும்.

செல்லி பெரி மற்றும் லவ்ரா குரோச ஆகிய இருவரும் சிரேஷ்ட மாணவிகளாக எல்லாவற்றிலும் மிக மிக முன்மாதிரியாக எங்களுக்கு சிறப்பான ஆலோசனைகளை சொல்லக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த செல்வி பெரி லவ்ரா குரோச் ஆகிய இருவரும் எமது பல்கலைக்கழக மாணவ விடுதியில் ஒரே அறையில் தோழிகளாகவே இருந்தார்கள். ஆம் இணைபிரியா தோழிகளாக இருந்து கொண்டு அனைவருக்கும் சிறந்த முறையில் உதாரண புருஷர்களாக நடந்து கொண்டார்கள். அவர்களில் செல்லி பெரி ஒரு வித்தியாசமான, நுணுக்கமான பார்வையையும் கொண்டவராகவும் மிகக் கெட்டிக்காரப் பெண்ணாகவும் இருந்தார். எம்மையெல்லாம் விட வயதில் மூத்தவராக இருந்தபோதிலும் ஒரு இரம்மியமான - இளமை தோற்றத்துடன் மிக மிக சுறுசுறுப்பாக அவர் காணப்பட்டார். எமது வகுப்பு தோழிகளுடன், அவர் நெருங்கிப் பழகும் அதேவேளை, பல்வேறு விடயங்கள் பற்றியும், மிக மிக ஆழமாக எம்முடன் கருத்துப்பரிமாறிக் கொள்வதுடன், விசேடமாக என்னுடன் சற்று வரிவான நோக்கிலேயே சில விடயங்கள் பற்றி தனிப்பட்ட முறையிலும் பெண்பிள்ளைகளின் வாழ்க் கையில் அது எதுவாக இருந்தாலும், அதாவது



கல்வித்துறை, மற்றும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் எந்தத்துறையாக இருந்தாலும் ஒரு பெண் தனது வாழ்நாளில் சிறப்புற்று விளங்க வேண்டும் என்று வரலாற்றில் புகழ்பெற்ற பெண்களின் வாழ்க்கை குறிப்புகளிலிருந்து எடுகோள்களை எடுத்துக்காட்டி எனக்கு விளக்கிக்காட்டுவார். இவ்வாறு சிறப்பாக எங்களுக்கு முதலிலேயே பட்டம் பெற்று வெளியேறிய அவர் பின்பு ஒரு காலத்தில் ஆபிரிக்காவிலுள்ள 'கானா' நாட்டு பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளராக இருந்தார். பின்பு அவர் அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ஒருவரை கைப்பிடித்து தற்பொழுது அவுஸ்திரேலிய நாட்டிலேயே நிரந்தரமாக குடியேறிவிட்டார்.

(இன்னும் வரும்...)

***இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.***

***ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.***

***19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத் துகிறது.***

## பெண்களுக்கான சாரணர் வழிகாட்டி மையம்



பெண்க்ளுக்கான சாரணர் வழிகாட்டி மையம் 31ம் திகதி மே மாதம் 1910ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆண்களுக்கான சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்று ஆண்டுகளுக்குப்பின்புதான் இந்த பெண்களுக்கான சாரணர் இயக்கம் துவங்கப்பட்டது. முதலாவது பெண்கள் சாரணர் இயக்க உறுப்பினர்களையே இங்குள்ள படத்தில் காண்கிறீர்கள். இந்த பெண்களுக்கான இயக்கத்தை ஆரம்பிக்க கடும் முயற்சியில் ஈடுபட்டவர் "அக்னஸ்" என்பவராகும். இவர் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவரான சேர் ரொபர்ட் பேர்டன் - பௌல் என்பவரின் உடன் பிறந்த சகோதரியாகும்; இந்த பெண்களுக்கான சாரணர் மையம் ஆண்களுடைய வழிகாட்டல்களையும் கொள்கைகளையும். திட்டங்களையும் மையமாகக் கொண்டே மெல்ல மெல்ல வளர்க்கப்பட்டது.

## டெங்கோ (Tango) எனும் ஒருவகை ஸ்பானிய அமெரிக்க நடனம்



டெங்கோ (Tango) என்று அழைக்கப்படும் ஒரு வகை ஸ்பானிய அமெரிக்க நடனம் அமெரிக்கா உட்பட ஸ்பெயின் மற்றும் மேற்கத்தைய நாடுகளில் மிகப் பிரபலமான நடனமாகும். இளைஞர்களையும், யுவதிகளையும் வெகுவாக வசீகரித்து இழுக்கக்கூடியதும். இளவட்டங்களுக்கு கிளுகிளுப்பு ஊட்டக்கூடியதுமான அந்த நடனக் காட்சியையே இங்கு காண்கிறீர்கள்: ஆர்ஜந்தினாவைச் சேர்ந்த ஆணும். பெண்ணும் நடனத்தில் பங்கு கொள்கின்றனர்.

## வயதானோருக்கு ஓய்வூதியம் வழங்கல்



பிரித்தானியாவின் முதன்முதலாக ஏப்ரல் மாதம் 1909ம் ஆண்டு ஓய்வூதியம் வழங்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஓய்வூதியப் பணத்தை ஒரு காரியாலயத்தில் கியூவில் நின்று பெறுபவர்களையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். இது Old age Pensions என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## அம்பிமகன் அமரரானார்

**“தே**னீர்க் கோப்பைக்குள் இரத்தம்” என்ற இந்த தமிழ்த் தேசிய இன வரலாற்றுத் தொடரை இணைத்து எழுதி வந்தவர்களிலொருவரான அம்பிமகன் கடந்த ஆகஸ்ட் 16ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அரசியல் பரப்பில் சின்னபாலா என்றும் தமிழ் ஆக்க இலக்கியத்துறையில் இளையவன் என்ற பெயரிலும் வலம் வந்தவர் அவர். காலை வேளையொன்றில் அகாலமாகக் காலமாகிப் போன இவர், சரீரத்திலிருந்து இரத்தம் சீறிவடிய, தெருவோரத்தில் குரூரமாக வீழ்ந்து கிடந்த காட்சி மனித நேயமுள்ளவர்களின் மனதை இரத்தமாகப் பிழிந்திருக்கும்.

இலங்கையில் கொடிகட்டிப் பறந்த சங்கீதமேதை வீரமணி ஐயரின் சொந்தச் சகோதரரான கந்தசாமி ஐயரின் புதல்வரே அம்பிமகன் என்றழைக்கப்படும் பாலநடராஜ ஐயர். கடந்த வருடம் அக்டோபர் மாதப் பிற்பகுதியில் வீரமணி ஐயர் காலமானார். இவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் சென்றிருந்த அம்பிமகன் மரணம் தன்னைத் தேடித் தேடித் துரத்துவதை நன்கு புரிந்துகொண்டார். மரணம் தன்னைச் சுற்றிச் சுருகுதடம் போட்டிருப்பதை அன்றே உணர்ந்துகொண்ட அம்பிமகன், 'தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்' என்ற இத் தொடரை ஏனோ விரைவாகவே எழுதி முடிக்க விரும்பினார். தனது சக எழுத்தாளருடன் இணைந்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே முழுப் பிரதிகளையும் எழுதி முடித்துவிட்டார். மனித நேயப் போராளியான அமரர் அம்பிமகன் அராஜகங்களுக்குச் சோரம் போகாத காரணத்தால் சின்ன வயதிலேயே மரணத்துக்குச் சரணாகதியாகிவிட்டார். அந்த உயர்ந்த மனிதரின் நாமத்தைப் பறைசாற்றும் இந்த இரத்த வரலாறு தொடர்ந்தும் ஓடிக்கொண்டேயிருக்கும்.

# மூட் பாதையில் மரித்த மிதுவாதம்

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

**அ**மெரிக்க ஜனாதிபதியின் வரவேற்புரைக்குப் பதிலளித்துப் பேசிய ஜனாதிபதி ஜெயவர்த்தன, “அணிசேரா உலகின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், இலங்கையைப் போன்ற ஜனநாயக நாடுகள் சிலவே உள்ளன” என்று கூறினார். இது இந்தியா மீது நடத்தப்பட்ட சூட்சுமமான கண்டனமென சர்வதேச அரசியல் அவதானிகள் அப்போது தெரிவித்தனர்.




அத்துடன், “எமது நாட்டின் வடபகுதி முனையில் தமிழர்களாகப் பிறந்த வழிதவறிய மக்கள் குழுவினர்..... ஒன்றிணைக்கப்பட்ட இலங்கையிடமிருந்து பிரிவினையை எதிர்பார்க்கிறார்கள்” என்றும் ஜெயவர்த்தன கூறினார். ரொனால்ட் றேகனினதும் ஜெயவர்த்தனவினதும் உரைகளை வைத்துப் பார்த்தால் ஜே.ஆரின் விஜயம் ஏதோ வெற்றிபெற்றது போல் தோன்றும். ஆனால் ஜெயவர்த்தனவின் அமெரிக்க விஜயம் படுதோல்வியில் முடிந்தது. இலங்கையுடன் எவ்விதமான பாதுகாப்பு உறவுகளையும் ஏற்படுத்திக்கொள்வதில் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றேகன் அக்கறை காட்டவில்லை. அத்தோடு தமிழ் இயக்கங்களின் போராட்டத்தை அடக்க றேகனின் ஆதரவை ஜெய வர்த்தன பெற முயன்றபோதிலும் அமெரிக்க ஜனாதிபதி அதில் அக்கறை செலுத்தவில்லை. சமாதானத் தீர்வை ஆதரித்ததோடு இந்தியாவின் தலையீட்டை எதிர்க்கவும் றேகன் விரும்பவில்லையென்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

**சோவியத் யூனியனின் மிகப் பெரும் நட்பு நாடாக இந்தியா விளங்கிவந்தது. அத்தகைய பலம்வாய்ந்த பாரத தேசத்துக்கெதிராகச் சுண்டைக்காய் நாடான இலங்கையைப் பயன்படுத்துவதென்பது பயன் தராதென்பது அமெரிக்காவுக்கும் தெரியும். எனினும் 1977இல் ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தன அரசாங்கம் 1983 வரை பாகிஸ்தான், இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளோடு பந்தோபஸ்து, பொருளாதாரம் மற்றும் புலனாய்வுத் தொடர்புகளைக் கொண்டிருந்ததாக ஜே.என்.தீக்ஷித் குறிப்பிடுகிறார்.**

ஜெயவர்த்தனவின் இரட்டைத் தந்திரோபாயம் பற்றி தற்போது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் ஜே.என்.தீக்ஷித் 1996ஆம் ஆண்டு எழுதிய 'த அசைன்மென்ற் கொழும்பு' என்ற ஆங்கில நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். “தமிழர்களின் வன்செயல்களைப் பலாத்காரத்தின் மூலம் அடக்க முனைந்த அதேவேளை, தமிழ்த் தலைவர்களின் அபிலாசைகளுக்கேற்ப அவர்களுடன் அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதைத் தாமதிக்கும் தந்திரோபாயத்தையும் கடைப்பிடித்தார்” என்று குறிப்பிடுகிறார்.

*(அரசியல் தொடர்)*

1977ஆம் ஆண்டு ஜெயவர்த்தன அரசு பதவிக்கு வந்தது முதல் இலங்கை - இந்திய உறவுகளில் விரிசல் ஏற்படத் தொடங்கிவிட்டதென்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். அதுமட்டுமல்ல, இந்திரா காந்தியைக் கேலிசெய்து ஜெயவர்த்தன கூறிவந்த 'பசுவும் கன்றும்' கதை இருவருக்குமிடையிலான தனிப்பட்ட உறவுகளையும் மோசமாகப் பாதித்தன. 1979ஆம் ஆண்டு இந்திரா காந்தியுடனான உறவுகளைச் சீர்செய்யும் நோக்கில் ஜெயவர்த்தன புதுடில்லிக்குத் தூது அனுப்பியிருந்தார். நேரு குடும்பத்துக்கும் ஜெயவர்த்தன குடும்பத்துக்குமிடையில் பாரம்பரியமாகவே உறவுகள் நிலவிவந்ததாக எடுத்துக்காட்ட ஜெயவர்த்தன முனைந்தபோதும் அம் முயற்சி தோல்வியில் முடிந்தது. ஜெயவர்த்தனவும் கூட இந்திரா காந்தியை விரும்பவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக 1981இல் இளவரசர் சார்ள்ஸ் - டயானா திருமணத்துக்கு இருவரும் லண்டன் சென்றிருந்தபோதும் அவர்களுக்கிடையில் நட்பு ரீதியான பேச்சுகள் இடம்பெறவில்லையென்று பலர் தெரிவித்தனர்.

லண்டனில் இருவரும் ஒரே ஹோட்டலிலேயே தங்கியிருந்தனரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்திப்பதற்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் புதல்வர் ராஜீவ் காந்தி சென்றிருந்தார். “நீங்கள் எங்களை வெற்றிகொள்ளலாம். ஆனால் எங்கள் உணர்வுகளை உங்களால் வெற்றிகொள்ள முடியாது” என்று ராஜீவ் காந்தியிடம் ஜெயவர்த்தன கூறியதிலிருந்து இந்த வெறுப்புணர்வைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத வடிவம் பெற்று முன்னெடுத்துச் செல்லப்பட்ட விவகாரத்தோடு தேசத்தின் அரசியல், சமூக நிலைமைகள் மட்டுமல்ல, சர்வதேசப் பின்புலங்களும் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசப் பரப்பில் செல்வாக்குப் பிராந்தியங்களை உருவாக்கிக்கொள்வதற்கு இரு பெரும் வல்லரசுகளான சோவியத் யூனியனும் அமெரிக்காவும் பனிப்போர் நடத்திக்கொண்டிருந்த காலமது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

சோவியத் யூனியனின் மிகப் பெரும் நட்பு நாடாக இந்தியா விளங்கிவந்தது. அத்தகைய பலம்வாய்ந்த பாரத தேசத்துக்கெதிராகச் சுண்டைக்காய் நாடான இலங்கையைப் பயன்படுத்துவதென்பது பயன் தராதென்பது அமெரிக்காவுக்கும் தெரியும். எனினும் 1977இல் ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தன அரசாங்கம் 1983 வரை பாகிஸ்தான், இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளோடு பந்தோபஸ்து, பொருளாதாரம் மற்றும் புலனாய்வுத் தொடர்புகளைக் கொண்டிருந்ததாக ஜே.என்.தீக்ஷித் குறிப்பிடுகிறார். எனவே இந்தியாவுக்குக் கேந்திர முக்கியத்துவம் மிக்க சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் ஜெயவர்த்தனவின் இலங்கை மாற்றப்பட்டுவிடலாமென்று இந்திரா காந்தி அஞ்சியது நியாயமானது என்றும் கூறுகிறார் தீக்ஷித். இலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஐ.தே.க.வையும் எடுத்துப் பார்த்தால் கூட இந்தியாவுடனான உறவுகளில் இரு கட்சி ஆட்சிகளும் கொண்டிருந்த உறவுகளின் தன்மையை உணர்ந்துகொள்ள முடியும். எப்போதுமே கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி போன்ற இடதுசாரிகளுடன் உறவு வைத்துக்கொள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டாரநாயக்கா காலத்திருந்தே நேரு குடும்பத்தோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தது.

1970களின் பிற்பகுதியில் இந்திய ஜனாதிபதியாகவிருந்த சஞ்சீவ் ரெட்டியும் பிரதமராகவிருந்த மொரார்ஜி தேசாயும் கொழும்புக்கு விஜயம் செய்த சந்தர்ப்பங்களில் ஜெயவர்த்தனவைச் சந்தித்தபோதெல்லாம் இந்திரா காந்தி பற்றியும் அவரின் ஆட்சித் திறன் பற்றியும் பரிகசித்தார்களென்ற சங்கதிகளும் இந்திரா காந்தியின், காதுகளுக்கு எட்டியிருந்தன. ஜெயவர்த்தன இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றிய அதே காலப் பகுதியிலேயே புதுடில்லியில் இந்திராவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு மொரார்ஜி தேசாய் பதவியேற்றிருந்தார். 1980களிலிருந்தே இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளுக்கும் போராட்டக் குழுக்களுக்கும் இந்திரா காந்தி ஆதரவு வழங்கிவந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

(தொடர்ந்து வழியும்....)




**வ**ணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

என்னதான் உரக்கக் கத்தினாலும் செவிடன் காதில சங்கு ஊதின மாதிரி சில சம்பவங்கள் தொடர்ந்தும் நடந்துகொண்டுதான் இருக்கு. இந்தப் படுகொலைக் கலாசாரத்தைப் பற்றித்தான் சொல்லிறம் எண்டதைப் புரிஞ்சிருப்பியள். உந்தச் சமாதான ஒப்பந்தத்துக்குப் பிறகு வானத்தில இருந்து விழுந்திருக்கிறான் பிஸ்டல்காறன். இனந்தெரியாதவனாகச் சுட்டுப்போட்டு அவன் தன்ரபாட்டில போயிடுறான். சுடப்படுகிறவையளின்ர மனைவி, பிள்ளைகள், உறவுகள் அனாதரவா நிண்டு தவிக்குதுகள். எப்பதான் இந்தப் பிசாசு நம்மை விட்டு அழியப்போகுதோ?

***சின் :-*** *நாளுக்கு நாள் விலை அதிகரிக்கிறதால மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதே!*

**மன் :-** எரிபொருளின்ர விலைதான் கூடுது எண்டாங்கள். இப்ப என்னடாவெண்டால் எல்லாத்துக்கும் விலையைக் கூட்டுறாங்கள். அரசாங்கமும் எதையும் செய்ய முடியாமல் நிண்டு முழிக்குது. எதிர்க்கட்சி இதையே அரசியலாக்குது. யுத்தப் பேய் பிடிச்ச நாடுகளுக்கெல்லாம் இதுதானப்பா தலையெழுத்து.

***சின் :-*** *தலையெழுத்தை யாரால மாத்த ஏலும்..... திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில இருக்கிற தம்பிமாரின்ர முகாம், பங்கர்களை 3 கி.மீ. தூரத்துக்கு அப்பால அப்புறப்படுத்த வேணுமெண்டு பாதுகாப்பு அமைச்சு தெரிவிச்சிருக்கிறதே.*

**மன் :-** நாட்டில நடக்கிற விரும்பத்தகாத நிகழ்வுகளை அவதானிக்கேக்க, சமாதானம் இருக்கிற தொலைவை விடவும் சண்டை இருக்கிற தொலைவு குறைவு மாதிரி இருக்கு. போன தடவையும் திருகோணமலையில கப்பல் ஒண்டைத் தாக்கித்தானே தம்பிமார் சண்டையைத் தொடங்கினவை. அதால படைத் தரப்பு யோசிக்குதாக்கும். தம்பிமார் முகாம் அமைச்சி ருக்கிறாங்கள் எண்டது சும்மா. அவையள் கெரில்லா யுத்தம் செய்யிறவையள். மறைஞ்சிருந்து தாக்கிற வையள். அதற்கேன் முகாம்? இதெல்லாம் ஒரு பம்மாத்துதான்.

***சின் :-*** *அட..... கூடாரம் போட்டுப் பிரிச்சால் முகாம் அகற்றியாச்சு எண்டு அர்த்தமாக்கும்.....ஒரு வாரத்துக்குள்ள ரெண்டு ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனரே.*

**மன் :-** ஏன் ஒரு வாரத்துக்குள்ள ரெண்டு எண்டுறீர். அம்பாறையில கமலன், கொழும்பில சின்னபாலா, திருகோணமலையில பாண்டியன், யாழ்ப்பாணத்தில அருள்தாஸ், புத்தளத்தில பவான். இவர்கள் எல்லோருமே முக்கியஸ்தர்கள்தான். அதுவும் குறைஞ்ச காலப்பகுதிக்குள்ளயே சுடப்பட்டிருக்கினம். அரசியலில மாற்றுக் கருத்துக் கொண்டவையளைச் சுடுறதும் போராட்டந்தான் எண்டு தம்பிமார் வண்டில் விடுறது, சனம் மௌனமா இருக்கிற வரைக்கும் தொடரும் போல தான் கிடக்கு. தம்பிமார் சமாதானமெண்டு பேச வந்தாலே படுகொலைகள் நடக்கப் போகுதெண்டெவுக்கு நிலமை மோசமாகிப் போயிட்டுது.

***சின் :-*** *சுடுகாட்டுப் பேய்க்கு சவம் வந்தாச் சந்தோசமெண்டு சொல்லிறியள் போல கிடக்கு. மின்னின நிகழ்ச்சியில சந்திப்புக்களுக்கு ஏற்பாடு செய்யிற சந்திரசேகரனார் வந்து, இ.தொ.கா. காறரை ஒரு பிடி பிடிச்சாரே பாத்தனீங்களே......!*

**மன் :-** பிடிப்பார், பிடிப்பார். உடையவன் இல்லாட்டால் ஒரு முழம் கட்டைதான் இதுக்கு முந்தின மின்னலில வேந்தனாருக்கு பளீரெண்டு மின்னினவையெல்லே....இ.தொ.கா. எம்.பி.மார் அதுக்குப் பதிலடிதான் இந்த செற் அப். அவரை அவமானப்படுத்த என்ன வழியெண்டு யோசிச்சுப் பாத்து அந்த நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தினவர் எங்கட சின்னத்தம்பி. அது பலிக்கயில்ல. பின்ன, அவையள் இல்லாம இவரை மட்டும் கூப்பிட்டு சவுண்ட் கொடுங்கோவெண்டு கேட்டுக்கொண்டிருக்கிறார். ம்...ஊடக விளையாட்டுக்கு ஒரு அளவே இல்லாமப் போயிட்டுது.

***சின் :-*** *அப்பிடிச் சொல்லாதயுங்கோ. நிகழ்ச்சி செய்யிற சின்னத்தம்பி தம்பிமாருக்காக ரொம்பக் கஷ்டப்படுகிறார். திருகோணமலை கோமரங்கடவெலவில தம்பிமாரால கைதுசெய்யப்பட்ட ரெண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிக்க வேணுமெண்டால் சிறையிலிருக்கிற பத்துத் தம்பிமாரை விடுவிக்க வேணுமெண்டு கேட்டிருக்கினமே.*

**மன் :-** அப்பிடிப் போடு....போடு....போடு....அந்த ஊர்காவல் வீரர்களை விடுதலை செய்யக் கோரி சிங்கள மக்கள் தொடர் போராட்டங்களைச் செய்து வருகினம். அதால இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்ட வேணும். அதுக்காக சிறையிலிருக்கிற தம்பிமாரை விடுவிக்கக் கேட்டது கெஸ்ட் ஓவர். தம்பிமார் சிறைக்கு வந்தது, யுத்த நிறுத்த மீறல்கள் சம்பவங்களோட தொடர்புபட்டதால. ஆனால் ஊர்காவல் வீரர்கள் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ள வழிதவறிப் போனதால இதுக்காக குற்றவாளிகளை விடுங்கோ எண்டிறது தவறு. இப்பிடியே போனா எதிர்காலத்தில பலர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்படவும் வாய்ப்புகள் இருக்கு. எதற்கும் உஷார். பிளீஸ்.

***சின் :-*** *ஐயையோ எப்பிடிப் பாத்தாலும் பயங்கரவாதம் தன்ர விளையாட்டை விடுகிற மாதிரியில்லையே.... இலங்கை, இந்திய கடற்பரப்பில தம்பிமாரை ஒரு கடற் பிரிவாக இந்தியா ஏற்றுக் கொள்ளாது எண்டு இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய கடற்படைத் தளபதி தெரிவிச்சிருந்தாரே.*

**மன் :-** என்னத்தைச் சொல்லி என்னத்தைச் செய்ய....தம்பிமார் இவையளின்ர கண்ணில பெருமணலை அள்ளித் தூவி விட்டு கப்பல் கப்பலா ஆயுதம் கொண்டு வருகினமே...அவையளென்ன, இவையள் அனுமதிக்க மாட்டினம் எண்டு பயந்தா செய்யினம்? ஐயா அதிகாரிகளே!- சும்மா அறிக்கை விடாமல், வேலையில உங்கட வீரத்தைக் காட்டுங்கோ. உங்கட அறிக்கைகளை வாசிச்சு வாசிச்சுப் புளிச்சுப் போச்சுங்கோ....

***சின் :-*** *சத்தமாச் சொல்லாதயுங்கோ....அவையளின்ர காதில கேட்டிடப் போகுது...தென்னிலங்கையிலயிருந்து போன ஊடகவியலாளர்களைச் சந்திச்ச தம்பி தமிழ்ச்செல்வன், தம்பிமாரும் தமிழ் மக்களும் சமாதானத்தால எவ்வித பயலனையும் அடையவில்லை எண்டு குறிப்பிட்டிருக்கிறாரே.....*

**மன் :-** போன வாரமும் சொன்னனான். தமிழ் மக்கள் வேறு, தம்பிமார் வேறு எண்டதைத் தம்பிமார் அடிக்கடி இப்ப பேசிக்காட்டினம். இவையள் உண்மையான சமாதானத்தை விரும்புகினம் எண்டால் உண்மையாவெல்லோ நடக்க வேணும். இவையள் பித்தலாட்டம் பண்ணுகினம் எண்டதை அமெரிக்காக்காறர் தெளிவாச் சொன்னவையளெல்லோ. உண்மையாகவும் அர்ப்பணிப்பாகவும் தம்பிமார் நடக்க வேணும் எண்டு அமெரிக்காக்காறர் சும்மாவே சொன்னவை?

***சின் :-*** *சும்மாயிருங்கோ அண்ண! பழசையெல்லாம் ஞாபகத்தில வச்சிருப்பியள்...மன்னாரில போதைவஸ்து கடத்திற சம்பவம் அடிக்கடி நடக்குதே!*

**மன் :-** ஐயோ ராசா. இது எப்பவும் நடக்கிற விஷயம். இந்த வியாபாரத்துக்குப் பின்னால ஆயுதம் வச்சிருக்கிறவையள் உட்பட அதிகாரம் உள்ளவையளும் இருக்கினம். கிட்டடியில எம்.பி. ஒருவரின்ர சகோதரர் இப்பிடிப்பட்ட ஒரு கேசில இந்தியாவில பிடிபட்டவர் எண்டதும் ஞாபகமிருக்கு. எங்கட சனத்தை எப்பிடியெல்லாம் சீரழிச்சுக் காசு பறிக்க முடியுமோ அப்பிடியெல்லாம் சீரழிக்கிறாங்கள். .யார் தட்டிக் கேட்கிறது. எவ்வளவு நாளைக்கு இந்தக் கூத்தெல்லாமெண்டு பாப்பம்.

***சின் :-*** *உலக சமாதானத்துக்காக இந்தமாதம் 21ஆம் திகதி பகல் 12 மணிக்கு ஒரு நிமிடத் தியானம் செய்யுமாறு மாதா அமிர்தானந்தா கேட்டிருக்கிறாராரே!*

**மன் :-** ம்....நானும் தியானம் செய்தனான். ஐ.நா.சபை செப் 21ஆம் திகதியை உலக சமாதான தினமாக அறிவிச்சிருக்கிறதுக்காக.... சமாதானமெண்ட போர்வையில படுகொலைகள் மலிஞ்சு போயிருக்கிற எங்கட நாட்டில இருந்துகொண்டு உலக சமாதானத்துக்காக தியானம் எண்டது பைத்தியக்காரத்தனம்தான். என்ன செய்ய? சில சமயம் நம்ப முடியாத நம்பிக்கைகளுக்குள்ள கட்டுப்பட்டுப் போகுது. விடுபட்டு நிக்க நாம் என்ன இயந்திரமா? இல்லையே....

நன்றி

**மன்னவரும் சின்னவரும்**

# குழந்தைகளை வாழவிடுங்கள்!


**நீ**ங்கள் ஒரு நண்பர் வீட்டுக்குச் சாப்பிடச் செல்லுகிறீர்கள். அங்கே ஒரு புதிய அயிட்டம் பரிமாறப்படுகிறது. உடனே நீங்கள், "இது என்ன? நன்றாக இருக்கிறதே! எப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்பீர்களில்லையா! அதையே உங்கள் வீட்டிலும் அடுத்து ஒருநாள் செய்து பார்ப்பீர்களில்லையா? நண்பர் வீட்டில் சொன்ன செய்முறைப்படிதான் சமைப்பீர்கள் என்றாலும், உங்கள் குடும்பத்தினரது டேஸ்ட்டுக்கு ஏற்ப அதைத் தயாரிப்பீர்கள் இல்லையா? இதையே உங்கள் குழந்தைகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கலாம்!

எப்படி உங்கள் மகன்? ஒரு சுமாராய்ப் படிக்கும் மாணவன் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் வாங்கும் மார்க் போதாது. அவன் இன்னும் நன்றாகப் படித்து, நிறைய மார்க் வாங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களில்லையா? அதற்குத்தான் நீங்கள் நண்பர் வீட்டில் சாப்பிட்ட புது அயிட்டம் மாதிரியான யுக்தியைப் கடைப்பிடிக்கலாம்.

உங்கள் குழந்தையை விட நன்றாகப் படித்து, வகுப்பில் நிறைய மார்க் வாங்கும் மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைப் பரிச்சயமாக்கிக்கொள்ளுங்கள் அவர்களது மகன் நன்றாகப் படிப்பதற்காக வெளிப்படையாகப் பாராட்டுங்கள். அடுத்து, உங்கள் மகனும் அவனைப் போலப் படிக்க வேண்டும் என்ற உங்கள் ஆர்வம் பற்றிச் சொல்லிவிட்டு, அந்தப் பையன் எந்தெந்த வழிமுறைகளைப் பின்பற்றிப் படிக்கிறான் என்று பெற்றோர்களை மட்டுமன்றி அந்தப் பையனையே கூடக் கேளுங்கள்.

அவர்கள் கூறும் வழிமுறைகள், நூற்றுக்கு நூறு உங்களால் ஏற்றுச் செயற்படுத்த முடியும் என நான் நினைக்கவில்லை. உங்களுக்குச் சரிப்படாது என்கிற உத்திகளை விலக்கிவிடுங்கள். பையனின் முன்னேற்றத்துக்கு நிச்சயம் உதவும் என்கிற டெக்னிக்குகளை மட்டும் குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். பையனிடம், "அவனும் உன்னைப் போன்றவன்தான். ஆனால் எப்படிப் படிக்கிறான் பார்த்தாயா? நீயும் அதே போலப் படிக்க வேண்டும்; அதற்கு நீ இன்னின்ன முறைகளைக் கையாள வேண்டும்" என்று அதிகாரம் பண்ணும் விதமாய்ச் சொல்லாதீர்கள்.

மாறாக "இரண்டு பேரும் ஒரே மாதிரிதான். அவனால் முடிகிறபோது, உன்னால் முடியாமல் போகுமா? அவன் பின்பற்றும் உத்திகளை நீயும் பயன்படுத்தலாம். நீயும் அவனைப் போலவே சாதனைகள் புரியலாம். உன்னாலும் சாதிக்க முடியும் என்பதை எப்போதும் நினைவில் நிறுத்திக்கொள்" என்று ஊக்கம் தரும் விதமாய், ஆலோசனை சொல்லுவது போலச் சொல்லலாம்.



இதற்கு நல்ல பலன் இருக்கும். சாதனை புரிய முடியாது என்று சோர்ந்து போயிருக்கிறவர்கள் சாதனை புரிய இதுதான் அத்திவாரம். அடுத்து, அந்த உத்திகளைக் கையாளத் தொடங்கிய உடனேயே வெற்றி வந்துவிடும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. அதிலும் சில தோல்விகளைச் சந்திக்க நேரிடலாம். அதற்காக, உங்கள் குழந்தையின் மனம் தளர்ந்துவிடக் கூடாது. இந்த ஐடியாக்கள், வெற்றி பெற்ற மற்றவர்களுக்குப் பயன்பட்டிருக்கலாம். நமக்குச் சரிப்பட்டு வராது என்ற முடிவுக்கு உடனே வந்துவிடாதீர்கள்.

சற்றே பொறுமையுடன் யோசியுங்கள். 'எங்கே தவறு? அங்கே ஜெயித்த யுக்தி, இங்கே ஜெயிக்காமல் போகிறதென்றால், எங்கே குறைபாடு' என்று அலசிப் பாருங்கள். அவைகளைப் பின்பற்றுவதில் உங்கள் குழந்தைக்கு என்ன சிரமம் என்று பரிவுடன் கேளுங்கள். ஏதாவது மாற்றங்கள் அவசியமானால், அவற்றைச் செய்து பாருங்கள்.

நான் இந்த இடத்தில் மறுபடியும் வலியுறுத்தும் பாயிண்ட் ஒன்றுதான். தோல்வி என்பது ஒரு பெரும் தவறு இல்லை. அந்தத் தோல்வியின் காரணம் என்ன? அதிலிருந்து உங்களால் என்ன பாடம் கற்றுக்கொள்ள முடிந்தது என்பதுதான் முக்கியம். குறைகளை நிவர்த்திப்பதுதான் அதன் அடுத்தக் கட்டம்.

இப்போது ஒரு ஜென் கதை சொல்லப் போகிறேன். ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு ஜென் குருவைச் சந்தித்தபோது ஜென் குரு, அரண்மனையில் தோட்டம் போடுவது எப்படி என்று விளக்கினார். தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பியதும் மன்னர், ஜென் குரு கூறியபடி தனது அரண்மனையில் இருந்த தோட்டத்தை மாற்றியமைத்தார். அதனைப் பிரமாதமாகப் பராமரிக்கும் நோக்கத்துடன், புதிய ஊழியர்களை நியமித்தார். சில மாதங்கள் சென்றன. ஜென் குரு, மன்னரின் அரண்மனைக்கு அவருடைய தோட்டத்தைப் பார்ப்பதற்காக வந்தார்.

தோட்டத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கின. எங்கும் பசுமை. பார்ப்பவர் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்படியாக ஒரு தோற்றத்தை அளித்தது, அந்தத் தோட்டம்.

சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தார் ஜென் குரு. கூடவே அமைதியாக நடந்து வந்தார் மன்னர். தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து முடித்தவுடன், பாராட்டுத் தெரிவிக்கப் போகிறார் ஜென் குரு என்று காத்திருந்தார் மன்னர்.

தோட்டத்து ஊழியர்களிடம், கொஞ்சம் காய்ந்த இலைகளைக் கொண்டுவரச் சொல்லி, அவைகளைத் தோட்டம் முழுக்க மண்ணில் ஆங்காங்கே போடச் சொன்னார். மன்னருக்கோ ஒன்றும் புரியவில்லை. குரு சொன்னார்: "மன்னரே! உங்களுக்கு ஜென் தோட்டக்கலை தெரியவில்லை. நீங்கள் இந்த அழகான தோட்டத்தைச் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், இயற்கையான சூழலை இழக்கச் செய்துவிட்டீர்கள். தோட்டம் என்றால், மரங்கள், செடி, கொடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள் ஆங்காங்கே கிடக்கும். அது இயற்கை. அதில்தான் தோட்டத்தின் இயற்கையான அழகே இருக்கிறது.

ஆனால் நீங்கள், தோட்டத்தைச் சுத்தமாகப் பராமரிப்பதில் அதிகம் கவனம் செலுத்திவிட்டதால், இயற்கையான அழகு போய்விட்டது" என்றார்.

நம் குழந்தைகளும் இத்தகைய தோட்டங்கள் போலத்தான். அவர்களைக் கட்டுப்பாடு என்ற பெயரில், அந்தப் பருவத்துக்குரிய நல்ல, இயற்கையான விஷயங்களிலிருந்து அந்நியப்படுத்திவிடாதீர்கள்!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

**நெஞ்சினில் என்ன காயமோ...?**

**தவிர்க்கமுடியாத காரணத்தினால் அடுத்தவாரம் பிரசுரமாகும்**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 86க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எஸ்.ஜே. சந்தோஷ், இல.44, கொன்வென்ற் றோட், சின்னக்கடை, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அதீப் சலீம்கான், கண்டக்குளி, கற்பிட்டி.
2. திரு.மு. கிருபாரட்ணம், 130, கல்லூரி வீதி, திருகோணமலை.
3. யே. யெனிற்றன், ஓடக்கரைவீதி, சங்கானை.
4. இந்துமதி வடிவேல், ஏறாவூர்-5, செங்கலடி.
5. வீ.எஸ்.எஸ். ஆனந்தர், 7,1/2 கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தை.
6. எஸ்.என். ஜெஸ்மின், 359/B வாரன வீதி, திஹாரிய.
7. தவராஜா தெட்சயாண்ன், 27, அம்பாறை வீதி, அக்கரைப்பற்று.
8. எப். கேமலா பெரேரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
9. பொ. பாலசுப்பிமைணியம், கிறெகொரி வீதி, தெகிவளை.
10. க. நாகநந்தினி, புளுமண்டல் தொடர் மாடி, கொட்டாஞ்சேனை.

## குறுக்கெழுத்துப் போட்டி 88

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | ■ | 20 |
| 21 | 22 | ■ | ■ | 23 |

**இடமிருந்து வலம்**

1. பாதாள மூலி.
6. வாசனை திரவியங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
9. பறப்பதற்குத் தேவையானது.
14. இனம் (திரும்பியுள்ளது).
17. சின்னத்திரை நாடகங்களில் ஒன்றுதற்போது ஒளிபரப்பப்படுவது.
22. வஞ்சகம் (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. பண்டாரவன்னியனை ஞாபகமூட்டும் கிராமம்.
3. துயரம் (குழம்பியுள்ளது)
4. இவ்வாறு சித்தித்ததாலேயே மனிதன் முன்னேறினான் (தலைகீழாவுள்ளது)
8. குதித்து ஆடுதல் (குழம்பியுள்ளது).

## குறுக்கெழுத்துப் போட்டி 86 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| அ 1 | ன் 2 | ணா 3 | சி 4 | ■ |
| ட 5 | ■ | ட் 6 | ப 7 | டி 8 |
| க் 9 | ரு 10 | வி 11 | ■ | ளா 12 |
| ரு 13 | ■ | டு 14 | ரு 15 | க 16 |
| ஓ 17 | ■ | ■ | லை 18 | லா 19 |
| றை 20 | க 21 | யை 22 | ■ | ம் 23 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.09.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-88
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

**வண்ணச் சேலை பரிசுப் போட்டி**

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**

377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

62

பெயர்: ..........................
முகவரி: ..........................
..........................
தொழில்: ..........................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-09-2004

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**கல்முனை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 60

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எஸ். சாந்தி**
107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு-01, கல்முனை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## இவ்வாரச் சிறு கதைகள்

# செருப்பு

பிள்ளையார் கோவில்மணி வழக்கமான இனிமையின்றி ஒலிப்பது போல், நீண்ட நேரமாய் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது. ஏதாவது விபரீதம் நடந்தால்தான் இவ்வாறு ஒலிப்பது வழக்கம். இன்றைக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. காதை அடைக்கும் அந்தச் சத்தம் பொறுக்காமல் தேவி வீட்டு வாசலருகே வந்து நின்றிருந்தாள்.

சங்கக் கடைக்குச் சாமான்கள் வாங்கப் போயிருந்த அப்பா, தெருக் கோடியில் பரக்கப் பரக்க வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் முகத்தில் என்றுமில்லாத கவலை தெரிந்தது. அவர் படலையைத் தாண்டி வந்ததும், ஓடோடிச் சென்று அவரிடமிருந்து சாமான் பையை வாங்கி வைத்துக்கொண்டு தேவி கேட்டாள்-

“என்னப்பா.....?”

“உனக்குப் புதினம் தெரியாதா?”

“இல்லையே.....?”

“கோவிலுக்கருகே ஒரு பிணம் கிடக்குதாம். யாரோ சுட்டுப் போட்டார்களாம்...!”

“கடவுளே...”என்று கண் கலங்கிய தேவி, நெஞ்சு முட்டிய சோகத்துடன் மேலும் விபரம் அறிய விரும்பி, அவரைக் கேட்டாள்.

“அப்பா! அது ஆரெண்டு தெரியுமே?”

“ஒரு சின்னப் பெடியனாம். பத்துப் பன்னிரண்டு வயதுப் பாலகன் போலத் தெரியுதாம்! எங்கட ஊருக்குள்ள இது நடந்திருக்கே. எல்லாம் கலி முற்றிய காலப் பிழைதான்.”

“அப்பா! நான் அதைப் போய்ப் பார்த்திட்டு வரட்டே?”

“நீ எதுக்கு? தாயில்லாப் பிள்ளையென்று உன்னைப் பொன் போலக் காப்பாத்தி வாறன். அங்கை போய், இந்த அக்கிரமத்தைப் பார்த்தால் உனக்கு மனம் தாங்குமே?...”

“என்ன செய்வதப்பா. எனக்குக் கண் போய்விடுமேயென்று உங்கடை கவலை. அநியாயமாய் அந்தச் சின்னப் பெடியன் செத்துவிட்டிருக்கிறானே. இதுக்குக் கவலைப்பட மாட்டியளே?”

“சரி, கோவில் மதிலுக்குப் பின்னாலே தூரத்தில் மறைந்து நின்று பார்த்திட்டு, உடனே திரும்பி வா.”

என்று அவர் விடை கொடுத்ததும், அவள் மாமி வீட்டு வளவைத் தாண்டிப் போய் பனை வடலியினூடாகப் போகும் ஒற்றையடிப் பாதையில் ஏறி நடக்கும் போது, லட்சுமியக்கா எதிர்ப்பட்டாள். அவள் தேவிக்கு உறவு இல்லா



-ஆனந்தி, தெஹிவளை.

விட்டாலும், தேவி வாய் நிறைய அன்பொழுக அவளை அக்கா என்றே அழைக்கின்றாள். மிகவும் கஷ்டப்படுகிற குடும்பத்தைச் சேர்ந்த லட்சுமி தலையில் ஒரு கடகத்தோடு, அந்தப் பனை வடலிக்குள் வந்து விறகு பொறுக்கிக்கொண்டு போவாள். விகடமாக நிறையப் பகிடிக் கதைகள் சொல்வாள்.

அப்போது குனிந்து பனை மட்டை பொறுக்கிக்கொண்டிருந்தவள், தேவியின் காலரவம் கேட்டு, நிமிர்ந்து பார்த்தாள்.

“எங்கே ஓடுகிறாய் தேவி? அங்கை, கோவிலடியில பிணம் கிடக்குதல்லே! நீ அதைப் பார்த்துவிட்டுப் பயத்திலே கத்தப் போறியே?”

“லட்சுமியக்கா....ஆரோ சின்னப் பெடியனாம். அதுதான் மனம் கேட்காமல் போய்ப் பார்க்கப் போறன்” என்று கூறிய தேவி, மேற்கொண்டு அவளோடு பேச விரும்பாமல் கோவிலை நோக்கி வேகமாக நடந்து போனாள்.

பிள்ளையார் கோவில் அந்தக் களேபரத்திலும் சிறிதும் பங்கப்படாமல் அமைதியாகவே தெரிந்தது. மாலை நேரப் பூசை தடைப்பட்டுக் கோவில் பூட்டிக் கிடந்தது. அவள் அதை அண்டினாற் போலிருக்கும் குச்சொழுங்கையின் கடைசி எல்லை வரைக்கும் போய், அதில் மறைந்து மதிலின் விளிம்பு வழியாகத் தெருவை எட்டிப் பார்த்தவள் திடுக்கிட்டுப்போனாள்.

அந்தச் சிறுவனின் சடலம் அனாதையாய் தெருக் கரையில் கிடந்தது. இரத்தக் கறை படிந்த வெள்ளைத் துணியால் அவனை யாரோ மூடிவிட்டுப் போயிருந்தார்கள். கால்கள் மட்டும் வெளியே நீட்டிய படியே கிடந்தன. அவற்றிலும் சிதறிக் கிடந்த இரத்தத் துளிகள் இன்னுமொரு பரிதாபக் காட்சி. சுடுகிறவன் துரத்திக் கொண்டு வரும்போது அந்தப் பையன் மிக வேகமாக ஓடி வந்திருக்க வேண்டும்.

அப்படி அவன் தலைதெறிக்க ஓடி வந்த வேகத்தில் அவனது கால் செருப்பு ஒன்று வார் அறுந்த நிலையில் இரத்தம் குளித்துக்கொண்டு தெருவின் நடு மையத்திலே வீழ்ந்து கிடந்தது.

அவள் வெகு நேரமாகக் கண் கலங்கியவாறு நிம்மதியிழந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அநியாயமாக, இச் சிறுவனைக் கொன்று போட யாருக்கு மனம் வந்தது? அதற்கு இவன் செய்த மிகப் பெரிய குற்றம்தான் என்ன? பெரிய தர்ம காவலனென்று சொல்லிக்கொள்கிற ஒருவனே இதைச் செய்திருக்கக்கூடும். இதற்கு அவன் ஆயிரம் நியாயங்கள் பிரகடனப்படுத்திக் கூறுவான்.

எனினும் நீதி செத்துவிட்டதைப் பகிரங்கமாகச் சாற்றிக்கொண்டிருக்கும் இச் சிறுவனின் பரிதாபச் சாவிற்கு அவை பரிகாரமாகிவிடப் போவதில்லை. இச் சிறுவனதும், இவன் செருப்பினதும் துயரம் மிகுந்த நினைவுக் காட்சிகளையே தன் மனதில் சிலுவை குத்திக்கொண்டு நிற்க நேர்ந்திருக்கிறதே அவளுக்கு. இப் பாவத்தின் கறை போக அது போதும்.

அதன் பிறகு இனிய வாழ்வின் தடங்களே அடியோடு மறந்து போனவளாய் அழுது வாடிய முகத்துடன் அவள் வீடு திரும்பினாள். வாசலில் நின்று அப்பா அவளை எதிர்கொண்டார்.

“என்ன? சவத்தைப் பார்த்து முடிஞ்சுதே? போய்க் குளிச்சிட்டு வா!”

“அப்பா! ஆற்றிலே முழுகினாலும் நெஞ்சிலே நிற்கிற அந்தச் சிறுவனின் முகம்...இல்லைச் செருப்பு அழியாது. அது காலம் காலமாய், என்னைத் தொடர்ந்து வருத்திக்கொண்டிருக்கும். இனித் துவக்கு மனிதனைக் காணும் போதெல்லாம் இந்தச் செருப்புத்தான் என்னைத் துடிதுடித்து அழ வைக்கும். நான் எப்படி மறப்பேனப்பா அந்தச் செருப்பை?”

அவள் கண்ணைக் கிழித்த அந்தச் செருப்பு அவள் காட்சியில் தோன்ற மறுத்தது. அது ஒரு உயிரை வதைக்கும் சிரஞ்சீவி சோக காவியமாய் அவளுக்கு மட்டுமே புரியக் கூடியது. அதை மேலும் விமர்சனம் கொண்டு விளக்க விருப்பமின்றி அவள் மனம் கனத்துப் போயிருந்தாள்.

*(யாவும் கற்பனை)*

---

# தந்தி

நிலாவொளி அமைதியாகப் பொழிந்து கொண்டிருந்தது. அந்த நிலாவொளியிலே தனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான் லவீ. “என்ன மகன் கனத்த யோசனை” என்றவாறு வந்தமர்ந்தாள் அவனது தாயார் கமலம். “பின்ன என்னம்மா எத்தனை நாட்களுக்குத்தான் வேலை ஒன்றும் கிடைக்காம சும்மா வீட்டிலேயே குந்திக்கொண்டிருப்பது. வேலை வேலை என்று ஏறாத பஸ் இல்ல; இறங்காத ஆபீஸ் இல்ல. கால் பிடித்துக் கெஞ்சாத எம்.பி. இல்லை. இந்தப் பயணத்திற்கு செலவு செய்த காசு போதும் வேங்கில போட்டுச் சாப்பிடுவதற்கு பி.ஏ. படிச்சென்ன, நல்ல றிசல்ட் வைத்திருந்தென்ன வேலை ஒன்று கிடைக்கவா போகுது” என விரக்தியுடன் கூறிய மகனை ஏறிட்டு நோக்கிய கமலம் “என்ன தம்பி செய்வது? எங்களிண்ட தலையிலும் வேலை பார்க்க வேணும் என்ற பலன் எழுதியிருக்க வேணுமே

**-சம்பூர் அரவிந்த், திருமலை.**


தம்பி! அந்த தொண்டர் ஆசிரியர்களுக்கெல்லாம் நியமனம் கொடுக்கப் போறாங்களாமே. அது இப்ப என்ன மாதிரி தம்பி” எனக் கேட்டாள் தாய். “அதெல்லாம் விட்டுத் தள்ளுங்கம்மா. சும்மா உண்ணாவிரதம் இருந்து உடம்பை வருத்தியதுதான் மிச்சம். இப்போ எதற்கெடுத்தாலும் லஞ்சம் தான் அம்மா. காசி கொடுத்தால் வேலை எடுக்கலாம்தான். நாங்க காசுக்கு எங்கம்மா போவது?”

“சொந்தம் பந்தம் இருந்து என்ன பிரயோசனம். நமக்கு யார் உதவப் போறாங்க. ‘நன்றாக வாழ்ந்தால் ஊரும் உறவும் நம்பக்கம்; திண்டாடிப் போனால் ஊரும் உறவும் புறப்பக்கம்’ என்பார்கள், உண்மைதான்.” என்றாள் கமலம் மகனிடம்.

“டேய் தம்பி, எதிலும் கஷ்டப்பட்டால்தான் பலன் கிடைக்கும். நாம் எதைச் செய்ய நினைத்தாலும் முதலில் கஷ்டம் தான். அதற்காக துன்பத்தைக் கண்டு துவழக் கூடாது. நீ... கைக்கொண்டிருக்கும் இலட்சியத்தில் உறுதியாய் இரு. எல்லாம் ஆண்டவனின் சோதனை என நினைத்து உறுதியுடன் இரு. நிச்சயம் உனக்கு வெற்றியுண்டு” என ஆறுதல் வார்த்தை சொன்னாள் கமலம். “அம்மா எல்லாவற்றிற்கும் ஆண்டவன் மேலே பாரத்தைப் போடக்கூடாது. வாழ்க்கைச் சுழற்சியில் எதிர்நீச்சல் அடித்து நாம் வாழ வழி தேட வேண்டும்.

அம்மா..... நாளைக்கு நான் கொழும்புக்குப் போறன் என் நண்பன் நிஷாந்தன் கடிதம் போட்டிருக்கான். ஒரு வேலை கிடைக்கும் வரைக்கும் தன்னோடு கடையில நிக்கட்டுமாம். கொஞ்ச நாளைக்குக் கடையில நிக்கிறன்” என்னம்மா” என்றவாறு எழுந்து சென்று படுக்கையில் விழுந்தான் லவீ.....

ஒருவாறு பொழுது புலர்ந்தது. லவீ கொழும்பு செல்வதற்கு ஆயத்தமானான். அப்பொழுது அங்கு வந்த கமலம் “என்ன மகன் எல்லாம் எடுத்திற்றியா? ஐ.சீ.தான் இந்தக் காலத்தில நமக்கு உயிர் நாடி. அங்கு போன பிறகு கண்ட கண்ட இடங்கள் எல்லாம் திரியாத. கொழும்பில் சேர்ந்த பிறகு ‘பத்திரமா சேர்ந்திட்டன்’ என்று கடிதம் போட்டிடு சரியா.....” என்ற தாயாரிடம் “சரி அம்மா, அப்படி சுத்தித் திரியமாட்டேன். அம்மா என்னைப் பற்றி



யோசிக்காதிங்க. உங்க உடம்பை நல்லா கவனிச்சுக்கிங்க....முக்கியமாக அம்மா எனக்கு வேலை சம்பந்தமாக ஏதாவது கடிதம் வந்தால் உடன் தந்தி அடிச்சிவிடுங்கம்மா.....நான் ஓடோடி வந்திடுவேன். சரியா” என்றவாறு பயணப்படத் தயாரானான் லவீ.

“சரி மகன் கவனமாகப் பொயிற்று வா” என வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தாள் கமலம். மகனின் பிரிவு வேதனையைக் கொடுத்தாலும் வெகு சிரமப் பட்டுக் கண்ணீரை ஒருவாறு அடக்கிக்கொண்டாள்.

நாட்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன.

லவீந்திரன் கடிதமும் காசும் தபாலில் அனுப்பிவிட்டு தாயாரின் பதிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். இந்த வேளையில், “மச்சான் உனக்குத்தான் ஒரு தந்தி வந்திருக்குடா” என்றவாறு லவீயின் கையினில் தந்தியைக் கொடுத்தான் நண்பன் நிஷாந்தன். லவீக்கு சந்தோசம் எல்லைக்குள் அடங்கவில்லை.

வேலைக்குரிய நியமனக் கடிதமே கையில கிடைத்துவிட்ட மாதிரி துள்ளிக் குதித்துக்கொண்டு தந்தியைப் பிரித்தான் லவீ. அந்தக் கணமே கோடாரியால் வெட்டப்பட்ட மரம்போல் சாய்ந்தான் லவீ. ஆம்! அவனது தாயார் இறந்துவிட்ட மரணச் செய்தியையே தந்தி தாங்கி வந்திருந்தது. அவனின் இதயக்குமுறல் வெடித்துச் சிதறியது. “அம்மா....அம்மா....உனக்கு என்னம்மா நடந்தது...நேற்று வரைக்கும் இருந்து....எனக்கு...புத்திமதி சொல்லியும் துணிவு கொடுத்தும் ஊக்கமுட்டினீங்கள்...நான் வாழ வழி காட்டினீங்கள்...இன்று..என்னை மட்டும் தவிக்க விட்டு விட்டு நீங்க மட்டும் மண்ணை விட்டு பறந்து போனது நியாயமா...?” என அந்தக் கடைவீதியே அதிரும்படி கதறிக்கொண்டு தனது நண்பனுடன் பேருந்து தரிப்பிடத்தை நோக்கி ஓடினான் லவீ...

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## ஆற்றலை அதிகரிக்க வேண்டும்

நேற்றைய பயன் இல்லாத எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும், செயல்களுக்கும் அவற்றின் அடையாளமேனும் இல்லாதபடி முற்றுப்புள்ளி வைக்கவும்.

மனிதனுக்கு மொழியின் காற்புள்ளி, முற்றுப்புள்ளிகளைப் பற்றித் தெரியுமேயல்லாது எதிர் மறையான எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளியிடத் தெரியவில்லை.

அன்பான கட்டளைகள் விரோதத்தைத் தோற்றுவிக்காது.

செயற்பட்டு, எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குரிய தருணம் இதுவல்லாது நொண்டிச் சாட்டுகளுக்கு அடங்கி இறந்து போவதற்கான தருணம் அல்ல.

அச்சம் கொண்டிருந்தால் தனக்கும் பிறர்க்கும் ஆபத்தாகும்.

இறைவனே எனக்குத் தந்தையாகவும், ஆசானாகவும், வழிகாட்டியாகவும் (இன்னும் பலவாகவும்) இருக்கும்போது இந்த பௌதீக உலகத்தில் நான் எதற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?

நாங்கள் எல்லோரும் கட்டாயம் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும். ஆனால் எப்படி முகங்கொடுக்கின்றோம் என்பதுதான் கணக்கிடப்படும்.

உலகில் பிரச்சினைகள் அதிகரிக்கத்தான் செய்யும். ஆகவே பிரச்சினைகளைக் கையாளக் கூடியவாறு, நான் என்னுடைய ஆற்றலைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# இலக்கிய நயம்

## "ஓலைச் சிலும்பல்கள் மேனியை அழுத்திட வாலைக் குமரியவள் அழுத்திப் புரண்டாள்"

யாரும் இல்லை என்ற நினைப்பில் உடலை இஷ்டப்படி அலையவிட்டு நன்றாக மலர்ந்த செந்தாமரை போலப் பாயில் படுத்துக் கிடந்த மாலினி, நிரஞ்சனைக் கண்டதும் சட்டென்று கை கால்களால் தன்னை மூடிக்கொண்டு, திடீரென இதழ்களைக் குவித்துக்கொண்ட மலரானாள்.

"மொட்டு விரிந்து மலராவது கண்டிருக்கிறேன். இன்றுதான் ஒரு மலர் திரும்பவும் குவிந்து மொட்டாகிவிட்டதைப் பார்க்கிறேன்" என்று சிரித்தபடி அவளருகே பாயில் வந்தமர்ந்தான் நிரஞ்சன.

அவள் முகத்தில் வெட்கத்தின் ரேகை சினத்துடன் கலந்து படர்ந்தது ஒரு விநாடி.

திடீரென்று நிரஞ்சன் உள்ளே நுழைந்ததால், தான் இருந்த அலங்கோல நிலையை மிகத் துரிதமாகத்தான் சரிசெய்து கொண்டாள் மாலினி. ஆனால் அந்தச் சில விநாடிகளுக்குள்ளாகவே நிரஞ்சன் கண்கள் பார்க்கக் கூடாத இடங்களிலெல்லாம் பாய்ந்துவிட்டதையும், அதன் காரணமாக அவன் நிலைகுலைந்து நிற்பதையும் கண்ட மாலினி... "அப்பா! இந்த ஆண்களுக்குத்தான் எத்தனை துடுக்குக் கண்கள்!" என்று அலுத்துக் கொள்பவள் போல வாய்க்குள் முணுமுணுத்தாள். அது சும்மா மேலுக்குத்தான் என்பதும், உள்ளே பெருமிதமே ஓடியது என்பதும் அவள் கண்களில், அசைவுகளில் தெரிந்தது.

அருகமர்ந்து அவளையே பார்த்துப் பரவசமாகிக்கொண்டிருந்தான் நிரஞ்சன்.



**தருவது முழடில்யன்**

அவள் உடற் பரிமாணங்கள் அவன் கண்களில் வெறியை அதிகப்படுத்திக்கொண்டிருந்தன.

அவள் எழுந்து உடைகளைச் சரிப்படுத்தியபடி அவனருகில் ஒருக்களித்து அமர்ந்தாள். கலைந்த ஆடைகளோடு அங்கிருந்த சிறு விளக்கொளியில் தேவதையென அழகொளிரத் தெரிந்தாள். அவள் சந்திர முகத்தின் இரு கருவிழிகளும் விளக்கொளியில் ஆசையைக் கொட்டின. சீறி நின்ற எழுச்சிப் பகுதிகள் அவளது உடலமைப்புக்குச் சிறிது அதிகமாயிருந்தன. அப்படி அதிகமாயிருந்ததால் அவன் திண்டாட்டமும் அதிகமாயிருந்தது. ஊகங்களுக்கு இடங்கொடுத்த அவள் ஆடைகள் யாரையும் சீரழித்து நிலைகுலையச் செய்யும் வேலையையே செய்துகொண்டிருந்தன.

ஊகத்தால் ஏற்பட்ட சஞ்சலம் அவன் மனத்தைப் பெரிதும் ஆட்டிப்படைக்கவே, அவள் காலின் திண்ணிய மேற்புறத்தில் மெல்லக் கையை வைத்தான். வைத்த கை நிலை கொள்ளாமல் தவித்தது.

மாலினி பாயின் ஓலைச் சிலும்பொன்றைக் கிள்ளியபடி அமர்ந்திருந்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் குனிந்த நிரஞ்சன், முகத்தை அவள் மடியில் புதைத்துக் கொண்டான்.

அவன் முகத்தை அழுத்தியிருந்த விதமும், அவளை இறுகப் பற்றிப் பிடித்திருந்த விதமும் பார்க்க துஷ்டக் குழந்தை போல அவளுக்குத் தெரிந்தான். அதன் காரணமாக பக்கவாட்டில் அலைந்த அவன் வலது கையை எடுத்துத் தனது இடுப்பைச் சுற்றி வைத்துக்கொண்டாள்.

நிரஞ்சன் அவள் மடியில் மெல்லத் தலையைப் புரட்டினான், ஆதரவைத் தேடுபவன் போல. மாலினி மெதுவாகக் குனிந்தாள். சரிந்து தொங்கிய அவளது கூந்தல் திரைக்குள் இரு முகங்களும் ஒன்றையொன்று நோக்கின. மிக நெருக்கத்தில் தெரிந்த அவளது வழவழப்பும் நீரோட்டமுமான உதடுகள் உணர்ச்சி மிகுதியால் மடிந்து மடிந்து இரண்டு மூன்று முறை திறந்ததால் அவற்றில் ஏற்கெனவே பளிச்சிட்ட ஈரம் அதிகமாகி அவற்றுக்கு எல்லை இல்லா அழகையும் அவனுக்கு இம்சையும் அளித்தன.

என்னவோ சொல்ல முற்பட்ட இதழ்களை அவன் முரட்டு உதடுகள் சென்று தடுத்தன. மாலினி பேச்சிழந்தாள். அவன் அத்துமீறும் முன்பே திமிறிக்கொள்ளும் சக்தியையும் இழந்தாள். அவள் சுதந்திரத்தை முற்றிலுமாகப் பறித்துக்கொண்ட அவன் உதடுகளுக்கும் கரங்களுக்கும் தன்னை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தாள்.

விளக்கு அணைந்தது.

அவ்விருவரின் எண்ணங்களில் எழுச்சியே எண்ணெயாகி, இச்சையே காற்றாகி, உணர்ச்சிகளின் கொந்தளிப்பே சுடராகி ஒளிர்ந்தது அந்த அறைக்குள். காமத்தின் வலிய கயிற்றால் பிணைக்கப்படும் உள்ளங்களுக்கு இருட்டே வெளிச்சமாகிவிடும் விந்தை!

இன்று பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த மாலினியை அந்த நினைவுகள் துளைத்துப் பிடுங்கின.

கொடிய வெப்பத்தை வீசிய சூரியன் கூட மலைக் குன்றுகளிடையே வீழ்ந்து அழிந்துவிட்டது. மனதினுள் கிளைத்துப் படர்ந்த வெப்பம் மட்டும் அழியாமல் மிகைத்தது.

இறுக மூடிய இமைகளுக்குள் நெளியும் அவன் முகத் தோற்றங்களை அழிக்க அழிக்க அவை கூடிப் பெருகிக்கொண்டிருந்தன.

வெளியே பூதாகரமாய் வியாபித்திருந்த இருள், ஜன்னலையும் நிறைத்து காட்சிகளனைத்தையும் அழித்துவிட்டிருந்தது.

இரவு என்பது மிகவும் நீண்டது. அதிலும் தன்னைப் போன்ற துணையற்ற உயிருக்கு அது மிகவும் கொடியது என்று நினைத்தபடியே மாலினி பாயில் புரண்டு படுத்தாள். துருத்திய ஓலைகளைக் கிழித்து எடுத்து இருளுக்குள் எறிவது பொழுதைக் கொல்லும் விளையாட்டாக இருந்தது.

எங்கோ தூரத்தில் நாரை ஒன்று தன் துணையை அழைத்துக் கூவுவது கேட்டது. அதன் கூவுதல் எதற்காக என்று தெரிந்ததால் இவளிடமிருந்து மேலும் அதிக வெப்ப மூச்சு வெளிப்பட்டது.

உயிரை வருத்தும் இந்த ஒலிகள் கேட்கிறதே தவிர, அவர் வரும் வாகனத்தின் ஒலியைக் காணோம். இந்தக் கொடிய இருள் அதையும் விழுங்கிவிட்டுப் பெரிய பூதம் போல வெளியே காவல் நிற்கிறது.

பாயில் புரண்டாள் மாலினி. காம நோய் தரும் துன்பத்திற்கென்று பலரும் அறிந்த ஓர் அளவு இருக்குமேயானால், அந்த அளவையெல்லாம் தாண்டி இந்த நோய் என்னை வருத்துகிறதே என்று நினைத்தாள்.

புணர்ச்சிக்காகத் தன் பெண் துணையை அழைக்கும் நாரை கூவலை நிறுத்தவில்லை. நான் மட்டும் மற்றவர் பழிப்புக்கஞ்சி, இந்தத் துன்பத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு சாதாரணமாகச் சிரித்து உலாவர வேண்டுமெனத் தோழி சொல்கிறாள். அவளுக்கென்ன தெரியும்? என் உயிரும் எண்ணமும் இருக்கும் வரை இந்த நோய் என்னை எப்படி விட்டொழியும்?

பாயின் ஓலைச் சிலும்பல்கள் மேனியில் நன்கு அழுந்தி வருத்த தன்னை அழுத்திப் புரண்டாள் மாலினி.

***கடுங்கதிர் ஞாயிறு மலைமறைந்***
***தன்றே அடும்புகொடி துமிய ஆழி***
***போழ்ந்து அவர் நெடுந்தேர் இன்ஒலி***
***இரவும் தோன்றா இறப்ப எவ்வம்***
***நலியும் நின்நிலை நிறுத்தல் வேண்டும்***
***என்றி நிலைப்ப யாங்ஙனம் விடுமோ.***

(நற்றிணை - 338 :1-6)

# சிந்தியா பதில்கள்

**ஆறுமுகன் அரசுடன் இணைந்து கொண்டதன் காரணம் என்ன?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

இன்னும் இரண்டு வருடங்களின்பின் ஹக்கீமின் நிலை அதை விளக்கும்!

**ஒருவருக்கு நல்ல காலம் வந்தால் எப்படி வர வேண்டும்? கஷ்டகாலம் வந்தால் எப்படி எல்லாம் வரக் கூடாது?**

-பி.பெனில்டஸ், தோட்டவெளி.

இரண்டையும் ஒருசேர அநுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களிடம் கேட்டால் தெரியும்.

**சிந்தியா, காதலித்த அனுபவம் உண்டா? அந்த மன உணர்வை விளக்க முடியுமா?**

-சுதாஸ் சுதாகரன், பூண்டுலோயா.

"காதல் என்பது ஓர் அதீத மனநிலை! அந்த மனநிலையைக் கூற என்ன உவமையைப் பயன்படுத்தினாலும் அது குறைவாகவே இருக்கிறது" என்று கவிஞர் தாமரை சொல்லியதுதான் சரி என்று தோன்றுகிறது.

**சிந்தியா! உங்கள் வெற்றிக்குப் பின்னால் யார்?**

-ஏ.எல்.நியாஸ் அஹமட், வாழைச்சேனை - 05.

மற்றொரு வெற்றியாளர்!

**திரிஷா - சிநேகா ஒற்றுமை, வேற்றுமையைச் சொல்ல முடியுமா?**

-எஸ்.பிரதீபன், கொழும்பு - 12.

மனதுக்குள் மழையைக் கொட்டும் சிரிப்பு ஒற்றுமை. 'கா' வை விட 'ஷா' வின் இடையும் எடையும் மட்டுமல்ல, நடிப்பும் கொஞ்சம் மெலிவுதான். இது வேற்றுமை!

**இது ஆணாதிக்கச் சமுதாயம் என்று கூக்குரலிடுகிறார்களே பெண்கள். அது தவறு, அதில் உண்மையும் இல்லை என்கிறேன் நான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

-எம்.சர்வேஸ்வரன், வவுனியா.

குற்றவாளி என்று கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பவரே, வழக்கில் தீர்ப்பைச் சொல்லும் நீதிபதியாகவுமிருக்கலாம் என்ற இந்த முனைப்பைத்தான் ஆணாதிக்கம் என்கிறார்கள் அவர்கள்.

**திமிர் பிடித்தவர்களை அடக்க என்ன செய்யலாம்?**

-இரா.கோணேஸ்வரன், நுவரெலியா.

ஒன்றும் செய்வதற்கில்லை. மற்றவர்களிடம் இருக்கையில் அது திமிர்; உங்களிடமிருந்தால் அதன் பெயர் தன்னம்பிக்கை!

**தலையாட்டி பொம்மைகளுக்கும் தமிழ்க் கூட்டு எம்.பி.க்களுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா?**

-சி.துஷ்யந்தன், மண்டூர்.

கடையிலிருக்கும் தலையாட்டி பொம்மைகளால் நாட்டுக்கு ஆபத்தில்லை!

**மினி உலகக் கிண்ணத்தில் இலங்கை, இந்திய அணிகளின் வெளியேற்றம்?**

-எம்.சி.முகமட் அஸ்வர், திருகோணமலை.

ஹெய்டனும், கில்கிறிஸ்டும் எதிரணி கலங்கும் விதமாக ஆரம்பிக்கிறார்கள். சிமண்ட்ஸ் ஏதோ சாண்டில்யனின் கதாநாயகன் போல மட்டையைச் சுழற்றுகிறார், பந்து பொறுக்குகிறவர்கள் திசைக்கொருவராய்ச் சிதறி ஓடுகிறார்கள். மக்கிராத், லீ, கிலெஸ்பி, கஸ்பரோவிச், வட்சன் என்று உலக மட்டை பிடிப்பாளர்களை உலுக்கக்கூடிய பந்து வீச்சுப் பட்டாளமே இருக்கிறது. இருந்தும்....பொன்ரிங் சொல்கிறார், "களத்தடுப்பில் காட்டும் கவனத்தினால்தான் நாங்கள் வென்றுகொண்டிருக்கிறோம்" என்று. இரண்டாவது இடத்திற்கே எட்டி எட்டி வீழ்ந்துகொண்டிருக்கும் ஆசிய அணிகள் மூன்றும் தெரிந்துகொள்ள வேண்டியது அதைத்தான்!

**தமிழ்ப் பட ஹீரோக்கள் பறந்து பறந்து சண்டையிடுவதும், பழிவாங்குவதும், விறுவிறுப்புக்காக யதார்த்தமே இல்லாமல் விநோதங்களைச் செய்து துள்ளுவதும் ஹொலிவூட் படங்களைப் பார்த்து வந்ததா?**

-ஜி.அருள், நீர்கொழும்பு.

அப்படி வந்திருந்தால் இவர்கள் பன்னாடைகளாக இருந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். நீங்கள் சொன்ன எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல், விறுவிறுப்பும் சுவாரஸ்யமும் கூடிவந்த எத்தனையோ படங்களை இவர்கள் கீழே சிந்த விட்டு விடுகிறார்கள். சமீபத்தில் நம் தொலைக்காட்சி ஒன்றில், டென்சில் வோஷிங்டனும் ஏஞ்சலினா ஜோலியும் நடித்த "தி போன் கலெக்டர்" காட்டினார்கள். (விசில் தமிழ்ப் படத்தின் கதை இதிலிருந்து சுட்டதுதான்!) முதல் காட்சியிலேயே இரும்புக் குழாய் விழுந்து பக்கவாதத்தில் படுத்த படுக்கையாகிவிடுகிறார் வோஷிங்டன். படுக்கை அருகிலேயே கொம்ப்யூட்டர், வயர்லெஸ் வசதிகள் செய்து தரப்படுகிறது. பெண் பொலிஸான ஏஞ்சலினா ஜோலி உதவியோடு, நகரில் நடக்கும் தொடர் கொலைகளின் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கிறார். கடைசி உச்சக் கட்டக் காட்சியில் கூட வீறுகொண்டு எழுந்துவிடாமல் படுத்துக்கொண்டே ஜெயிக்கிறார். நடிப்பினால் நமக்கு விறுவிறுப்புத் தருவதை நம்மவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும்.

**அதென்ன, "அழகிய தீயே?"**

-பி.கலா, மன்னார்.

காதல்!

**டென்னிஸ் விளையாட்டில் ரஷ்ய வீராங்கனைகள் ஆதிக்கம் பெற்று வருகிறார்களே?**

-இரா.கோபிநாத், கண்டி.

ஹ்ம்....ஸ்டெபி, சபாடினிக்குப் பிறகு டென்னிஸ் களம் கொஞ்சம் அழகாகி வருகிறது. விடுங்களேன்!

**எந்த ஒரு கொலை விழும்போதும், "இதை நம்மவர்கள் செய்திருக்க மாட்டார்கள். அப்படியே அவர்கள்தான் சுட்டிருந்தார்கள் என்றால், இறந்தவர் துரோகியாகத்தானிருக்க வேண்டும்" என்று ஒருவரியில் முடிவுசெய்துவிடக் கூடிய நம்பிக்கை, நம் சமூகத்தில் எவ்வாறு கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது?**

-நா.பிரியா, மொறகொல்ல.

பெரும்பாலான மனிதர்களின் அடிப்படை இயல்புகளான சுயநலம், பயம் ஆகியவற்றைப் பயன்படுத்தி!

**குடைக்குள் மழை?**

-என்.எம்.நிஸாம், காத்தான்குடி - 02.




'பஞ்ச்' வசனங்கள் என்ற பெயரில் அளவுக்கதிகமாய் அலட்டுவதையும், படத்தில் தான் இருக்கிறேன் என்பதை அடிக்கடி காட்டிக்கொள்வதையும் பார்த்தீபன் குறைத்துக் கொண்டால்.... அவர் காட்டில் மழை!

**சிந்தியா கடவுள் என்பவர் யார்?**

-எஸ்.ரோஷினி, பசறை.

[illegible] ஞாபகம் வருபவர்!

**உடற்பயிற்சி செய்யாமல் உணவைக் குறைத்துக்கொள்ளாமல் உடற் .பருமனைக் குறைக்க ஏதேனும் வழி இருக்கிறதா?**

-கலையன்பன் நிலாம், தாராபுரம்.

அடடா! இப்படி ஒரு ஆளைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். யாரிடமாவது கேட்டுப் பதில் தெரிந்தால் எனக்கும் சொல்லுங்கள். அதற்குரிய நன்றியைப் பிறகு சொல்வேன். இப்போதைய நன்றி, என்னிடமிருக்கும் ஒரு குட்டிக்கதையை எடுத்துவிட வாய்ப்பளித்ததற்கு.....

ஒருவன் மனோதத்துவ மருத்துவரிடம் சென்று, "என் மனைவி ஓயாமல் தின்றுகொண்டேயிருக்கிறாள். சோபாவில் அமர்ந்தபடி, தொலைக்காட்சி பார்த்தபடி, எதையாவது கொறித்துக் கொண்டேயிருக்கிறாள். அவள் அசைவதில்லை. வாய் மட்டும் எப்போதும் அசைந்தபடிதான் இருக்கும்....அவளது அழகெல்லாம் போய்விட்டது. பஞ்சுப் பொதியைப் போல் உடலில் வளைவு நெளிவுகளே இல்லாத தோல் பொதியாகி விட்டாள். நான் என்னதான் செய்ய?" என்று கேட்டான்.

மருத்துவர் "ஒரு முயற்சி செய்து பார். நிச்சயம் வெற்றி கிடைக்கும். நான் பலருக்கும் சொல்லி வெற்றி கண்டிருக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, நிர்வாணப் பெண்ணின் புகைப்படம் ஒன்றைக் கொடுத்தார்.

"அட கடவுளே! இது எப்படி உதவும்?" என்றான் அவன்.

"இது ஒரு தந்திரம்!" என்று விளக்கினார் மருத்துவர் :

"இதை உன் குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே ஒட்டிவிடு. உன் மனைவி கிழித்தெறிந்துவிடாதபடி இறுக்கமாக பெவிகோல் போட்டு ஒட்டு. அவள் உணவை எடுக்க .ஃபிரிட்ஜைத் திறக்கும் போதெல்லாம் இந்தப் படத்தைப் பார்ப்பாள். இதுபோல் அழகான உடம்புக்கான ஏக்கம் உண்டாகும். தின்பதைக் குறைத்துக்கொள்வாள்" என்றார்.

அதன்பின் மூன்று, நான்கு மாதங்கள் மருத்துவர் பொறுத்திருந்து பார்த்தார். ஆள் வரவே இல்லை. மருத்துவரே அவன் வீடு தேடிச் சென்றார். அவர் கண்ட காட்சியை நம்பவே முடியவில்லை! அவன் உடல் கொழுத்துப் போய், எதையோ கொறித்தபடி, சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தான்.

"அட, என்ன ஆச்சு உனக்கு?" என்று அதிர்ந்துபோய்க் கேட்டார் மருத்துவர்.

எல்லாம் அந்தப் படத்தால் வந்த வினை! அதை அடிக்கடி பார்க்கும் ஆசையில் .ஃபிரிட்ஜை அடிக்கடி திறந்து பார்த்தேன். அப்படிப் பார்த்துக்கொண்டு நிற்கையில் "அவள் வந்தால், பேசாமல் உணவுப் பண்டங்களை எடுத்துக் கொண்டு போய் சோபாவில் அமர்ந்துவிடுவேன். அப்படியே தின்றபடி தொலைக்காட்சி பார்த்து இப்படி ஆகிப் போனேன்!" என்றான் அவன்.

**நீங்கள் மம்மி செல்லமா? டாடி செல்லமா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

புத்தகங்களின் செல்லம்!





**நொ**டின்ஹம் அல்லது ட்ரன்ட் பிரிஜ் எனும் மைதானம், நொடின்ஹம்ஷயர் மாநில கிரிக்கெட் அணியின் தலைவராகவும் முகாமையாளராகவும் செயற்பட்டு வந்த வில்லியம் க்ளாக் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. இவர் 1838ஆம் வருடத்தில் இம் மைதானத்தைத் திறந்து வைத்தார்.

நொடின்ஹம் மைதானத்தில் 1840ஆம் வருடம் முதலாவது முதல்தர கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இப் போட்டி நொடின்ஹம்ஷயர் மாநில அணிக்கும் செக்ஸ் மாநில அணிக்கும் இடையில் நடந்தது.

மேற்படி மைதானத்தில் 1899, ஜூன் மாதம் 1,2,3ஆம் திகதிகளில் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றதுடன் இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரரான டபிள்யூ..ஜீ. கிரேஸ் இறுதியாகப் பங்கேற்றுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மேற்படி மைதானத்திலேயே நடைபெற்றது. இப் போட்டியின் போது இங்கிலாந்து அணிக்குத் தலைமையேற்றிருந்த அவர் முதலாவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிறார். இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தை மாத்திரமே பெற்றார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். அவுஸ்திரேலிய அணிக்கு ஜே.டார்லின் தலைமை ஏற்றிருந்தார்.

இப் போட்டியின்போதுதான் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த வில்பிரட் ரொட்ஸ், அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த விக்டர் ட்ரம்பர் ஆகியோர் முதன்முதலில் பங்கு கொண்டனர். நொடின்ஹம் விளையாட்டு மைதானத்தில் 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.



உலகின் முதலாவது முக்கோண டெஸ்ட் போட்டியின் ஒரு காட்சி

இங்கிலாந்துக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற இப் போட்டியில் இன்டிகாப் அலாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

அதி பயங்கரமான வேகப் பந்துவீச்சினால் கிரிக்கெட் உலகில் ஒரு புயலையே உண்டு பண்ணிய டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்று இடம்பெற்றது.

அதாவது வேகப் பந்துவீச்சு இப் போட்டியின்போது எதிரணியினரைக் குறி பார்த்து மிகவும் மோசமான முறையில் பிரயோகிக்கப்பட்டது.

இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த டக்ளஸ் ஜாடின், தனது அணியில் இருந்த வேகப் பந்துவீச்சாளரான ஹெரல்ட் லாவூட் என்பவரைப் பயன்படுத்தி அவுஸ்திரேலிய அணியினருக்கு காயங்களை ஏற்படுத்தவும் அதன் மூலம் அச்சுறுத்தி விக்கெட்டுகளை வீழ்த்தவும் முயன்றார். இப் போட்டி கிரிக்கெட் வரலாற்றில் 'பொடி லைன்' போட்டி என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.



டக்ளஸ் ஜாடின் இத்தகைய மிருகத்தனமான செயலில் ஈடுபடக் காரணம் டொனல்ட் பிரட்மன் ஆவார். பிரட்மன் அவுஸ்ரேலிய அணியின் பிரபல வீரராகவும் அதே நேரம் இங்கிலாந்து அணிக்குப் பெரும் அச்சுறுத்தலாகவும் இருந்த வந்தார். இவரைக் கட்டுப் படுத்தும் நோக்கத்திலேயே ஜாடின் இத்தகைய செயலில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

லெக் ஸ்டம்ப் பகுதியில், நிலத்தில் வந்து பதிந்து வரும் வகையில் பந்துவீசிய ஹெரல்ட் லாவூட்டின் பந்து வீச்சின் இலக்கு துடுப்பாட்டக் காரரின் நெஞ்சுப் பகுதியாகவே காணப்பட்டது.லாவுட் பந்துவீசும்போது அணியின் தலைவர் டக்ளஸ் ஜாடின் பந்து தடுப்பாளர்கள் அனைவரையும் துடுப்பாட்ட வீரரின் அருகில் வரவழைத்துக்கொள்வார். அதாவது வீசப்படும் பந்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக துடுப்பாட்ட வீரர் துடுப்பைப் பயன்படுத்தும்போது அதில் பட்டு வரும் பந்தை பிடித்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

உலகப் புகழ் பெற்ற இந்த 'பொடி லைன்' போட்டி 1932ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2,3,5,6,7ஆம் திகதிகளில் அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி மைதானத்தில் நடைபெற்றது. அம்மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது போட்டியும் இதுவாகும்.

சுகவீனமுற்றிருந்த காரணத்தினால் டொனல்ட் பிரட்மன் இப் போட்டியில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 360 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 164 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன், இங்கிலாந்து அணி 524 ஓட்டங்களைப் பெற்று இப் போட்டியில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் எஸ்.ஜே இமக்கேப் முதலாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 187 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்து சார்பில் ஹர்பட் சட்க்லிப் 194 ஓட்டங்களையும் வொலீஹெமன்ட் 112 ஓட்டங்களையும் நவாப் பத்துதி 102 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த ஹெரல்ட்அலாவுட் முதலாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும்,இரண்டாவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

**-மைந்தன்.**




# யாழ்ப்பாணம் - வண்ணை

## ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் மகோற்சவம்

இலங்காபுரியில் அமைந்துள்ள வைஷ்ணவ தலங்களுள் வடபகுதியின் தலைநகரான யாழ்ப்பாண மாநகரில் 'ஈழத்து திருப்பதி' எனப் போற்றப்படும் வண்ணையம்பதியிலே வீற்றிருந்து, தன்னை நாடிவரும் அடியார்களின் இடர் நீக்கி அருள் பாலிக்கும் இரட்சக மூர்த்தியாகிய ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீமத் வெங்கடேச வரதராஜப் பெருமாளின் திவ்விய மகோற்சவ பெருவிழா நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணித் திங்கள் 30ஆம் நாள் (15.09.2004) புதன்கிழமை துவஜாரோஹணத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. அடியார்கள் இவ் விழாக் காலங்களில் வழிபாடாற்றி தங்களாலியன்ற பூ வகை, துளசி, பால், இளநீர், அபிஷேக ஹோம திரவியங்களை உபகரித்து ஸ்ரீ வேங்கடவன் திருவருளால் லக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

**ஆரம்பம் ஆவணி29 (14.09.2004) மங்கள வாரம் - முடிவு ஐப்பசி11 (27.10.2004) புத வாரம்**

*இவ்விழாக்கள் யாவும் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் திருவருளால் நடைபெறுகின்றன. அடியார்கள் யாவரும் வந்து தரிசித்து ஸ்ரீலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.*


*இங்ஙனம்*

*ஆதீன மகாசபை*




# குண்டுதாரியை அழைத்துவந்தவரின் மன்னிப்புக் கடிதம்

**க**டந்த ஜூலை மாதம் 07ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்வதற்காக வந்த தற்கொலைக் குண்டுதாரி நோக்கம் நிறைவேறாமல் கைதுசெய்யப்பட்டார். கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்று சோதனையிட முயன்றபோது அங்கே குண்டை வெடிக்க வைத்தார். குண்டுதாரியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அழைத்து வந்ததன் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் சத்தியலீலா எனும் இரு பிள்ளைகளின் தாயார் தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அண்மையில் எழுதியுள்ள மன்னிப்புக் கடிதத்தில் புலிகளே தன்னை பல தடவை கட்டாயப்படுத்தி பல காரணங்களைக் காட்டி குண்டுதாரியான இறந்த பெண்ணை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கூட்டிச் செல்லுமாறும், அதற்காகப் பணம் தருவதாகவும் தெரிவித்தார்களென நீண்ட கடிதத்தினை எழுதியுள்ளார். அக் கடிதத்தில் அவருக்கிருக்கும் பிள்ளைகளைத் தவிர தனக்கு வேறு சொந்தம் இல்லை என்றும் சிறையில் இருந்து தன்னை வெளியே எடுத்து என்ன தண்டனை தந்தாலும் தான் ஏற்க தயாரெனவும் காலைப் பிடித்து கேட்பதாக எழுதியுள்ளார். நடந்த விடயங்கள் எல்லாவற்றையும் தன்னை விசாரித்த சி.ஐ.டி யினருக்குத் தெளிவாக வாக்குமூலம்




அளததருபபதாகவும மகாழுமபலருநது வருமவன என்று தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் குழம்பக் கூடாது என்பதற்காக அவர்களின் எதிர்காலத்தினை மனதில் கொண்டு என்னை மன்னித்து விடுதலை செய்யுங்கள் என அவர் எழுதி இருக்கும் உருக்கமான கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. குண்டு வெடிப்பு குறித்த விசாரணைகள் நீதிமன்றத்திற்கு வரவிருப்பதாலும், சட்டம் குறித்த பிரச்சினைகள் இருப்பதாலும் கடிதத்தின் முழுப் பகுதியையும் பிரசுரிக்க முடியவில்லை. இக் கடிதம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டபோது, அப்பாவி மக்களை புலிகள் தங்கள் தேவைகளுக்காக மிரட்டி, பயமுறுத்தி குற்றவாளிகளாக்குகிறார்கள் என்பதை தான் நன்கு புரிந்துகொண்டுள்ளதாகவும், மனிதாபிமான வகையிலும், குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்பதாலும், தான் மன்னிக்க தயாரெனக் கூறிய அவர், இவ் ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் புலிகளே தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது உலகுக்குத் தெரிய வந்திருப்பதாகவும் கூறினார்.

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 5: பிறந்த கிழமை செவ்வாய்

**பி**றப்பெண் 5ஐயும் செவ்வாய்க்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் சிரமத்தைப் பாராது உழைக்கக் கூடிய திறன் வாய்ந்தவர். எப்படியாவது தன் காரியத்தைச் சாதிக்க நினைப்பவராக இருப்பீர்கள். யாரைப் பற்றியும் எதனைப் பற்றியும் கருத்தில் கொள்ளமாட்டீர்கள். உங்களுக்கு எது சரி என்று படுகிறதோ அதை எப்படியாயவது செய்து முடிப்பீர்கள்.

ஒரு மனிதனுக்கு அன்பு போல் இன்பம் தருவது எதுவுமேயில்லை. ஆனால் நீங்கள் இதற்கு விதிவிலக்கானவர்.

பிறர் மீது அன்பு செலுத்தவோ இரக்கப்படவோ மாட்டீர்கள். தான் உண்டு தன் காரியம் உண்டு என்று சுய நலநோக்குடன் தொழிற்படக் கூடியவர்தான் நீங்கள். தனக்கு இலாபம் தரக்கூடியது எதுவோ அல்லது பிரயோசனம் தரக்கூடியது எதுவோ அதைத்தான் செய்வீர்கள். பிறரின் நன்மை பற்றியோ அல்லது நலன் பற்றியோ சிறிதும் சிந்திக்கமாட்டீர்கள்.

வீண் பேச்சில் காலத்தைப் போக்குவதில் வல்லவராக இருப்பீர்கள். ஒன்றை நேரடியாகப் பேசாமல் சுற்றிவளைத்துத்தான் பேசுவீர்கள். மேல் வேலை பார்ப்பவர்களின் கருத்துக்களுக்கோ, சொல்லுக்கோ மதிப்பும் மரியாதையும் கொடுக்கமாட்டீர்கள். இதனால் மேலதிகாரிகளின் பகைக்கும் கண்டிப்புக்கும் ஆளாக நேரிடும். பணிந்து போகும் தன்மையோ விட்டுக்கொடுத்துச் செயற்படும் மனநிலையோ உங்களிடம் இல்லை. இதனால் பல இடங்களிலும் மாறி மாறி வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்படும். மனிதர்களுக்குப் பலவீனங்கள் பல உண்டு. அந்தப் பலவீனம் என்ன என்று தெரிந்தால் அதை மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆனால் நீங்கள் உங்களுக்குள்ள பலவீனத்தை உங்களுடைய பலம் என்று நினைப்பவர்.

மற்றவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய தன்மை உங்களிடம் கிடையாது. அடங்கிப் போகக்கூடிய மனநிலை இல்லாதவர் நீங்கள். நான், நான் என்ற நிலையிலும், என்னால் முடியும், எனக்கும் தெரியும் என்ற ரீதியிலும் நடப்பவர்தான் நீங்கள். எப்படியென்றாலும் சரி, நன்றாகச் சாப்பிட வேண்டும். ஆனந்தமாக வாழ்க்கையினை அநுபவிக்க வேண்டும் என்ற நோக்கும் போக்கும் உடையவர் நீங்கள். இந்த மனநிலை உங்களுக்கு இருப்பதனால் வீண் செலவுகளில் தாராளமாக ஈடுபடுவீர்கள். இதனால் உங்களுக்கு அடிக்கடி பணக் கஷ்டமும் மனக் கஷ்டமும் ஏற்படும். சேமிப்பைப் பற்றியோ பிற்காலத் தேவை பற்றியோ கொஞ்சமும் எண்ணிப் பார்க்க மாட்டீர்கள். பணம் இருக்கும்போது அதன் பெறுமதி உங்களுக்குப் புரியாது. பணம் இல்லாதபோதுதான் அதன் அவசியம் பற்றி உணர்வீர்கள்.

18 வயதிலிருந்தே தொழில் செய்ய ஆரம்பிப்பீர்கள். பின்னர் படிப்படியாக முன்னேற்றம் அடைவீர்கள். வருமானம் கிடைக்கும். பின்னர் வருமானம் இல்லாமலும் இருக்கும். இந்த ஏற்ற இறக்க நிலை 30 வயது வரை தொடரும். இதன் பின்னர்தான் உங்கள் போக்கின் குறைபாடுகள் உங்களுக்குப் புரிய ஆரம்பிக்கும். இதன் பிற்பாடு உங்கள் போக்கினை நீங்கள் மாற்றிக்கொள்வீர்கள்.

முன்னர் விட்ட குறைகளை நீக்கி நிறைவான மன நிலையை அடைவீர்கள். உங்கள் நோக்கிலும் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில் விடயத்தில் அக்கறை காட்டுவீர்கள். பிறரை மதிக்கும் பண்பு உங்களுக்கு ஏற்படும். சுயநலப் போக்கைத் தவிர்த்துப் பொதுநலமாகச் சிந்திப்பீர்கள். செயற்படுவீர்கள். இதனால் 31 வயது தொடக்கம் தொழில் முறையிலும் மனநிலையிலும் அதிகம் முன்னேற்றம் அடைவீர்கள். வீண் செலவுகள் செய்யாமல் யோசித்துத்தான் செயற்படுவீர்கள். 32, 35, 38, 41, 44 வயதுகளில் உங்கள் வருமானம் மிகக் கூடுதலாக இருக்கும். மற்றவர்கள் மீது அன்பு செலுத்தவும் இரக்கப்படவும் செய்வீர்கள். எல்லோருடனும் அன்பாகப் பேசிப் பழகுவீர்கள். வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பீர்கள்.

உங்களுடைய 45ஆவது வயதில் ஒரு பெரிய பணத்தொகை உங்கள் கைக்கு வந்து சேரும். இதனைக் கொண்டு உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வியாபாரம் ஆரம்பித்து வருமானத்தைப் பெருக்கி சுகமாகவும் சந்தோசமாகவும் ஆயுள் உள்ள வரை வாழ்வீர்கள். 21, 27, ஆகிய வயதுகளில் உங்களுக்கு ஆபத்துக்கள் நேரிடும். ஆனால் உயிருக்கு ஆபத்தில்லை.

உங்கள் தேகம் சூடானது. அதனால் சூடு சம்பந்தமான நோய்கள் உங்களுக்கு ஏற்படும். இதனால் குளிர்ச்சி தரக்கூடிய உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும். மோர், தயிர், நெய், பால் போன்றவற்றை உண்ண வேண்டும். வெள்ளை நிறம் உங்களுக்கு அதிர்ஷ்டமான நிறமாக இருப்பதனால் வெள்ளை நிற ஆடைகளை விரும்பி அணியுங்கள்.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் 9. மாதத்தில் வரக்கூடிய 9, 18, 27 ஆகிய திகதிகளில் உங்கள் முக்கியமான காரியங்களை வைத்துக்கொள்ளுங்கள். இந்தத் திகதிகள் செவ்வாய்க்கிழமைகளில் அமையுமானால் நல்ல பலன் இரட்டிப்பாகும். நீங்கள் எந்த இலக்கமுள்ள வீட்டிலும் வசிக்கலாம். ஆகவே ஆதிக்க எண் 5ஐயும் செவ்வாய்க்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்வில் அனைத்துச் சந்தோஷங்களையும் அநுபவிக்க என் நல்லாசிகள்.

**சுயநலப் போக்கினைத் தவிர்த்தால் தூய வாழ்வு எண் ஐந்துக்கு. பொதுநலப் போக்கினைக் கொண்டால் மேலான வாழ்வுண்டு செவ்வாய்க்கு.**

**அடுத்து ஆதிக்கம் 5 புதன் கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்**

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.




# மாஜிக் தந்திரங்கள்

உடனே காட்சியாளர் உள்ளே சென்று தண்ணீர் உள்ள செம்பைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து சபையோருக்கு முன் அதில் தண்ணீர் இருப்பதை சிறிதளவு கீழே விட்டுக் காண்பித்துவிட்டு, செம்பைக் கையிலேயே கொண்டுபோய் வரும்பொழுது காலி செம்பையும், வலது கையில் தட்டில் வைத்திருக்கும் பத்துப் பூரியையும் எடுத்து வந்து செம்பையும் பூரியையும் பெட்டியின் மேல் வைத்துவிட்டு, கைமணியை எடுத்து வந்து பெட்டியின் மேல் வைத்துவிட்டு, கொசுவலை போன்ற திரையைக் கொண்டு பெட்டியை மூடி, நான்கு முனையிலுள்ள கயிற்றை நான்கு இடங்களில் இழுத்துக் கட்டிவிட்டு பெட்டியைச் சுற்றி ஒழுங்காக இழுத்துவிட்டு, மந்திரக் காலைக் கொண்டு பெட்டியின் மேல் மூன்று தரம் தட்டிவிட்டு, வெளியே வந்துவிட வேண்டும். உடனே மந்திரக் காலை எடுத்து திரையைச் சுற்றி மூன்று முறை சுற்றி வந்து திரைக்கு ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு ஸ்ரூலைப் போட்டு உட்கார்ந்துவிட வேண்டும்.

இந்தச் சமயம் பெட்டியில் உள்ள உதவியாளர், அதாவது பெட்டியைத் தட்டும் சத்தம் கேட்டவுடன், பெட்டியின் பின் பக்கப் பலகையை மெதுவாகத் தள்ளினால் அது திறக்கும். அதன் வழியே அவர் வெளியே வந்து பையோடு எழுந்து நின்று கையைக் கட்டிலிருந்து இலேசாகத் தளர்த்திக் கொண்டு, பெட்டியின் மேலிருக்கும் பூரிகளை எடுத்து பெட்டிக்குள் வைத்துவிட்டு, கை மணியை எடுத்து கலகலவென்று சபையோர் கேட்கும்படி அடித்துவிட்டு, மணியை பெட்டியின் மேல் வைத்துவிட்டு, பெட்டியின் பின் பலகையை மெதுவாகத் திறந்து உள்ளே நகர்ந்து சென்றுவிட வேண்டும்.

இந்த நேரத்தை அறிந்து, காட்சியாளர் பெட்டியைச் சுற்றித் தாங்கும் திரையை சுருட்டி அதன் மேலேயே போட்டுவிட்டு சபையோருக்கு பெட்டி நன்றாகத் தெரியும்படி செய்து பெட்டியின் மேலுள்ள மணியை எடுத்து மேசையின் மேல் வைத்துவிட்டு பூரி வைத்த தட்டையும் செம்பையும் எடுத்துக்கொண்டு போய் மேசையின் மேல் வைத்துவிட்டு பெட்டியின் சாவியை வைத்திருப்பவரைக் கூப்பிட்டு பெட்டியின் பூட்டைத் திறக்கச் செய்து பெட்டியின் மூடியைத் திறந்தால் உள்ளே பைக்குள் ஆள் இருப்பார். அவரை இருவருமாகத் தூக்கி வெளியே வரச் செய்து கைக் கட்டையும் அவிழ்த்துவிட்டால் அவர் சபையோருக்கு வணக்கம் சொல்ல வேண்டும். உடனே முன் திரையை விட்டு, அடுத்த காட்சிக்குத் தயாராக வேண்டும். இதைக் காணும் சபையோர் கைகளைக் கட்டி, பையில் போட்டுக் கட்டி, பெட்டியில் போட்டுப் பூட்டிய ஆள், எப்படி வெளியே வந்து பூரியைத் தின்று தண்ணீரைக் குடித்துவிட்டு மணியை அடித்தான் என்று ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு : இந்த வகையான பெட்டியைத் தயாரித்தபின் உதவியாளரின் கையைக் கட்டி பையில் போட்டுப் பூட்டியபின் அவர் எப்படி வெளியே வருகிறார் என்பதை பல முறை பரீட்சை செய்து பார்க்க வேண்டும். பெட்டியைப் பூட்டிவிட்டால் உள்ளே இருப்பவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். மூச்சுத் திணறல் இருந்தால் பெட்டியைப் பூட்டியவுடன் பெட்டியின் பின் பலகையை இலேசாகத் திறந்துவிட்டுக் கொள்ளலாம்.

கைகளைகட்டும்பொழுது சற்று விரிவாக வைத்துக்கொண்டால் கட்டியபின் கைகளை தளர்ச்சியாகச் செய்துகொள்ளலாம். மேலே போடப்பட்டுள்ள துணிப் பையுடன் தளர்ந்த கையை வைத்துக்கொண்டு பூரியை எடுக்கலாம். மணியை அடிக்கலாம்.

கொசுவலை போன்ற திரையை பெட்டியை வைத்தவுடன் அதைச் சுற்றி கட்டியும் விடலாம். இந்த வேலைக்கு உதவியாளரையும் வைத்துக்கொள்ளலாம்.

உதவியாள் திரைமறைவில் பெட்டியிலிருந்து வெளியே வந்து பூரிகளை எடுத்து வைத்துவிட்டு, மணியை அடித்துவிட்டு பெட்டிக்குள் செல்வதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைக் கணக்கிட்டு அந்த நேரம் சென்ற பின்னரே சுற்றுத் திரையை எடுத்து மேலே போட வேண்டும்.

## சீட்டுக் கட்டை ஒரே மாதிரி சீட்டாக மாற்றுதல்

சீட்டுக்கட்டு மாஜிக் செய்வதற்கென்று புதிய சீட்டுக் கட்டுகளில் 42 சீட்டுக் கட்டுகள் வாங்க வேண்டும். நாற்பது சீட்டுக் கட்டுகளை எடுத்து அதில் உள்ள இராஜா, இராணி, ஜோக்கர் இவற்றை நீக்கிவிட்டு கிளாவர் அல்லது ஆட்டின் சீட்டாக நாற்பது எடுக்க வேண்டும். புதிய சீட்டுக் கட்டு ஒன்றையும் எடுக்க வேண்டும். இதிலுள்ள இராஜா, இராணி, ஜோக்கர் சீட்டுக்களை எடுத்துவிட்டு, தனியே வைத்துக்கொள்ள வேண்டும். முதலில் எடுத்த 10 கிளாவர் 5 நம்பர் சீட்டுகளை எடுத்து வைத்துக்கொண்டு, சுமார் 10 செ.மீ. நீளம், 8 செ.மீ. அகலம், ஒரு செ.மீ. கனமுள்ள வழுவழுப்பான அரை ஸ்கேலையும், ஒரு பென்சிலையும் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு சீட்டாக எடுத்து பலகையின் மேல் வைத்து, ஸ்கேலை எடுத்து சீட்டின் மேல் வலது மூலைக்கும், கீழ்பக்க இடது மூலைக்குமாக சரியான அளவு வைத்து பென்ஸிலினால் ஒரு கோடு போட வேண்டும். அதாவது சீட்டின் வலது பக்கமிருந்து இடது பக்கமாக சீட்டை இரு சம துண்டுகளாகப் பகுக்க வேண்டும். இந்த விதமாக நாற்பது சீட்டுகளையும் இரண்டிரண்டாக சம துண்டுகளாகப் பென்ஸில் கோடு போட்டுக்கொள்ள வேண்டும்.

பிறகு, ஒரு கூர்மையான கத்திரிக் கோலைக் கொண்டு, பென்ஸில் கோட்டின் மேல் வெட்டி நாற்பது சீட்டுகளையும் இரண்டு துண்டுகளாக வெட்டி, இரண்டு துண்டுகளில் இடது பக்கத் துண்டுகளைத் தனியே வைத்துக் கொள்ள வேண்டும்.

புது சீட்டுக்கட்டு ஒன்று எடுத்து அதிலுள்ள எல்லா ஜாதிகளையும் வைத்துக்கொண்டு இராஜா, இராணி, ஜோக்கர் மட்டும் நீக்கிவிட்டு, மீதமுள்ள சீட்டுகளை தனியே வைத்துக்கொண்டு முதலில் ஒரே விதமான சீட்டுகளுக்கு வலது பக்க மேல் முனையிலிருந்து இடது பக்க கீழ்முனை வரை பென்சில் கோடு போட்டது போல இந்தச் சீட்டுகள் அனைத்திற்கும் கோடு போட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

அதன்பின், முதலில் வெட்டிய ஒரே மாதிரியான இடது பகுதிகளை எடுத்து, அதன் கனத்தை ஒரு பிளேடைக் கொண்டு சம அளவில் வைத்து அதை இரண்டாகப் பிரித்தால், சீட்டின் மேல் பக்கம் வேறாகவும், அடிப்பகுதி வேறாகவும் பிரிந்து வரும். இந்த விதமாக வெட்டிய பகுதிச் சீட்டுகளை இரண்டிரண்டாகப் பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

என்ன நினைக்கிறியள்? உங்களத்தான் மகாசனங்களே!, என்ன நினைக்கிறியள்? உப்பிடியும் சண்டைபிடிச்சு மானத்தைக் கெடுக்கிறதோ, தமிழப் பேசிற சனங்களெண்டு இருக்கிற நாங்கள் என்னத்தைச் சொல்லுனெண்டால், அது பாருங்கோ, போன ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளெண்ட நிலையில, ஏதோ ஒரு அசதியில பின்னேரத் தூக்கம் போட்டிட்டன் திடீரெண்டு பாத்தால் ஒரே அடிபிடிச் சத்தம். கனவு கண்டிட்டனோவெண்டு எழும்பிக் கிள்ளிப் பாத்தால் அப்பவும் சத்தம். 'என்ன இது? என்ர வீட்டு ஹோலுக்க நுழைஞ்சு யாரிப்பிடி அடிபிடிப்படுகிற தெண்டிட்டு அவசரமாக் கீழ இறங்கி ஓடிப்போய்ப் பாத்தால், அடிபடாத குறையா எங்கட கூட்டமைப்புக்காறரும் இ.தொ.கா.காரும் ஆளுக்காள் கைவீசிப் பெருஞ் சத்தமாச் சண்டைபிடிக்கினம். என்ன நடந்ததெண்டு விளங்கேல்லை. ஒரு கதிரைய இழுத்துப் போட்டிட்டு இருந்து வேடிக்கை பாத்தன்.

முன்னால சண்டை நடக்குது. நான் கதிரை போட்டிருந்து வேடிக்கை பாத்தனோ விலக்குத் தீர்க்காமல் எண்டு கோவிக்கிறியளோ? கோவியாதயுங்கோ. நானென்ன செய்ய? அது ரி.வியில நடக்குது சண்டை. எப்பிடி நான் உள்ளிட ஏலும்? விலக்குத் தீர்க்க நிண்ட நடுவரோ விவாதத்த இடைநிறுத்திப் போட்டுத் திரும்ப நடத்திறார். இப்பிடியொரு சண்டை இந்த நிகழ்ச்சியில ஒருக்காலும் நடக்கேல்லையெண்டு அவரே சொல்லுறார். அப்பிடி என்ன பிரச்சினை இப்பிடிப் பொருமி வெடிக்கிறதுக்கு எண்டு பாத்தால், அது வேறயொண்டுமில்லை. எங்கட இ.தொ.கா. அரசாங்கத்தோட சேந்ததுதான் கூட்டமைப்பாருக்குக் கொதியக் கிளப்பியிருக்குதாம்.

அவங்கள் அரசாங்கத்தில சேந்தால் இவங்களுக்கென்ன கொதியெண்டு விளங்கேல்லை எனக்கு. எதுக்கும் விளங்கிக்கொள்ளுவமெண்டு ரெண்டு பக்கத்தோடயும் பேசிப் பாத்தன்.

**கா.பூ** :- அண்ணை கூட்டமைப்புக்காறரே? இ.தொ.கா. காறர் தங்கட பாட்டில தங்கட சனத்தின்ர நன்மைய யோசிச்சு அரசாங்கத்தோட சேந்தால் உங்களுக்கு அதில என்ன கோவம்?

**கூட்டமைப்பார்** :- அதென்னெண்டு அவை தங்கட பாட்டில போய்ச் சேருறது நாங்கள் இருக்கேக்க?

**கா.பூ** :- ஏனண்ணை? அவை ஒரு தனிக் கட்சி. அதுவும் வடக்குக் கிழக்குக்கு வெளியால இருக்கிற கட்சி. மலையகத் தமிழற்ர கட்சி. அவையும் உங்கட சொற்படிதான் நடக்க வேணுமெண்டு சட்டம் போடுறது சரியோ?

**கூ.அ** :- அவையும் தமிழர்தானே! தமிழற்ர இனப் பிரச்சினைக்காவேண்டி நாங்கள்தான பேச்சுவார்த்தை நடத்திறம். அப்ப, நாங்கள் சொல்லுமாப் போலதானே எல்லாரும் நடக்க வேணும். ஆளுக்கொரு போக்கில நடந்தா நாங்கள் நினைக்கிறபடி நடக்குமே?

**கா.பூ** :- அண்ணை இ.தொ.கா! உங்களத்தான். அவை சொல்லுற நியாயத்தை கேட்டியள்தானே. அவை சொல்லுறபடி கேட்டு நடந்துகொள்ளுங்களேன் பிரச்சினைப் படாமல்.

**இ.தொ.கா.** :- அதெப்பிடி? அவுங்களுக்கு அவுங்களோட அரசியல். எங்களுக்கு எங்களோட அரசியல். நாங்கள் ஒண்ணும் அவுங்கட அரசியலுக்க மூக்க நுழைக்கலேயே. அவுங்கள் ஏன் எங்கள மேய்க்க நிக்கிறாங்க?

**கா.பூ** :- அப்பிடிச் சொல்லாதையுங்கோ. எல்லாரும் தமிழர்தானே?

**இ.தொ.கா.** :- எல்லாரும் தமிழரெண்டுட்டு எல்லாற்ர பிரச்சினையும் ஒண்ணாக்க ஏலாது. அவுங்க தமிழீழம் கேட்டு ஆயுதப் போராட்டம் நடத்தினாங்க. நாம அப்பிடி நடக்க ஏலுமோ? அழிஞ்செல்லோ போயிடுவாங்க. நம்மளோட பிரச்சினை, தனியுங்க. நம்ம வீடில்லாப் பிரச்சினை, நெலமில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினையெல்லாம் அவுங்களுக்கில்லீங்களே? இதுக்கு எப்பவாச்சும் அவுங்க ஒரு போராட்டம் நடத்தினாங்களா சொல்லுங்க? நாங்க ஸ்ரைக் பண்ணக்க அவுங்க ஒரு ஆதரவுக்காவது அடையாளமா ஏதேச்சும் ஹர்த்தால் நடத்தியிருக்கிறாங்களா? காட்டுங்க பாப்பம்?

**கா.பூ** :- அதுவும் சரிதான். ஏன் ஐயா கூட்டமைப்பாரே! மலையகத் தமிழருக்காக நீங்கள் என்ன போராட்டம் நடந்தினீங்க? அவங்கட பிரச்சினைகள் தனியானவைதானே! அவங்களை ஏன் உங்கட அரசியலுக்குள்ள இழுக்கப் பாக்கிறீங்க?

**கூ.அ** :- அதெப்பிடி? நாங்கள் பெரும்பான்மை இல்லாத நிலமையப் பாவிச்சு அரசாங்கத்தை ஆட்டிப் படைக்க நினைச்சிருக்க, இவங்க என்ன எங்களக் கேளாமல் ஆதரவளிக்கிறது?

**கா.பூ** :- ஆதரவளிக்கிறதோ, எதிர்க்கிறதோ அது அவங்கட உரிமையெல்லோ? அதை நீங்கள் ஏன் தீர்மானிக்க நினைக்கிறீங்க. அவை பேச்சுவார்த்தைக்கும் ஆதரவளிக்கிற தாய்த்தானே சொல்லியிருக்கினம்?

**கூ.அ** :- அதுக்கேன் அரசாங்கத்தில சேர வேணும் அவை?

**கா.பூ** :- அவைக்கு ஆயிரத்தெட்டுப் பிரச்சினை இருக்கும். அவையின்ர மக்களுக்குச் சேவை செய்யிறதுக்கான மார்க்கத்தை அவை தேடிக்கொள்ளுகினம். அது எப்பிடி உங்களப் பாதிக்குது?

**கூ.அ** :- அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை கிடைச்சிட்டால் எங்களக் கண்டு பயப்பிட மாட்டினமே?

**கா.பூ** :- உங்களக் கண்டு அரசாங்கம் பயப்பிட வேணுமெண்டதுக்காக, மலையகக் கட்சிகள் தங்கட நன்மைக்கான முடிவுகளை எடுக்கக் கூடாதே? அது சரி, இ.தொ.கா.காறரே! நீங்கள் ஏன் மலையக மக்களைப் பற்றிக் கதைக்க உங்களுக்கு அருகதையில்லையெண்டு கூட்டமைப்பாரைப் பாத்து அப்பிடிச் சத்தம் போட்டனீங்கள்?

**இ.தொ.கா.** :- ஆமா, இவங்களுக்கு என்ன அருகதை இருக்கு? எங்கட பிரஜாஉரிமை, வாக்குரிமையைப் பறிக்க வாக்குப் போட்டதே இவங்க ஆக்கள்தானே. அதே தமிழ்க் காங்கிரஸ்காறரோட சேந்துதானே இவங்க இப்ப கூட்டமைப்பைக் கட்டியிருக்கிறாங்க. தெரியாமத்தான் கேக்கிறங்க, இப்ப இவுங்களைப் கேக்காம நாம அரசாங்கத்தில சேந்துபுட்டோ மின்னு துள்ளிக் குதிக்கிறாங்களே! இவங்க மலையகத் தமுழருக்குத் துரோகஞ் செஞ்ச அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை தங்கட கூட்டமைப்புல சேர்க்கேக்க எங்களக் கேட்டா சேத்தாங்க? எங்கட முதுகில குத்தனவங்கள முதுகில ஏத்தி வைச்சுக்கின்னு எங்களப் பத்திக் கதைக்க என்னவே அருகதையிருக்கு இவுங்களுக்கு. அதவிட, இவுங்க மலையக மக்களுக்கு அப்பிடி என்னங்க செஞ்சு கிழிச்சிருக்கிறாங்க பேசிறதுக்கு? தங்கட பொங்குதமிழ இங்க வந்து நடத்த நிக்கிறாங்களே! நாம வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்காக எங்க சப்போட்டச் சொல்லியிருக்கோம். அத மிஞ்சி முழங்காலில நிக்கணுமுன்னு எதிர்பாத்தா முடியுமாங்க?

**கா.பூ** :- இனியும் இதில நிண்டா என்னால விலக்குப் பிடிக்க ஏலாது பாருங்கோ! அதனால.....வணக்கம்!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(23.09.2004 தொடங்கி 29.09.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், வியாழன், செவ்வாய், புதன், துலாம் - கேது, மேடம் - இராகு
கர்க்கடகம் - சனி, வெள்ளி, சிங்கம் - புதன்
சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில்நிலை உயர்ச்சி, பொருள்பேறு, செலவு மிகுதி, வெளியிட வாசம், அன்னியரால் தொல்லை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் பலிதம், செலவு, இனசன நன்மை, கௌரவம், பெரியோர் சகவாசம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் பகை ,மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, வீண் செலவு, கடன்படல், உத்தியோக முயற்சி, பெரியோர் நன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் இடர், மனக் கவலை, செலவு மிகுதி, வீண் குறை கேட்டல், அன்னியர் சகவாசம், பிரயாணக் கஷ்டம், உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**சிம்மம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் பலிதம், மன மகிழ்ச்சி, பண வரவு ,பிரயாணத் தடை, குடும்பக் கலகம், வீண் மனஸ் தாபம், தூரஇடப் பயணம், உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் அலைச்சல், மனக் கலக்கம், அன்னியர் சகவாசம், இனசன நன்மை, உத்தியோகச் சிரமம், மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் கலக்கம், பண விரயம், வீண் அலைச்சல், தூரஇடப் பயணம், உத்தியோகச் சிக்கல், மனக்குறையதிகம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் சகவாசம், முயற்சி பலிதம், உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 05

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் மந்தம், செலவு மிகுதி, காரியத் தடை, அன்னியர் உதவி, தேகசுகம் பாதிப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, காரியப் பேறு, வீடுமனை சேரல், உயர்ந்த நட்பு, உத்தியோக மகிழ்ச்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மாற்றம், பணக் கஷ்டம், இனசன மேன்மை, குடும்ப சுகம், உத்தியோகப் பேறு, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, மனக் குறை நீங்கும், உத்தியோக மந்தம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

கழுதையைப் படம் பிடித்துப் போடுமளவுக்கு என்ன நடந்துவிட்டதென்று நினைத்து விடாதீர்கள். கழுதையைப் போல் இருந்தாலும் சத்தியமாக இது நாய்தான். 33.2 செ.மீ. நீளமுள்ள காதைக் கொண்டிருக்கும் இந்த நாய்தான் உலகிலேயே நீளமான காதுடைய



# காது

நாய். ஜேர்மனியின் பிராங்போர்ட்டில் இருக்கும் இதன் பெயர் ஜாக். ஒட்டுக்கேட்டாலும் காது நீளமாகும் என்பார்கள். இந்த நாய் யார் பேசியதைக் கேட்டதோ!

# அழகு





மிஸ் ரீன் யூ.எஸ்.ஏ. பட்டம் வென்ற அமெரிக்காவின் லூஸியானாவைச் சேர்ந்த 17 வயது இளம் பெண் ஷெல்லி கெத்தரின், அழகு இராணியாக முடி சூடிய மகிழ்ச்சியை இப்படி வெளிப்படுத்தினார். இவர் மிஸ் யுனிவர்ஸ் போட்டியை நடத்தும் நிறுவனத்தின் சார்பில் சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுபவராம். ஏழை எளியோருக்கு உதவுகின்ற மனம் இருக்கின்ற எல்லோரும் அழகுதான். அந்த வகையில் இவர் இரட்டிப்பு அழகு.

ஹவாயில் பிறந்தவரும் அகே போனோ என்று அழைக்கப்படுவருமான சாட் றோவான் (ஐக்கிய அமெரிக்கா இராச்சியம் - வலது பக்கம் முகம் காட்டுபவர்) 1993ஆம் ஆண்டின் சுமோ மல்யுத்தத்தில் யோகோசுனா என்ற உயர் நிலை வீரராகத் தரம் உயர்த்தப்பட்டார். வெளிநாட்டவர் ஒருவர் இத்தகைய பட்டம் பெற்றமை இதுவே முதல் தடவையாகும்.

சுமோ மல்யுத்த வரலாற்றில் இவர்தான் அதி உயர்ந்த மனிதன். உயரம் என்ன தெரியுமா? ஆறு அடி 8 அங்குலம். அதாவது 2.04 மீற்றர். எடையிலும் விட்டுக் கொடுப்பாரா? அவரது எடை 227 கிலோ கிறாம். (501 இறாத்தல்). உண்மையில் அதி உயர்ந்த மனிதர் மட்டுமல்ல; அதிகம் கொழுத்த மனிதரும் கூட.




# மலைகள்



# பக்தி

பித்தம் தலைக்கேறிவிட்டால் பேஷன் எனும் பெயரில் இளசுகள் தலையைப் போட்டுப் படாதபாடு படுத்துவார்கள். இங்கே நடைபெற்று முடிந்த விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பக்தர் ஒருவருக்குப் பக்தி முத்தித் தலைக்கு ஏறிவிட்டது. மும்பையைச் சேர்ந்த இவ்விளைஞர் தனது தலையில் விநாயகர் உருவத்தைப் பதித்துக்கொண்டது போல் முடியை வெட்டிக்கொள்கிறார். பக்தி இருக்கத்தான் வேண்டும். அதற்கு இப்படியா......



# ஓட்டம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் வில்லியம்ஸ் சாலையில் நடைபெற்ற ஆண்டுக்கான ஓட்டப் போட்டியில் பெருந்திரளானவர்கள் பங்கு கொண்டனர். போண்டி கடற்கரை வரையிலான 14கி.மீ தூரத்துக்கான இந்த ஓட்டப் போட்டிதான் உலகிலேயே மிகவும் அதிகமான அளவில் வீரர்கள் பங்கேற்ற ஓட்டப் பந்தயம் எனப் பதிவாகியுள்ளது. வேகமான ஓட்டப் போட்டி வீரர் ஒருவரால் இத் தொலைவை 40 நிமிடங்களில் கடக்க முடியுமாம். மொத்தம் எத்தனை பேர் பங்கேற்றனர் தெரியுமா? 64 ஆயிரம் பேர்.


## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி யதுசா உமாபதி

14.09.2004



அனந்தர் புளியங்குளத்தைச் சேர்ந்த திரு - திருமதி உமாபதி(காந்தி) - ரேணுகா தம்பதிகளின் செல்வப் புதல்வி யதுசா (சுவிஸ்) தனது இரண்டாவது பிறந்தநாளை 14.09.2004 அன்று சுவிஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரது அப்பா - அம்மா, இலங்கையில் வசிக்கும் பூட்டன் - பூட்டி, அம்மப்பா - அம்மம்மா, ராசன் சித்தப்பா - வேணுகா சித்தி (லண்டன்), கவி மாமா, ஆசையப்பா - ஆசையம்மா, மயில்வாகனம் பெரியப்பா குடும்பம் (இலங்கை), துரைசிங்கம் மாமா மங்கையற்கரசி குடும்பம் (ஜேர்மனி), சின்னப்பிள்ளை குடும்பம், நகுலன் குடும்பம் (இலங்கை), குலசேகரம் குடும்பத்தினர், செந்தமிழ்ச்செல்வன் பெரியப்பா குடும்பம்(இலங்கை), சிவலிங்கம் மாமா குடும்பம் (இலங்கை), சின்னக்கிளி அத்தை, தீபன் (லண்டன்), அம்மம்மா, ராணி, ராகினி, சித்தி, சுதன் சித்தப்பா (நெதர்லாந்து), அகிலன் பெரியப்பா குடும்பம் (நெதர்லாந்து), கண்ணன் மாமா குடும்பத்தினர் (நெதர்லாந்து), ராசா அப்பப்பா குடும்பத்தினர் (சுவிஸ்) மற்றும் அப்பப்பாமார், அம்மம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் யதுசாவை பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:- அப்பா (காந்தி), சுவிஸ்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



பிரான்ஸில் வசிக்கும் ஜெயரூபன் - சிவாஜினி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஜென்சிகா தனது முதலாவது பிறந்தநாளை 18.09.2004 அன்று பிரான்ஸின் தலைநகர் பரிஸில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். [illegible]

18.09.2004

### செல்வி ஜென்சிகா

[illegible]

தகவல்: பெரியப்பா [illegible]